VISIT…

சிவாஜி!

இந்தப் பெயர் தமிழகத்தில் நேற்று வரை நடிகர் திலகம் அவர்களோடு மட்டுமே பெருமை கொண்டிருந்தது. இன்று அந்தப் பெயருக்கு ஒரு புது பரிமாணம் கிடைத்திருக்கிறது.

ஒரு மாநிலத்தின் தேர்தல் முடிவை எதிர்பார்ப்பது போல பல லட்சம் மக்கள் ஒரு திரைப்படத்துக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

அது ரஜினிகாந்தின் 'சிவாஜி'!

சிவாஜிராவ் என்ற இளைஞன் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஆகி, இன்று 'சிவாஜி'யாக அறியப்படுகிற நிலை வரையிலான மாற்றங் களை எத்தனையோ பேர் எத்தனையோ கோணங்களில் தொட்டுப் பார்த்திருக் கிறார்கள். ஆனால், ஒரு சிகரத்தின் எல்லா அங்குலங்களையும் முழுமையாகத் தொட்டு முடித்துவிட்டதாக யாரும் சொல்ல முடியுமா?

'கௌரவம்' படத்தில் 'ரஜினிகாந்த்' என்ற பாத்திரமாக நடித்துச் சிறப்பித்தார் சிவாஜி.

இன்று ரஜினிகாந்த் 'சிவாஜி' என்ற பாத்திரமாக நடிக்கிற ஆச்சர்ய ஒற்றுமை..!

'ரஜனி' என்ற சொல்லுக்கு - இருட்டு, ஸ்த்ரீ, காய்ந்த மஞ்சள், மண்கலம் என்றெல்லாம் அர்த்தம் சொல்கிறது வடமொழி அகராதி. இதில், கறுப்பையே தன் கவர்ச்சியாகக் கொண்டதால்தான் 'இரவின் நாயகன்' என்ற பொருள்பட 'ரஜினிகாந்த்' என்ற பெயர் வந்தது ரஜினிக்கு!

‘ஸ்டைல்’ என்ற வார்த்தைக்கும் அகராதியில் அர்த்தங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனால், தமிழக சினிமா ரசிகர்களுக்கு ஒரே அர்த்தம் - அது ரஜினி!

வருவாரா, மாட்டாரா என்று ஒருபக்கம் அரசியல்வாதிகள் பார்த்துக்கொண்டும் பயந்துகொண்டும் இருக்க... என்றைக்கும் அவர் எங்கள் ‘சூப்பர் ஸ்டார்’ என்று ரசிகர்கள் கொண்டாடி வரவேற்க...

சூப்பர்மேன், ஸ்பைடர்மேன் என்ற எல்லாக் கற்பனை மேன்களையும்விட குழந்தைகளை அதிகம் வசீகரிக்கும் சிம்பிள்மேன்தான் ரஜினி!

கதைக்கு ஏற்ற ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி, அந்தப் பாத்திரத்தை தங்கள் வேடமாக ஏற்றுப் புகழடைந்த நடிகர்கள் எத்தனையோ பேர். ஆனால், சார்லி சாப்ளின் அதில் விதிவிலக்கு! கடைசி வரை அவர் நடித்த படங்களில், கதை எதுவாக இருந்தாலும் அதில் ‘சார்லி சாப்ளினாகவே’ வருவதுதான் அவர் சிறப்பு!

காரணம் - அவருக்கென்று ஒரு குணாதி சயத்தை வகுத்துக் கொண்டு, அவரை அவராகவே பார்க்கிற அளவுக்கு காதலை அவர் மீது வளர்த்துக் கொண்டிருந்தார்கள் ரசிகர்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அப்படியொரு தனிப்பட்ட இமேஜை முதன் முதலில் உருவாக்கிக் காட்டியவர் எம்.ஜி.ஆர்.! ரிக்ஷாக்காரனோ, காவல்காரனோ, படகோட்டியோ... அங்கே பாத்திரத்தைப் பார்ப்பதைவிட எம்.ஜி.ஆரைத்தான் மக்கள் பார்த்தார்கள். அதுவேதான் ரஜினியின் முழுமுதல் பலமும்!

ரஜினி குடியிருந்த பழைய வீடு...

சினிமாவில் நடிப்பது என்ற லட்சி யத்தோடு கர்நாடகத்திலிருந்து வந்து சென்னைக்குள் கால் பதித்த முரட்டு இளைஞன் சிவாஜிராவ்... "நடிகர் திலகம் சிவாஜிதான் என் லட்சிய பிம்பம். என் அசைவுகளில் அவருடைய பாதிப்பைத் தவிர்க்கவே முடியாது" என்று சொன்னவன்... இன்று அந்த 'சிவாஜி'யின் பெயர் கொண்ட படத்திற்கு நாயகனாக நிற்கிற நேரத்தில்...

வெளிவராத தகவல்கள், பார்க்கப்படாத கோணங்கள், அறிந்திராத அவரது முகங்கள் என்று ரஜினியைப் பற்றி இதுவரை யாருக்கும் தெரியாத முகங்களைத் தேடிப் புறப்பட்டோம்.

இன்று...

ரஜினியை படிப்படியாகச் செதுக்கிய சிற்பிகள் நம்மோடு பேசப் போகிறார்கள்.

சிலிர்ப்பு, சோகம், பாசம், பாய்ச்சல், அதிர்ச்சி, ஆத்திரம் என்று ரஜினியின் பார்க்காத முகங்களை இங்கே பார்க்கப் போகிறோம் -

ஃப்ளாஷ்பேக்:

‘36/1, புதுப்பேட்டை கார்டன் தெரு, ராயப்பேட்டை, சென்னை.’

-“வாழ்க்கைத் தேடி, வாய்ப்புத் தேடி நானும் ரஜினியும் எங்கள் ஆரம்ப நாட்களைக் கழித்த விலாசம் இதுதான்” என்று துவங்குகிறார் விட்டல். ரஜினியின் 34 ஆண்டுகால நண்பர்!

ரஜினியுடன் விட்டல், சதீஷ், கே.நட்ராஜ்...

‘அபூர்வ ராகங்கள்’ முதல் ‘தில்லுமுல்லு’ வரை சென்னை ராயப்பேட்டையில் விட்டலுடன்தான் ரஜினி தங்கியிருந்தார். ரஜினியின் சில படங்களில் விட்டலும் நடித்திருக்கிறார். நெருங்கிய நண்பரான விட்டலை தனது ‘படையப்பா’ படத்தின் மூலம் தயாரிப்பாளர்களில் ஒருவராக்கி அழகு பார்த்தார் ரஜினி. இப்போது ரஜினியை அவரது நண்பர் விட்டல் ‘தலைவர்’ என்றே மனம் உருக விளிக்கிறார்.

“ராயப்பேட்டையில், மியூசிக் அகாடமிக்குப் பின்னால்தான் அந்த வீடு... எங்கள் பிரம்மச்சர்ய சாம்ராஜ்யம். மூன்று ரூம்கள், பெரிய ஹால், வெளியே கார் நிறுத்துகிற ஷெட்கூட உண்டு. வாடகை எவ்வளவு தெரியுமா... 115 ரூபாய்!” என்று சொல்லத் துவங்கினார் விட்டல்...

ரஜினியுடன் விட்டல் இன்று ...

“அப்போது - 1974-75-ல், தரமணியில் இருக்கும் பிலிம் இன்ஸ்டிடியூட் கிடையாது. சென்னை அண்ணா சாலையில், சௌத் இந்தியன் பிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் பிலிம் இன்ஸ்டிடியூட் என்று இயங்கிக் கொண்டிருந்தது. அதில்தான் நாங்கள் படித்துக் கொண்டிருந்தோம். மூன்று மாதத்துக்கு ஒரு முறை 500 ரூபாய் ஃபீஸ் கட்டவேண்டும். அந்தக் காலத்தில் 500 ரூபாய் என்பது ரொம்பப் பெரிய விஷயம். ரஜினி பலமுறை பணம் கட்டமுடியாமல் தவித்திருக்கிறார். இன்ஸ்டிடியூட் பிரின்ஸ்பாலாக இருந்த ராஜாராம்தாஸுக்கு ரஜினி மீது தனியான கவனமும், அதிக ஈடுபாடும் இருந்தது. அவரே ரஜினிக்காக சில தடவை பணத்தைக் கட்டியிருக்கிறார். பிற்பாடு அவர் மிகப்பெரிய அளவில் புகழ் பெற்ற பிறகு ராஜாராம்தாஸுக்கும் ரஜினிக்குமான தொடர்பு இடையில் கொஞ்சம் விட்டுப் போய்விட்டது.

திடீரென்று ராஜாராம்தாஸ் இறந்து போன செய்தி கேட்டபோது ரஜினி ரொம்பவே இடிந்து போனார். க்ரீன் கார்ட் ஹோல்டர் என்ற அந்தஸ்தையும் பெற்று அமெரிக்காவில் இருந்தவர் ராஜாராம்தாஸ். அவர் இறந்ததால் குடும்பம் தவித்து நின்றது. அப்போது ரஜினி ஓடோடிப் போய் நின்றார். அந்தக் குடும்பத்துக்கு அந்த நேரத்தில் தேவைப்பட்ட உதவிகளை ஒரு மூத்த மகனாகவே நின்று செய்தார் ரஜினி. இன்ஸ்டிடியூட்டில் படிக்கும்போது ரஜினியின் அண்ணன் சத்யநாராயண ராவ் அனுப்பும் பணம் ரஜினியின் சிகரெட் செலவுக்கே சரியாகப் போய்விடும். அப்போது பிரிஸ்டல் என்ற சிகரெட்தான் அவரைக் கவர்ந்தது. ஊதுகிற ஸ்டைலை எட்ட நின்று ரசிப்போம் நாங்கள். ரஜினியின் தேவைகளுக்காக அவரது நண்பர் ராஜ்பகதூரும் பணம் அனுப்புவார். இந்த ராஜ்பகதூர் பெங்களூரில் ரஜினி கண்டக்டராக பணியாற்றியபோது அதே பஸ்ஸில் டிரைவராக இருந்தவர். அவர் அனுப்பி வைத்த பணமும் கூட ரஜினியின் கஷ்டத்தை ஓரளவு குறைத்ததே தவிர, முழுசாகத் தீர்க்கவில்லை. அந்தமாதிரி நேரங்களில், தான் கடும் பசியுடன் இருந்தாலும் அதை அவர் வெளியே காட்டிக்கொள்ள மாட்டார். கடகடவென்ற பேச்சும், வெடிச் சிரிப்புமாக இருப்பார். உள்ளே பசி அவரைக் கொஞ்ச கொஞ்சமாகத் தின்று கொண்டிருக்கும். ‘எந்த சூழ்நிலையிலேயும் நம்ம கஷ்டத்தைச் சொல்லி, அடுத்தவங்க சந்தோஷத்தைக் கெடுத்துடக் கூடாது, விட்டல்’ என்பது ரஜினி அடிக்கடி சொல்கிற வார்த்தை.

ரஜினி மந்திரம்...



ஓம் ஸஹனா வவது ஸஹ நௌ புனக்து

ஸஹவீர்யம் கரவாவஹை

தேஜஸ்வினா வதீதவஸ்துமா

வித்விஷாவஹை

ஓம் சாந்தி.... சாந்தி.. சாந்தி...

- இதுதான் ரஜினி தினம் பூஜையறையில் தவறாமல் உச்சரிக்கும் மந்திரம்.

இதன் அர்த்தம் - பிரம்மம் நம்மை பாதுகாக்கட்டும்... பிரம்மம் நம்மிடம் கருணை செலுத்தட்டும். நாம் இணைந்து செயல்படுவோம். நமக்கு ஞானம் பிறக்கட்டும்... நாம் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவோம்!

அப்போது, மவுன்ட் ரோட்டில் எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களின் மெகா சைஸ் கட்-அவுட்டுகள் வைக்கப் பட்டிருக்கும். பசியை மறக்க பராக்கு பார்த்துக்கொண்டு நாங்கள் ரோட்டில் நடந்துகொண்டே இருக்கும்போது, அந்த கட்-அவுட்டுகளை அண்ணாந்து பார்த்து, 'டேய், விட்டல்! நமக்கெல்லாம்கூட இந்த மாதிரியெல்லாம் ஒருநாள் கட்-அவுட் வைப்பாங்களாடா?' என்று வெகுளித்தனமாகக் கேட்பார். 'நிச்சயமா வைப்பாங்க!' என்று நான் சொல்லும்போது, 'நீ சும்மா ஒரு ஆறுதலுக்குச் சொன்னாலும் பரவாயில்லைடா. எனக்கு நெஞ்சு நிறைய நம்பிக்கை இருக்கு' என்றபடி என்னை இறுக அணைத்துக் கொள்வார்.

சில நாட்கள் இரண்டு வேளை, மூன்று வேளைகூட பசியோடே கழியும். ரூமுக்குள் தொங்குகிற எல்லா சட்டை பேன்ட்டிலும் கைவிட்டுத் துழாவிப் பார்த்து ஓய்ந்துவிடுவோம். ஒருநாள் கையில் வெறும் சில்லறைக் காசு மட்டும் இருக்க, 'நீ எவ்வளவு பசியும் தாங்குவே! என்னால முடியலைப்பா' என்று நான் கண் கலங்கிச் சொன்னேன். 'நோ விட்டல்! கவலைப்படக் கூடாது. நமக்குத்தான் மெட்ராஸ்ல இருக்கவே இருக்காரே ஒரு அப்பா. வா அவர்கிட்டே போகலாம்' என்று என் தோளில் கை போட்டு இழுத்துக் கொண்டு, டிரைவ் இன் ஓட்டலுக்கு ரஜினி கூட்டிப் போனார். அப்போது அங்கே சர்வராக இருந்த நாராயணராவைத்தான் நாங்கள் அப்பா என்று செல்லமாய் அழைப்போம். எங்கள் தலையைப் பார்த்ததும், அவரும் ஓடி வந்தார். ரஜினி, 'தோ பாருங்கப்பா! எங்ககிட்டே வெறும் சில்லறைக் காசுதான் இருக்கு. எனக்கில்லாட்டியும் பரவாயில்லை. இவனுக்கு நாலு இட்லியாவது ஏற்பாடு பண்ணனும் நீங்க' என்று கையை விரித்து சில்லறையை காட்ட... நாராயணராவ் கலங்கிப் போனார்.

நாராயணராவ்

‘போங்கடா அசட்டுப் பசங்களா! உங்களுக்கு என்ன வேணுமோ முதல்ல கேட்டுச் சாப்பிடுங்க. அப்புறம் காசு பத்தி பேசலாம்’ என்றபடி எங்களை வயிறார சாப்பிட வைத்தார். பில்லை மட்டும் தரவேயில்லை.

பொதுவாகவே அங்கே வேலை பார்க்கிற சர்வர்கள் வேண்டிய மட்டும் தங்களுக்கோ தங்கள் உறவினர்களுக்கோ உணவை அங்கே எடுத்துக் கொள்ளலாம் என்பதும், மாசக் கடைசியில் அதற்கான தொகை அவர்கள் சம்பளத்தில் பிடிக்கப்படும் என்பதும் ரொம்ப நாளைக்குப் பிறகுதான் எங்களுக்குத் தெரிய வந்தது.

அந்தப் பெரிய மனுஷன் நாராயணராவ் பிறகு கர்நாடகாவில் இருக்கும் உடுப்பிக்கே திரும்பிப் போய்விட்டார். அவர் உதவி என்று கேட்டு ரஜினியிடம் வந்து நிற்கவில்லை. ஆனால், அவர் கஷ்டப்படுகிறார் என்பது ரஜினி காதுக்கு ஒருநாள் தானாகவே வந்து சேர்ந்தது. நாராயணராவ் பெயரில் ரஜினி ஒரு தொகையை பிக்சட் டெப்பாசிட்டில் போட்டு வைத்திருக்கிறார். அவர் மகனுக்கும் கை நிறைய சம்பளம் வாங்குகிற மாதிரி ஒரு இடத்தில் நல்ல வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

ஆயிரம்தான் சொன்னாலும்... கஷ்ட காலத்தில் வாழ்ந்த வீட்டை திரும்பப் போய் பார்ப்பதில் உள்ள சுகமே தனிதான். ரஜினியும் நானும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அந்த ராயப்பேட்டை வீட்டுக்குப் போய்ப் பார்ப்போம். சமீபத்தில் என் அண்ணன் மகன் கல்யாணத்திற்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக அங்கே போயிருந்தேன். நாங்கள் இருந்த இடமே மொத்தமாக மாறிப் போயிருக்கிறது. வீடும் ரஜினி மாதிரியே பிரமாண்ட வளர்ச்சி கண்டு, கலர்ஃபுல் அபார்ட்மென்டாக காட்சி அளிக்கிறது.

பசியும் பட்டினியுமாக இருந்தாலும் நம்பிக்கை தளராமல் உற்சாகத்தோடு ரஜினி வளைய வந்த அந்த வீட்டிலிருந்து, சினிமா சான்ஸ் கிடைத்த உடனேயே அவர் கிளம்பிவிடவில்லை... ‘அபூர்வ ராகங்கள், மூன்று முடிச்சு’ என்று அடுத்தடுத்து படங்கள் வந்தபோது... அவரைச் சந்திக்க நிறைய சினிமா ஆட்கள் வர ஆரம்பித்தார்கள்.

ரஜினிக்காக அங்கே நாங்கள் செய்த மாற்றங்களும், ஓரளவு காசு புழங்கிய அந்த நேரத்தில் அடித்த லூட்டிகளும்...”

- நினைவு ஆல்பத்தை விட்டல் இன்னும் அகல விரித்த போது... நமக்கும் அடக்க முடியாத புன்னகை பிறந்தது!

அதுதான்...

தானும் ரஜினியும் அளவில்லாத கனவுகளோடு சேர்ந்து வசித்த ராயப்பேட்டை வீட்டைப் பற்றி சொல்லும்போதெல்லாம் விட்டலின் கண்கள் கலங்கிப் பனிக்கின்றன.

“கிருஷ்ண பகவான், ‘நீ எதை நினைக்கிறாயோ... அதுவாகவே ஆகிறாய்’னு சொல்லியிருக்கிற வார்த்தைகளுக்கு ரத்தமும் சதையுமான உதாரணம்தான், ரஜினி! காய்ந்து போன வயிற்றைத் தடவியபடி அந்த வீட்டின் கூரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டு வளையம் வளையமாகப் புகை விட்டபடி ரஜினி கண்ட கனவுகள் எல்லாமே ‘அபூர்வ ராகங்கள்’ படத்துக்கு அப்புறம் படிப்படியாக நிறைவேற ஆரம்பிச்சது.



‘அபூர்வ ராகங்கள்’ படம் ஷூட்டிங் நடந்துகொண்டிருந்த சமயத்திலேயே, பாலச்சந்தர் சாருக்கு ரஜினி மேலே அசைக்க முடியாத நம்பிக்கை வந்திருந்தது. ‘இந்தப் படத்தில் வருகிற நடிகர்-நடிகைகளிடம் மிக வித்தியாசமான - இயற்கையான நடிப்பை எதிர்பார்க்கலாம். முக்கியமாக, இதில் அறிமுகமாகும் ரஜினிகாந்த் என்கிற புதுமுகத்திடம் நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்கலாம்’ அப்படினு ஒரு பேட்டி கொடுத்தார் பாலச்சந்தர். அதைப் படிச்சிட்டு ரஜினி, ‘டேய் விட்டல்! அவர் எவ்வளவு பெரிய மனிதர். என் மேலே அவர் வச்சிருக்கிற நம்பிக்கை பொய்யாப் போயிடக் கூடாதுடா! அதைத்தான் நான் ராகவேந்திர சாமிகிட்டே வேண்டிக்கறேன்’ என்று புருவம் பளிச்சிடச் சொன்னார்.

பாலச்சந்தர் சாரின் நம்பிக்கை பொய்க்கலை. அந்தப் படம் ரஜினி மீது மக்கள் கவனத்தைத் திருப்பியது. அடுத்து ‘மூன்று முடிச்சு’ வந்த பிறகு ரஜினியைத் தேடி அந்த வீட்டுக்கு நிறைய சினிமாக்காரர்கள் வர ஆரம்பித்தார்கள். கொஞ்சமாவது கவுரவமாக இருக்கட்டுமே என்று அந்த வீட்டின் மொட்டை மாடியில் இருந்த காலி இடத்தில் பிரம்புத் தடுக்கு வைத்து சுவர் அமைத்து, அதன் மேல் தென்னங்கீற்று வேய்ந்து கொஞ்சம் சேர்களையும் போட்டு வைத்தோம்.

மந்த்ராலயம்

அதான் ரஜினிக்கு வரவேற்பு அறை. ஓய்வு நாள் என்றால் அங்கே ஒரே பார்ட்டிதான். 'பிளாக் லேபிள்' வரும். மீன் குழம்பு மணக்க சாப்பாடு தூள் பறக்கும். கஷ்டப்பட்டபோது தனக்கு யார் யாரெல்லாம் உதவி செய்தார்களோ... அவர்களை எல்லாம் அப்போதே அங்கு அழைத்து உபசரிப்புகள் செய்ய ஆரம்பித்தார் ரஜினி. அவர்களையெல்லாம் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவே நிறைய நேரம் செலவிடுவார்.

இப்போதும்கூட ரஜினிக்குக் கிடைக்கிற அரிதான ஓய்வு நேரங்களில் அவரைப் பார்க்கிறபோது,

'விட்டல்! இப்படியெல்லாம் இருப்போம்னு அப்போ நினைச்சதில்லை. ஆனா, எப்படியெல்லாம் இருக்கணும்னு ஆசைப்பட்டோமோ அதெல்லாம் நடந்துடுச்சு. இப்பதான் என்னோட பொறுப்பு பலமடங்கு கூடியிருக்கு' என்பார்!

பொய் சொல்லி யாராவது உதவி பெற நினைத்தால் மட்டும் சட்டென்று அவர் முகம் இறுகிப் போகும். அன்று முதல் இன்று வரை அதை நான் பார்க்கிறேன். எதிராளி சொல்வது பொய் என்பதை, அவரது கூரிய கண்கள் பளிச்சென்று கண்டுபிடித்துவிடும். தலையைக் கோதியபடியே எதிராளியை வைத்த கண் வாங்காமல் பார்ப்பார். ஆனால், மனம் நோக எதுவும் சொல்ல மாட்டார்!

'என்னிக்காவது ஒருநாள் நிச்சயமா பெரிய ஆளா வருவேப்பா' என்று ரஜினியைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே இருந்தவர் எங்கள் ஹவுஸ் ஓனர் ஃபாத்திமா அக்தர். அவருக்கென்று ஒரு நல்ல மரியாதை, சென்னையில் கொஞ்சம் சொத்துக்கள் எல்லாம் உண்டு. அந்த சொத்துக்களில் ஒன்றுதான்-ரஜினி இப்போது போயஸ் கார்டனில் குடியிருக்கிற வீட்டு நிலம். வறுமையோடு சென்னையில் வாழ்க்கையைத் தொடங்கியதிலிருந்து... உலகம் முழுக்கத் தெரிகிற அளவுக்கு வளர்ந்த பிறகும்கூட ஃபாத்திமா அக்தருக்கும் ரஜினிக்குமான பந்தம் இப்படித் தொடர்ந்தது வியப்பு தான்!" - சொல்லி முடித்துவிட்டு, பழைய புகைப்பட ஆல்பங்களுக்குள் மூழ்கிப் போகிறார் விட்டல்.

விட்டலுக்கு மட்டுமில்லை... ரஜினியின் மிக நெருங்கிய நண்பர்களுக்குக்கூட அவர் மீது அளவில்லாத ஆச்சர்யத்தை ஏற்படுத்துவது, அவர் தூங்குகிற விதம்தான்! 'பாம்.. பாம்' என்று காதைப் பிளக் கிற வாகன ஓசையாக இருந்தாலும் சரி... ஷூட்டிங் நடத்துகிற ராட்சத ஜெனரேட்டர் இரைச்சலாக இருந்தாலும் சரி... ஓய்வு தேவை என்று நினைக்கிற போது, சட்டென்று கைகளைத் தலைக்கு அணைப்புக் கொடுத்து சுருண்டுப் படுத்துத் தூங்கி விடுவார் ரஜினி. பஞ்சு மெத்தையோ, சாதாரண பாயோகூட அவருக்குத் தேவைப்படுவதில்லை.

அருகில் போய் நின்று, 'சார், ஷாட் ரெடி' என்று சன்னமாக ஒரு குரல் கொடுத்தால் போதும்... படக் கென்று எழுந்து, முகம் நிறைய புன்னகையோடு, 'ஓ.கே.! நானும் ரெடி' என்று சிறுத்தையாக வேகம் காட்ட ஆரம்பித்துவிடுவார்.



ஏவி.எம். ஸ்டூடியோவில் 'பாட்ஷா' பட ஷூட்டிங்... இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவைப் பார்ப்பதற்காக போயிருந்தார் ஒரு டி.வி. நிருபர். ஷூட்டிங்கில் அடுத்த ஷாட்டுக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. ரஜினியைக் காணோம். ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு, ஃப்ளோருக்கு வெளியே நீண்டிருந்த சிமெண்ட் வாராவதி மீது வந்து உட்கார்ந்தார் அந்த நிருபர். பக்கத்தில் படுத்திருந்த நபரின் கால்கள் லேசாக அசைந்து தன் மீது பட... அந்தக் கால்களை அவர் ஒதுக்கினார். கைகளை தலைக்கு அண்டக் கொடுத்து படுத்திருந்த அந்த நபர், தலையை இந்தப் பக்கம் திருப்பி... கண்களைச் சுருக்கி நிமிர்ந்து பார்த்தார்...

அது ரஜினி!

ஆடிப் போனார் நிருபர்! கையிலிருந்த வாட்சைப் பார்த்தபடி எழுந்து ஷூட்டிங் ஸ்பாட் நோக்கி மின்னலாக நடக்க ஆரம்பித்த ரஜினியை திக் பிரமை பிடித்தாற்போல் பார்த்துக்கொண்டே இருந்தார்.

"மனசுல பாரமோ, பயமோ, குற்ற உணர்வோ இருக்கிறவன்தான் தூக்கம் வராமப் புரண்டுக்கிட்டே இருப்பான். களைச்சுப் போகிற அளவுக்கு உழைக்கத் தெரியாதவனுக்கு பஞ்சு மெத்தை இருந்தாலும் படுத்தா தூக்கம் வராது! நல்லவேளை நமக்கு அந்த பிரச்னை இல்லை. அந்த நிலைமை நமக்கு என்னிக்கு வருதோ... அன்னிக்குப் பழசையெல்லாம் மறந்து சோம்பேறி ஆயிட்டோம்னு அர்த்தம்" என்று சொல்லிச் சிரிப்பாராம்ரஜினி.

அவரை நன்கறிந்த ஒரு நண்பர் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு நம்மிடம் காட்டிய ஒரு புகைப்படம் ஆச்சர்யத்தை அள்ளிக் கொட்டுகிறது.

கட்டாந்தரை, ஒரு பழைய துணி விரிப்பு, உறைகூட மாட்டாத தலையணை... ஏகாந்தமான உறக்கத்தில் ரஜினி!

"ராகவேந்திர சாமிகள்தான் ரஜினியின் உயிர் என்பது உங்களுக்குத் தெரியும். பாபா குகைக்குப் போவது போலவே மந்த்ராலயத்துக்கும் சந்தடியில்லாமல் அடிக்கடி போய் வருவார் ரஜினி. கையில் ஒரே ஒரு தோள் பை. அதில் ஒரு செட் மாற்று டிரெஸ். போக வர பணம்... திடீரென்று மந்த்ராலயத்துக்குக் கிளம்பிவிடுவார் ரஜினி. சில வருடங்களுக்கு முன் அப்படிப் போயிருந்தபோது, மந்த்ராலயத்துக்கு வெளியே பயணக் களைப்பில் அவர் படுத்திருக்கிற காட்சியைத்தான் யாரோ ஒரு ரசிகர் நெகிழ்ந்துபோய் படமாக எடுத்துவிட்டார்!" என்று தான்

வைத்திருந்த அந்த புகைப்படத்துக்கான விளக்கமும் தந்தார் ரஜினியின் அந்த நண்பர். ஏகாந்தமான உறக்கத்தில் இருக்கும் ரஜினியின் அந்தப் புகைப்படம் தான் அட்டையில்!

திரை உலகில் அடுத்தடுத்து படங்கள் கிடைத்து, ரஜினியின் கிராஃப் ஏற ஆரம்பித்தபோது... அவர் தன் கடந்த காலத்தைப் பற்றி மூத்த பத்திரிகையாளர் ஒருவரிடம் துளிகூட ஒளிவு மறைவில்லாமல் பேசினார். அப்போதுதான், ராகவேந்திரா பித்தராக அவர் மாறியதற்குப் பின்னால் இருக்கும் சிலிர்ப்பான கதையையும் சொன்னார் -

“என் சின்ன வயசுலயே அம்மா ராம்பாய் இறந்து போய்ட்டாங்க. தாய்ப் பாசம் கிடைக்காத ஏக்கம் எனக்கு ரொம்பவே உண்டு. என் பெரிய அண்ணியைத்தான் அம்மாவா நினைச்சு வளர்ந்தேன். என் அப்பா ரானோஜிராவ் ரொம்ப ரொம்ப டஃப் மேன்! அதேசமயம், என் பெரியண்ணன் சத்ய நாராயணராவ், சின்னண்ணன் நாகேஸ்வரராவ் ரெண்டு பேரையும்விட என் மேலே அவருக்கு ரொம்பப் பாசம். ஆனா, அதை வெளியே காட்டிக்க மாட்டாரு” என்ற ரஜினி...

தவறான சகவாசம் காரணமாக படு முரட்டுப் பயலாகவே வளர்ந்தபோது, பெங்களூர் ராமகிருஷ்ணா மிஷன் ஸ்கூலில் சேர்ந்ததையும்... அதைத் தொடர்ந்து கொஞ்சம் நிதானத்துக்கு வந்ததையும் அந்த மூத்த பத்திரிகையாளரிடம் நெகிழ்வோடு பகிர்ந்து கொண்டார்.

“அங்கேதான் எனக்குக் கடவுளைப் பற்றிய தெளிவான அறிமுகம், தியானத்தோட மகிமை எல்லாம் தெரிஞ்சுது. பள்ளிக்கூடத்தை நடத்தின துறவியான ராமச்சந்திர மகராஜ் எனக்கு எவ்வளவோ அறிவுரைகள் சொல்லியிருக்காரு. ஆதரவு கொடுத்திருக்காரு. ஆனா, விதி யாரை விட்டது? திரும்பத் திரும்ப என் அப்பா மனசு நோகிற மாதிரி சில விஷயங்கள் நடந்துபோச்சு. இதனாலே தப்பான சில நண்பர்கள் தூண்டுதலால் நான் சிக்கலில் மாட்டிக் கிட்டே இருந்தேன். ரோட்டுல போன ஒரு பொண்ணு எங்களை அவமானப்படுத்திட்டாங்கிற கோபத்தில் அவளை முறைச்சுகிட்டே ஃபாலோ பண்ணினோம். அது போலீஸ் கம்ப்ளெயின்ட் ஆகி, ஒருநாள் முழுக்க போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்த கசப்பான அனுபவம்கூட உண்டு.

‘சிவாஜிராவா... அவன் உருப்படாத பயலாச்சே’ என்று எங்கள் ஏரியாவான அனுமந்த நகரில் என் அப்பாவின் காதுபட பேசினவங்ககூட உண்டு. இதுனால என் அப்பாவும், அண்ணன்களும் என்னிடம் சரியாப் பேசுறதைக்கூட ஒரு கட்டத்தில் நிறுத்திட்டாங்க. ‘என்னை ஏன் யாரும் சரியாப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்க’ என்கிற வெறுப்பும் வேதனையும் என்னை பாடாய்ப்படுத்திச்சு. ‘நாம எதுக்கு உயிரோட இருக்கணும்’னு தோணிப் போச்சு. உலகத்தைப் பத்தி எதுவுமே தெரியாத வயசு. ஆனா, ‘இந்த உலகத்தில் நாம வாழத்தான் வேணுமா?’னு ஒரு வேதாந்த விரக்தி!

தற்கொலைக்கு நாள்கூட குறிச்சிட்டேன். கடைசி நாள்... எனக்கு ரொம்பப் பிடிச்ச நல்ல நண்பர் ரமேஷை பார்த்து மனசுக்கு ஆறுதலா நாலு வார்த்தை பேசிடலாம்னு போனேன். அப்ப ரமேஷ், எங்க ஏரியாவுல இருந்த அனுமார் மலைக் கோயிலுக்குப் போயிருந்தார். அங்கே அவரை நான் தேடிப் போனேன். நல்ல ஓவியரான அவர் ராமர்

படத்தை ஒரு சின்னப் பாறையில் வரைஞ்சுக்கிட்டிருந்தார். 'என்ன சிவாஜி... இந்தப் பக்கம்?'னு கேட்டார். என்னை அங்கே பார்த்த அவருக்கு ரொம்ப ஆச்சர்யம்!

'என்னமோ... உன்னைப் பார்க்கணும்னு நெனைச்சேன். வந்துட்டேன்' அப்படினு மட்டும் சொன்னேன். ஆனா, மனசு முழுக்க துக்கம் பொங்கிக்கிட்டே இருந்துச்சு. 'கொஞ்சம் வெயிட் பண்ணு. இந்த ஓவியத்தை முடிச்சிட்டு வந்திடறேன்'னு சொன்னார் ரமேஷ். நான் பாறைகள் மீதிருந்த ஓவியங்களை பராக்கு பார்த்துகிட்டே நடந்தேன். அதில் ஒரு பாறை... அதில் வெள்ளைத் தாடியும் காந்தக் கண்களுமாக ஒரு பெரியவர் படம் இருந்துச்சு. அது யார்னு அப்ப எனக்குத் தெரியாது! ஆனா, படத்தைப் பார்த்ததும் என் உடம்பு சிலிர்த்துப் போச்சு. அசையாம அங்கேயே நிக்கறேன். மெஸ்மரிசம் பண்ணது மாதிரி அவர் படத்தையே உத்துப் பார்க்கறேன். நம்பினா நம்புங்க... 'சிவாஜி... நீ ஏன் அநாவசியமா கவலைப்படுறே..? உன்னை யாரும் சரியா புரிஞ்சுக்கலைனு வருத்தமா? அதை என்கிட்டே விட்டுடு. உனக்கு எப்பவும் நான் துணையா இருப்பேன்' அப்படினு அந்த ஓவியம் வாயைத் திறந்து பேசுற மாதிரி உணர்ந்தேன்.

அது பிரமையா... இல்லை, என்னோட உள்உணர்ச்சிதான் அப்படி சமாதானம் சொல்லுச்சா? எனக்கு இன்னிக்கு வரையிலும் புரியாத புதிர் அது. ஆனா, என் மனசுல இருந்த குழப்பமெல்லாம் அந்த செகன்ட்ல காணாமப் போயிடுச்சு. அன்னிக்கு எனக்குள் வந்த தெம்பும் தெளிவும் இன்னிவரைக்கும் அப்படியே இருக்கு! என் பின்னாடி வந்து நின்ன ரமேஷ்கிட்டே, 'யாருப்பா இந்த புனிதர்'னு கேட்டேன். 'அடப்பாவி, இவரை யார்னு உனக்குத் தெரியாதா? இவர்தான் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள். மந்த்ராலயத்தில் வாழுற தெய்வம்' அப்படினு சொன்னாரு.

என் மனசுல இருந்த தற்கொலை உணர்வை மாத்திக்கிட்டேன். அதுக்கப்புறம் மூட்டை தூக்கி இருக்கேன், கண்டக்டர் வேலை பார்த்திருக்கேன்... செஞ்ச வேலையில் முழு ஈடுபாட்டோட இருந்தேன்.

நானெல்லாம் இப்படி நடிக்க வருவேன்னு கனவுலகூட நினைச்சுப் பார்த்ததில்லை. கர்நாடகா டிரான்ஸ்போர்ட் நடத்தின ஒரு டிராமாவில் திடீர்னு துரியோதனன் வேஷம் கொடுத்து நடிக்கச் சொல்லிட்டாங்க. முதல்ல பயமாத்தான் இருந்தது. நிறைய சிவாஜி சார் படம் பார்த்து, அவரை மாதிரியே ஸ்டைலா இருக்கணும்னு நினைச்சிருக்கேன். அந்த வேகத்துல மேடை ஏறிட்டேன். துரியோதனன் வேஷத்துல பிச்சு உதறிட்டேன். அடுத்தடுத்து அமெச்சூர் டிராமாவுல என்னை இழுத்து விட்டுக்கிட்டே இருந்தாங்க. அப்படித்தான் சினிமா ஆசை மெதுவா உள்ளே நுழைய ஆரம்பிச்சது. கண்டக்டர் வேலை முடிஞ்சு சாயங்காலம் வீட்டுக்கு வரும்போதெல்லாம் சினிமா பேனர், கட்-அவுட்களை வெறிக்கப் பார்ப்பேன்.

ஒருநாள், 'ஆனந்த் ராவ் சர்க்கிள்ல யாரோ ஒரு டாக்டரோட மகன் உடம்புல ராகவேந்திர சாமி ஆவி புகுந்திருக்காம். அந்தப் பையன் அருள் வாக்கு சொல்றது அப்படியே நடக்குதாம்'னு பேசிக்கிட்டாங்க. ராகவேந்திரர் ஆவி மனுஷங்க உடம்பில் புகுந்து இப்படியெல்லாம் பேசுமானு யோசிக்கிற பக்குவம் அப்ப எனக்கில்லை. நேரா, அங்கே போய் நின்னேன். அருள் வாக்கு சொன்ன இளைஞர் முன்னாடி நின்னு, 'சினிமால நடிக்க ஆசை. நான் மெட்ராஸ் போகலாமா'னு படார்னு கேட்டுட்டேன். கொஞ்சம்கூட யோசிக்காம, 'சுப மஸ்து'னு அருள் வாக்கு வந்தது. அப்படித்தான் நான் மெட்ராஸுக்கு மூட்டை கட்டினேன்!"

- இதுதான் அந்த மூத்த பத்திரிகையாளரிடம் ரஜினி பகிர்ந்துகொண்ட அனுபவம்.

"சினிமாதான்னு இல்லீங்க. என் வாழ்க்கையில் நடந்த, நடக்கிற, நடக்கப் போற எல்லாமே என்னை மீறின ஒரு சக்தியாலே நடக்கறதுதான். அதுல எனக்கு எந்த டவுட்டும் கிடையாது!" என்று இப்போதும் அடித்துச் சொல்கிறார் ரஜினி.

வெறியோடு கிளம்பிவந்து, பலநாட்கள் காத்திருந்து, கனவு நிறைவேறி... முதன்முதலாக ரஜினி கேமரா முன் வந்தபோது.... 'புற்றுநோய்' கதாபாத்திரத்துக்கு ஏற்ப அவருக்கு மேக்-அப் போட்டவர் சுந்தரமூர்த்தி. அந்த 'அபூர்வ ராகங்களில்' தொடங்கி, 'சந்திரமுகி' வரை லட்சோப லட்சம் இதயங்களைக் கவரும் விதமாக பல படங்களிலும் ரஜினிக்கு 'கெட்-அப்'களைக் கொடுத்து வந்திருக்கும் சுந்தரமூர்த்தி... திகைக்கத் திகைக்க நம் முன்னால் வைக்கும் தகவல்கள்தான் எத்தனை எத்தனை..! அதெல்லாம்...

ரசிகனின் பார்வையில்..!

கண்டக்டர் ரஜினியை ரசித்து ரசித்து... சூப்பர் ஸ்டாராக செதுக்கியதில் மிக முக்கியப் பங்கு ரசிகர்களுக்குத் தானே..! அவரை தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே வைத்து அழகு பார்க்கும் அவர்களின் அனுபவங்கள் எப்படி..?

ஈரோடு மாவட்டத் தலைமை ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத்தின் தலைவர் 'பைக்' முருகேஷ் முதலில் பேசுகிறார் -

"1982-ல் 'தனி காட்டு ராஜா' படத்தின் மூலமாக என் தலைவர் என்னை ஈர்த்து இழுத்தார். அப்போதிலிருந்து நான் ஈரோடு மாவட்ட ரசிகர் மன்றத் தலைவராக இருந்து வருகிறேன். அதுவரை நான் வீட்டுக்கு உருப்படாத பிள்ளையாக இருந்துவந்தேன்.

மன்றத் தலைவனாகி நான் என் தலைவரை முதல்முறை சந்தித்தபோது, உச்சியிலிருந்து பாதம் வரை அப்படியே பார்வையால் முழு ஸ்கேன் எடுத்தார். "என்ன பண்றே?" என்று கேட்டார். 'பைக் மெக்கானிக்' என்று சொன்னேன். "முதல்லே உன் வீட்டைப் பார், தொழிலைப் பார். அப்புறம்தான் சினிமாவெல்லாம் வெச்சுக்கணும், புரியுதா?" என்றார்.

ஒரு ரசிகன் தனக்காக மன்றம் திறக்கிறான்; அவன் மூலமாக நமது புகழை சொல்ல வைக்க வேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுத் தலைவர் எங்களை உற்சாகப்படுத்தவில்லை. அன்று அவர் சொன்ன வார்த்தையால்தான்... அதுவரை உருப்படாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த நான் புது மனிதனாக வாழ ஆரம்பித்தேன்.

'பாட்ஷா' படத்தின் பரபரப்பான வெற்றியைத்தொடர்ந்து, தலைவர் அரசியலுக்கு வருவார் என்று நாடே எதிர்பார்த்திருந்த நேரம். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ரசிகர் மன்றத் தலைவர்களைத் தன் வீட்டுக்கு ஆலோசனைக்காக அழைத்திருந்தார். என்னைப் பார்த்ததும், "என்ன முருகேஷ்... பாலிடிக்ஸ்ல நம்மைப் பத்தி இப்ப சூடா பேசுறாங்க. நீ இனிமே கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்" என்று தலைவர் எச்சரித்தார். எனக்கு அப்போது ஒன்றும்புரியவில்லை.

ஈரோடு மாவட்டத்துக்கு அப்போது ஐந்து அமைச்சர்களைத் தந்திருந்தார் அன்றைய முதல்வர் ஜெயலலிதா. அவர்களால் எந்த விதத்திலும் எனக்குத் தொந்தரவு வந்து விடக்கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வோடுதான் தலைவர் அப்படி சொல்லியுள்ளார் என்பது பிறகு தெரிந்தபோது, ரசிகனின் சொந்த வாழ்க்கை மீது அவருக்கு இருக்கிற கவனத்தைப் புரிந்துகொண்டு நான் பூரித்துப் போனேன்" என்கிறார் 'பைக்' முருகேஷ்.

அபூர்வ ராகங்கள், ஆறிலிருந்து அறுபது வரை, வேலைக் காரன், அருணாசலம், வீரா, பாட்ஷா, அண்ணாமலை, நாட்டாமை (இந்தி), முத்து, படையப்பா, பாபா, சந்திரமுகி என்று ரஜினிக்கு ஒப்பனைக்காரராக இருந்தவர் சுந்தரமூர்த்தி.

கமலுக்கும் ஏராளமான படங்களில் பர்சனல் மேக்கப்மேனாகப் பணியாற்றியவர்.

ரஜினியால் ஆரம்பத்தில் 'சார்' என்றும் இப்போது 'பெருசு' என்றும் அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி, தன் நினைவுப் படகை இங்கே பின்னோக்கிச்செலுத்துகிறார்-

"அடையார் காந்தி நகர்ல இருக்கு அந்த வீடு. அதன் பெரிய இரும்பு கேட்டைத் தள்ளிக்கிட்டு உள்ளே வந்து, 'பைரவி வீடு இதுதானே?'னு கேட்கிறதுதான் 'அபூர்வ ராகங்'களில் ரஜினியோட முதல் வசனம்! டைரக்டர் கே.பி. சார், 'டேய் சுந்தரம், இந்தப் படத்துல பைரவி கேரக்டருக்கு ஹஸ்பெண்டா நடிக்க ஃபிலிம் இன்ஸ்டிடியூட்லர்ந்து ஒரு பையனை வரவெச்சிருக்கேன். அதோ, அந்தப் பையன் நிக்கிறான், பாரு!' என்று ரஜினியை நோக்கிக் கைகாட்டினார். பார்த்ததுமே 'இதுவரை நாம சினிமாவுல தொட்டு மேக்-அப் போட்ட முகங்களில் இருந்து மாறுபட்ட முகம் இது'னு மனசுல பட்டுது. 'கேன்சர் பேஷன்ட்டா வர்றான் இந்தப் பையன். அதுக்கேத்த மாதிரி மேக்கப் போட்டுரு'ன்னாரு டைரக்டர். என்கிட்டே வந்ததும் என் கையைத் தொட்டுக் கும்பிட்டார் ரஜினி. ரெண்டு நாள் தாடியோட இருந்தார். அது பத்தாதுனு தோணுச்சு. இன்னும் கொஞ்சம் தாடி வளர்ந்திருக்கற மாதிரி ஒட்டிவிட்டேன். அவரே நல்ல கறுப்பு. இருந்தாலும், கண்ணுக்குக் கீழே நானும் கொஞ்சம் கறுப்பு வச்சேன். பழைய கோட் வந்தது. எடுத்து மாட்டிக்கிட்டு, கேட்டைத் தள்ளித் திறந்தார். அப்போதான் அவருக்கும் சினிமா உலகத்தோட கேட் அகலமா திறந்தது.



‘அபூர்வ ராகங்கள்’ டப்பிங் ஆரம்பிச்சது. கேம ராவுல ரஜினி முகம் பதிவான முதல் தருணம் மாதிரியே, சவுண்ட் டிராக்ல அவர் குரல் பதிவான முதல் நிமிஷத்துலயும் நான் பக்கத்துல இருந்தேன். டப்பிங் தியேட்டரோட ஸ்கிரீன்ல முதன்முதலா தன் முகத்தைப் பார்த்த பிரமிப்புல அப்படியே ரஜினி கிறங்கி நின்னுட்டாரு. தன்னோட பழைய நினைவுகளை அவர் சொல்ற மாதிரியான வசனம் அது. தமிழ் அப்பவே நல்லாத்தான் பேசுவாரு. ஆனா, என்னவோ... இடையிடையே வார்த்தை சிக்குது! பாலச்சந்தர் சார் டென்ஷன் ஆயிட்டாரு. ரஜினி சாரோட தோள்ல கையை வச்சுக்கிட்டு, ‘ஏன் தயங்குறே... பேசு, பேசு, பேசு’னு படபடத்தாரு. ரஜினி இன்னும் நெர்வஸ் ஆயிட்டாரு.

பாலச்சந்தர் சாரோட அசிஸ்டென்ட் டைரக்டராக சர்மா இருந்தாரு. அவருதான், ‘சார், நீங்க போய் பக்கத்து ரூம்ல உக்காருங்க. இவரை நாங்க தயார் பண்றோம்’னு சொல்ல... ‘நான் இல்லாம எப்படி?’னு கே.பி. சார் குரலை உயர்த்த... ரஜினி சார் இன்னும் தடுமாறிப்போய் பார்த்துக்கிட்டே இருந்தாரு. ‘இதோ பாரு... உன் முகத்துக்கு மட்டுமில்லே... உன் குரலுக்கும் ஒரு தனித்தன்மை இருக்கு. தமிழ் உச்சரிப்பு சரியா வரலைனு எல்லாம் தப்பிக்க முடியாது. டப்பிங் நீதான் பேசறே... இதுல மாற்றம் கிடையாது’னு பொரிஞ்சு தள்ளிட்டுப் போனாரு.

அவரோட கோபத்துக்குப் பின்னால, ஒரு திறமையைக் கண்டெடுத்த பெருமையும், அதை முழுசா பயன்படுத்திக்கணுமேங்கிற பதற்றத்துடன் கூடிய அக்கறையும் இருந்ததை என்னால நல்லா உணர முடிஞ்சது. டைரக்டர் கே.பி., அந்தப் பக்கம் போனப்புறம் அவர் இல்லாத தைரியத்துலயே ரஜினி அந்த டயலாக்கை ஒரே டேக்குல ஓகே பண்ணினாரு.

அதேமாதிரிதான் 'மூன்று முடிச்சு' படத்துலயும் ஒண்ணு நடந்தது. ஊர்லருந்து ரஜினி தன் வீட்டுக்கு வருவாரு. குளிச்சி முடிச்சிட்டு மாடிப் படியிலே இறங்கி வருவாரு. எதிர்ல ஸ்ரீதேவி வந்து, 'வாடா கண்ணா'னு ஒரு வசனம் பேசுவாங்க. ரஜினி ஷாக்காகி, 'நீ எங்கே இங்கே...'னு ஆரம்பிச்சுப் பேசணும். ரொம்ப பவர்ஃபுல்லான ஸீன் அது. காலை பதினொன்றரை மணிக்கு ஆரம்பிச்சு கே.பி. சார் திரும்பத் திரும்ப எடுக்கறாரு. திருப்தியே வரலை. ஒருகட்டத்துல 'பிரேக்'னு சொல்லிட்டுப் போயிட்டாரு. அதுக்கப்புறம் 'லஞ்ச்' பிரேக் முடிஞ்சி வரும்போது, ஒரே டேக்ல டைரக்டர் எதிர்பார்த்ததையும்விட பிரமாதமா நடிச்சு முடிச்சாரு ரஜினி.

இப்பகூட 'சந்திரமுகி' படத்துக்கு மேக்கப் போட்டுக் கிட்டிருந்தப்ப கால்மேல கால்போட்டு ரஜினி சார் உட்கார்ந்திருந்தார். திடீர்னு கே.பி. சார்கிட்டேயிருந்து போன் வர, உடனே பதறிக்கிட்டு எந்திரிச்சு நின்னுட்டாரு. பேசி முடிச்சதும், 'அது என்னமோ தெரியலை, பெருசு, கே.பி. சார் குரலைக் கேட்டாலே ஏதோ ஒரு டென்ஷன் வந்துடுது'னு சொல்லிச் சிரிச்சாரு.

தன்னோட நூறாவது படமான 'ஸ்ரீராகவேந்திரா' படத்துக்கு நான்தான் மேக்-அப் போடணும்னு ரஜினி கூப்பிட்டாரு. பொதுவா எஸ்.பி.முத்துராமன் சார் யூனிட்னா முத்தப்பா சார்தான் மேக்-அப் மேனா இருப்பாரு. அதையும் மீறி நான் எப்படி வர்றதுனு தயங்குனப்ப, எஸ்.பி.முத்துராமன் சார்கிட்டே கேட்டு, எனக்கு ஸ்பெஷல் அனுமதி வாங்கிட்டாரு ரஜினி.

என்னைப் பொறுத்தவரை, நான் மேக்-அப் போட்டதுலயே எனக்கு ரொம்பப் பிடிச்ச கெட்-அப் 'பாட்ஷா'தான்! கதை டிஸ்கஷன் நடக்கும்போது, அந்த கேரக்டரை நல்லா கவனிச்சு உள் வாங்கிக்கிட்டேன். ரஜினி சாருக்கு செட்டாகிற மாதிரி மூணுவிதமான ஸ்டைலில் தாடியை டிசைன் பண்ணி... மாத்தி மாத்தி வச்சுப் பார்த்து... வச்சதையே வெவ்வேற மாதிரி கட் பண்ணிப் பார்த்து... கடைசியா ரஜினி சாருக்குத் திருப்தி ஆன தாடி அது. அதேமாதிரி, இந்த கேரக்டருக்குக் கண்ணாடி போட்டாத்தான் நல்லாயிருக்கும்னு டைரக்டர்கிட்டேயும் ரஜினிகிட்டேயும் சொன்னேன். அந்தக் கண்ணாடியும் ரொம்ப வித்தியாசமா இருக்கணுமேனு யோசிச்சேன்.

தற்செயலா பி.பி.சி. சானலில் வர்ற ஃபேஷன் ஷோ நிகழ்ச்சியை பார்த்துக்கிட்டிருந்தேன். அதுல ஒருத்தரு ஃபிரேமே இல்லாம, காதுக்கான பிடிமானமே இல்லாம, வெறும் மூக்குல மட்டுமே பேலன்ஸ் பண்ணி, ஒரு வெள்ளைக் கண்ணாடியைப் போட்டுக்கிட்டு நடந்து வந்தாரு. அது என் மனசுல பளிச்னு பதிஞ்சு போச்சு. அதே மாதிரி ரஜினிக்கும் கலர் கண்ணாடி போட்டா, அவரோட பார்வையை மறைச்சு அந்தக் கேரக்டருக்கு ஏத்த மாதிரி க்ரூயலா காட்டும்னு நான் சொன்னதும், ரஜினியும் சுரேஷ்கிருஷ்ணா சாரும் ஏத்துக்கிட்டு ஓகே பண்ணிட்டாங்க. அப்புறமா நானே அந்த ஃபிரேம் இல்லாத கண்ணாடிய டிசைன் பண்ணுனேன். வெள்ளைக் கண்ணாடிக்குப் பதிலா 'பீக்காக் ப்ளூ' (மயில் நீலம்) கலர்ல அந்தக் கண்ணாடிக்கான மாடலைத் தயாரிச்சேன். அப்ப தி.நகர்ல பனகல் பார்க் பக்கத்துல இருந்த ஆங்கிலோ-அமெரிக்கன் ஆப்டிகல் கடைக்கு அந்த மாடல் கண்ணாடியை எடுத்துட்டுப் போனேன். அதே மாதிரி கண்ணாடி தயாரிக்க வச்சேன். கண்ணாடி கீழே விழுந்துடாம இருக்கறதுக்காக உள்ளே மெல்லிசா செல்லோ டேப் ஒட்டினேன். ஒரே ஒரு கண்ணாடியை எடுத்துட்டுப் போயி, அது ஷூட்டிங் ஸ்பாட்ல கீழே விழுந்து உடைஞ்சுட்டுதுன்னா என்ன பண்றதுன்னு முன்ஜாக்கிரதையா பத்துக் கண்ணாடிய பக்காவா ரெடி பண்ணிக்கிட்டேன்.

ஷூட்டிங்கின்போது இடையிடையே கண்ணாடி லேசா சரிஞ்சு விழத்தான் செஞ்சது. ஆனா, அதுக்காக ஷாட்டை கட் பண்ணச் சொல்லாம, கண்ணாடியைத் தன் விரலால அட்ஜஸ்ட் பண்றதையே ஒரு சூப்பர் ஸ்டைலா மாத்திட்டாரு ரஜினி!

'படையப்பா' படப்பிடிப்பில்...

அந்தப் படத்துல, அவர் தன் பக்கத்துல நாயை வெச்சுத் தடவிக் கொடுக்கற மாதிரி ஸீன் எடுத்தாங்க. ஸ்டைலா கோட்டோட முழுக்கையை மடிச்சுவிட்டுக்கிட்ட ரஜினி, தன் மணிக்கட்டு காலியா இருக்கறதைக் கவனிச் சாரு. 'சுந்தரமூர்த்தி! இந்த கேரக்டருக்கு ஏத்த மாதிரி முரட்டுத்தனமான டிசைன்ல ஒரு வாட்ச் உடனே வாங்கிட்டு வந்துடுங்களேன்'னாரு. ஹைதராபாத்ல ஷூட்டிங்... குடுகுடுனு ஓடிப்போய் டைமெக்ஸ் கம்பெனில ரெண்டாயிரம் ரூபாய்க்கு வாட்ச்சை வாங்கிட்டு வந்தேன். ரசிகர்கள் மத்தியில அந்த வாட்ச்கூட அப்புறம் பிரபலமாயிடுச்சு.

ரஜினியைப் பொறுத்தவரை 'மேக்-அப்போ, காஸ்ட்யூமோ இப்படித்தான் இருக்கணும்... அப்படித்தான் இருக்கணும்'னு சம்பந்தப்பட்ட கலைஞர்களிடம் வற்புறுத்த மாட்டாரு. பார்க்கறதுக்கு நல்லா இருக்கணும், அவ்வளவுதான்! நான் போட்ட மேக்-அப்லயோ, எடுத்துக்கொடுக்கற காஸ்ட் யூம்லயோ அவருக்கு ஏதாவது நெருடல் இருந்தாக்கூட, மனசு நோகிற மாதிரியோ வேகமாவோ ஒருநாளும் பேசமாட்டாரு. 'என்ன சுந்தரமூர்த்தி, மேக்-அப் கொஞ்சம் தூக்கலா இருக்குதோ..?'னு லேசா அபிப்பிராயம் கேட்கிற மாதிரிதான் கேட்பாரு.

'படையப்பா' படத்துல வர்ற ரஜினியோட தாடியும் ஃபேமஸ்... பல வருடங்களுக்கு முன்னாடி 'மார்ல்ப்ரோ' சிகரெட் விளம்பரத்துல பார்த்த தாடிவீரன் தோற்றத்தை 'ரெஃபரன்ஸ்'ஸா வச்சுக்கிட்டு அந்த வித்தியாசமான தாடியை அமைச்சேன்.

நான் மேக்-அப் போடும்போது வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட அவர் பேச மாட்டாரு. கண்ணை மூடிக் கிட்டிருப்பாரு. உதடு மட்டும் லேசா முணுமுணுக்கிற மாதிரி இருக்கும். ஆத்மார்த்தமா கடவுள்கிட்டே ஏதோ பிரார்த்தனை பண்ணிக்கிட்டிக்காருனு மட்டும் புரியும்.

'சந்திரமுகி'யில வேட்டைய புர ராஜா கேரக்டரை எப்படி வைக்கலாம்னு பேசும்போது, 'நல்ல நீளமாக முடிவச்ச விக் தயாரிச்சிடுங்க... இதுவரைக்கும் இல்லாத மாதிரி ஒரு குறுந்தாடி யோசிங்க'னு மட்டும்தான் சொன்னாரு.

நாலஞ்சு குறுந்தாடி செஞ்சு எடுத்துட்டுப் போயி காட்டினேன். பளிச்னு அந்த சின்ன தாடியை செலக்ட் பண்ணிட்டாரு. 'அந்தக் காலத்து ஜெமினியோட ராஜா படத்தை மனசுல வச்சு விக் ரெடி பண்ணியிருக்கேன்'னு காட்டினேன். 'சூப்பரா இருக்கு'னு ஓகே பண்ணிட்டாரு. ரிகர்சல் பாத்தப்ப, முடி அப்படியும் இப்படியும் அலைபாய்ஞ்சதே ஒரு அழகாத்தான் இருந்தது. கேமரா முன்னாடி நின்னு, 'ஆக்ஷன்' சொல்றதுக்குக் கொஞ்சம் முன்னாடி திடீர்னு, 'ஹேய்! ஒரு ரிப்பன்... ரிப்பன் இருந்தா கொண்டாங்க'னு கையை சொடுக்கினாரு. அசிஸ்டென்ட் டைரக்டர் ஓடிப் போய் ரிப்பனை தேடிப்பிடிச்சுக் கொண்டாந்ததும், சரக்குனு அதை எடுத்துப் பின்னாடி தொங்குன முடியை அள்ளி ஒரு முடிச்சுப் போட்டாரு ரஜினி. அந்த கெட்-அப்பைப் பார்த்தே நாங்க அசந்து போயிருக்க... நடுவுல அந்தக் குதிரைவால் முடியைத் தூக்கி முன்னாடி போட்டுக்கிட்டு, 'லக்கலக்கலக்க'னு நாக்கை ஆட்டி கண்ணைச் சிமிட்டினாரு பாருங்க... அப்பவே புரிஞ்சு போச்சு- இந்தப் படம் எல்லா ரெக்கார்டையும் உடைக்கும்னு!

தன்னம்பிக்கை உள்ள யாருமே தங்களை ரொம்ப ரசிக்கத்தான் செய்வாங்க. அது ரஜினியிடம் ரொம்பவே உண்டு. மேக்-அப் போடற அறையில் உள்ள பெரிய கண்ணாடி முன்னாடி நின்னு, தனக்குத் தோணுற மேனரிஸங்களை திரும்பத் திரும்ப செஞ்சு பார்த்துக் கிட்டே இருப்பாரு. 'மூன்று முடிச்சு' படத்துல சிகரெட்டைத் தூக்கிப் போடற அந்த ஸ்டைலை கண்ணாடி முன்னாடி நின்னுகிட்டு மணிக்கணக்கா பிராக்டிஸ் பண்ணிக்கிட்டே இருப்பாரு. அந்தத் தொழில் கவனம் இப்பவும் துளிகூட அவர்கிட்டே மாறாம இருக்கு. இப்பல்லாம், மறுநாள் காட்சிகளுக்கான வசனங்களை டைரக்டர் கிட்டே கேட்டு வாங்கிட்டுப் போயிடுறாரு. வீட்டுல ஒரு அறையில் பிரமாண்டமா கண்ணாடிகளை செட் பண்ணி வச்சிருக்காரு. அது முன்னாடி நின்னு பல்வேறு கோணங்களில் தன்னோட அசைவுகளைப் பார்த்துக் கிட்டே வசனத்தைப் பேசி, ஸ்டைல் பண்ணி ஒத்திகை பார்த்துக்கிட்டே இருப்பாராம்.

ஷூட்டிங் நடுவுல தன்னைச் சுத்தி நடக்கிற விஷயங்களைக் கவனிக்காத மாதிரிதான் தெரிவார். ஆனா, ஷார்ப்பா கவனிச்சுக் கிட்டிருப்பாரு. வாகினி ஸ்டூடியோவுல ஷூட்டிங் நடக்கும்போது லஞ்ச் பிரேக்ல வந்து ஒருத்தர் ஊறுகாய் வியாபாரம் பண்ணுவாரு. அவருக்கு கேன்சர்னு அங்கே இருந்தவங்க பேசிக்கிட்டது ரஜினி காதுல விழுந்துடுச்சு. அந்த நபர் ஒருநாள் அங்கே வந்தப்ப, அவரை மேக்-அப் ரூமுக்கு வரவழைச்சாரு ரஜினி. தாமதிக்காம போய் வைத்தியம் பண்ணிக்கச் சொல்லி கட்டாக ரூபாய் கொடுத்து அனுப்பினாரு. ரஜினியைப் பொறுத்தவரை, நியாயமான காரணங்கள் இல்லாட்டி அவர் உதவி செய்யவே மாட்டார். அதேசமயம், நிஜமாவே ஒருத்தர் தேவையில் இருக்காருனு தெரிஞ்சி அவருக்கு வாக்குறுதி கொடுத்துட்டா, அந்த நபர் தனக்கு வேண்டிய பணத்தை ரிசர்வ் பாங்கல பத்திரமா கொடுத்து வச்சிருக்கிற மாதிரி நினைச்சிக்கலாம். கரெக்டான நேரத்துக்கு வரவேண்டிய உதவி ரஜினிகிட்டேருந்து வந்தே தீரும்!

இன்னொரு விஷயம்... யாருக்குமே அவர் சிபாரிசு பண்ண மாட்டார். தன் விருப்பத்தை இன்னொருத்தர்கிட்டே திணிச்சு, அவருக்குத் தொந்தரவு தரக்

கூடாதுங்கறது அவரோட அசைக்கமுடியாத பாலிஸி!”

-இது சுந்தரமூர்த்தியின் அனுபவச் சுருக்கம். இவரைப் போலவே, சினிமா உலகில் ரஜினி தனி மரியாதை கொடுத்துத் தன் இதயத்தின் அருகில் வைத்திருக்கும் பிரபலம் ஒருவர் உண்டு. அந்த நெருக்கமும் அதன் பின்னணியும்...

ரசிகனின் பார்வையில்...

சேலம், நாமக்கல் மாவட்ட ரஜினி ரசிகர் நற்பணி மன்றத்தின் மாவட்ட செயலாளர் சக்திவேல் சொல்வது-

“மன்ற வேலைகள் பார்க்கிறேன்னு அடிக்கடி லீவ் போட்டேன். இதனால், நான் பார்த்துக்கிட்டிருந்த போஸ்ட் ஆபீஸ் வேலையிலிருந்து என்னை வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. இந்த விஷயம் எப்படியோ ரஜினிக்குத் தெரிஞ்சி, என்னை மெட்ராஸுக்கு வரச்சொன்னார். அவர் முன்னாடி நான் போய் நின்னதும் உரிமையா, கடுமையா திட்டினார். ‘இந்தக் காலத்துல ஒருத்தன்கிட்ட பணம் இருந்தாத்தான் ஊரே அவனை மதிக்கும். அடுத்தமுறை என்னைப் பார்க்க வரும்போது, நீ நல்ல வேலையில் இருக்கணும். இல்லாட்டி என்னைப் பார்க்கவே வராதே’னு பொரிஞ்சு தள்ளுனாரு. நான் தலை குனிஞ்சு நின்னேன். சொல்றதையெல்லாம் சொல்லி முடிச்சிட்டு, அன்னிக்குத் தன்னோடவே உட்காரவச்சு என்னை வயிறு நிறைய சாப்பிட வச்சுத்தான் ஊருக்கு அனுப்பினாரு.

ஊர் திரும்புனதும் ஒரு தனியார் கம்பெனியில வேலை தேடினேன். அதை உடனே தலைவருக்குத் தெரியப்படுத்தினேன். அதுக்கப்புறம் சேலத்திலிருந்து எத்தனையோ பேரை மெட்ராஸுக்குக் கூட்டிட்டுப் போயி, தலைவரோட சேர்ந்து நிக்கவச்சுப் படம் எடுத்துக் கொடுத்திருக்கேன். என்னைப் பார்த்ததுமே, ‘வேலையெல்லாம் எப்படி இருக்கு?’னு கேட்டுக்கிட்டேதான் வந்து போட்டோவுக்கு போஸ் கொடுப்பாரு எங்க தலைவர்!”

ரஜினி என்ற விதையை இருட்டுக்குள்ளிருந்து எடுத்துவந்து விதைத்தது கே.பாலச்சந்தர் என்றால்... அந்த விதை முளைவிட்டு வில்லன் வேடங்களில் தொடர்ந்து நடித்து வந்தபோது, தைரியமாக அதற்கு ஹீரோ அந்தஸ்து கொடுத்து அடுத்தக் கட்டத்துக்கு வளர்த்துவிட்டவர் கலைஞானம். கதை-வசன கர்த்தாவான கலைஞானம், எதையுமே ‘பட்பட்’ என்று பேசிவிடக் கூடியவர். அந்தக் காலத்திலும் சரி... இப்போதும் சரி... அப்படித்தான்!

‘அருணாச்சலம்’ படத்துக்குத் தன்னையும் ஒரு தயாரிப் பாளராகப் போட்டு, தனது நன்றிக்கடனைச் செலுத்திய ரஜினி பற்றி... தன் அந்தநாள் நினைவுகளை இங்கே சொல்லத் துவங்குகிறார், கலைஞானம்-

“ஒரு சினிமாவுக்குத் தயாரிப்பாளராக இருப்பது என்பது எத்தனை சிரமமான, தவிப்பான விஷயம் என்பதற்கு என் கதையே நல்ல உதாரணம்.

'ஆறு புஷ்பங்கள்' படத்தில் ரஜினி பஸ் டிரைவர். விஜய குமார்தான் மெயின் ஹீரோ. அந்தப் படத்துக்கு நான்தான் கதை-வசனம்... படத்தோட ஷூட்டிங் தொடர்ச்சியா சென்னைக்கு அருகில் இருக்கும் கோவூர் என்ற இடத்துல நடந்துச்சு. நான் டெய்லி ஷூட்டிங் ஸ்பாட் போயிடுவேன். காரெல்லாம் வாங்குற அளவுக்கு ரஜினியோட நிலைமை இல்லை. வில்லனா நடிச்சு... ஒரு படத்துக்கு ஐயாயிரம்- பத்தாயிரம்னு சம்பளம் வாங்கிக்கிட்டிருந்தாரு. எங்காச்சும் போகணும்னாகூட டி.என்.ஆர்-4306 என்ற நம்பர் கொண்ட தன் ஸ்கூட்டர்லதான் போவாரு.

நான் தினமும் என் கார்ல போகும்போது, வழியில் அவர் தங்கியிருந்த ராயப்பேட்டை வீட்டுக்குப் போயி அவரை யும் கூட்டிக்குவேன். அவரோட கள் ளங்கபடம் இல்லாத பேச்சு, எதிர்காலம் பத்தி அப்பாவித்தனமா பகிர்ந்துக்கிற கனவுகள் எல்லாம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒருநாள் ஷூட்டிங் போறப்ப, 'சார்! நான் காரு ஓட்டக் கத்துக்க ஆரம் பிச்சிட்டேன். உங்க காரை ஓட்டிப் பார்க்கணும்'னு சொன் னாரு. என்னோட அம்பாஸ டர் காரை அவர்கிட்டே ஒப்படைச்சேன். கோவூர் போறவரைக்கும், அதேபோல ஷூட்டிங் முடிஞ்சி ராயப் பேட்டையில் இறங்குற வரைக் கும் அவரே டிரைவ் பண்ண ஆரம்பிச்சாரு. விறுவிறுனு கத்துக்கிட்டாரு.

'பைரவி' படப்பிடிப்பில்...

அடுத்தவங்களை இம்ப்ரெஸ் பண்றதுக்குனு இல்லை... அவர் எப்பவுமே சிகரெட்டை மேலே தூக்கிப் போட்டு ஸ்டைலாத்தான் பிடிப்பாரு. 'சும்மா மேஜிக் வேலை காட்டுற ஆளு'னு அவரைப் பத்தி சினிமா உலகத்துல அப்ப சிலர் பேசிக்கிறதை நான் கேட்டிருக்கேன். நானும் அவரைப் பத்தி அப்ப அப்படித்தான் நினைச்சிருந்தேன். ஆனா, தனிப்பட்ட முறையில் பேசப்பேச அவருக்குள்ளே ஒரு அற்புதமான மனுஷனும், பிரமாதமான நடிகனும் இருக்கிறதைக் கொஞ்ச நாளிலேயே புரிஞ்சுகிட்டேன்.

அந்த சமயத்துல தேவர் ஓஹோனு படங்கள் எடுத்துக் கிட்டிருந்தார். அவர் ஒருநாளு என்னைத் தன் ரூமுக்கு வரச் சொன்னாரு. 'டேய் கலைஞானம். உனக்குப் பெரிய குடும்பம்! நீ எழுத்தாளனாவே இருந்தா சொல்லிக்கிற மாதிரி எதுவும் சேர்த்துவைக்க முடியாது. நீயே சொந்தமா ஒரு படம் எடுடா! அதுக்கு நானே ஃபைனான்ஸ் பண்றேன்'னு சொன்னாரு. என் மேலே இருந்த அன்புல அவர் சொன்ன வார்த்தைகளை அப்படியே பிடிச்சிக்கிட்டேன்.

சட்டுனு எனக்கு ரஜினி ஞாபகம்தான் வந்துச்சு. அவரோட ஸ்டைலுக்கும் நடிப்புக்கும் முழுசா தீனி போடுற மாதிரி அவரையே ஹீரோவா போட்டுப் படம் எடுத்தா, அது புதுமையா வரும்னு தோணுச்சு. உடனே நேரா ரஜினியின் ராயப்பேட்டை வீட்டுக்குப் போனேன்... அங்கே விட்டல், முரளி, நட்ராஜ்னு நண்பர்களோட ஜாலியா அரட்டை அடிச்சுக்கிட்டு இருந்தாரு ரஜினி. நட்ராஜ்தான் ரஜினியோட கால்ஷீட் விவரங்களைக் கவனிச்சிக்கிட்டிருந்தாரு. நேரா உள்ளே போனதுமே, 'ரஜினி சார்! நீங்க என் படத்துல நடிக்கிறீங்க! என்ன சொல்றீங்க?'னு கேட்டேன். அவரும் வழக்கம்போல வில்லன் கேரக்டர்தான்னு நினைச்சுக்கிட்டு, 'அதுக்கென்ன சார், பண்ணிடலாம்'னாரு.

'சரி, உங்க சப்ஜெக்ட் என்ன?'னு கேட்டாரு.

'அன்பான அண்ணன்... அவனுக்கு பைரவினு ஒரு தங்கை...' -இப்படி ஆரம்பிச்சு, 'பைரவி' படத்தோட கதையை 2 மணி நேரம் சொல்லி முடிச்சேன். தங்கையை வளர்த்த நினைவுகளில் மூழ்கி, 'நண்டூறுது... நரி ஊறுது'னு அண்ணன்

பாடுற பாட்டையும் நானே பாடிக் காட்டும்போது, கலங்கி அழுதுட்டேன். அதைப் பார்த்து அவரும் உணர்ச்சிவசப்பட்டுக் கண்கலங்கினார். அப்பவே இந்தப் படத்தின் வெற்றி உறுதியாயிடுச்சு.

அடுத்து, அவர் சம்பளத்தை பல மடங்கு உசத்திச் சொல்லி 'உங்களுக்கு கதாநாயகன் வேஷம். நாளைக்கி காலைல அஞ்சாயிரம் ரூபா அட்வான்ஸ் தரேன்' அப்படினு நான் சொல்லவும்... ரஜினி பாசத்தோட என் கையைப் பிடிச்சுக்கிட்டாரு. ரஜினியோட கை அப்பவும் சரி, இப்பவும் சரி... இரும்புத்தனமா கெட்டியாத்தான் இருக்கும்.

நான் அங்கிருந்து கிளம்பி தேவரிடம் போனேன். ரஜினியிடம் பேசிய விவரத்தைச் சொன்னேன். ஷாக் ஆயிட்டாரு தேவர். 'என்ன காரியம்யா பண்ணியிருக்கே! ரஜினியை வச்சு ஊர்ல இருக்குற எல்லாரும் வில்லனா படம் எடுக்குறப்ப, நீ எதுக்கு ஹீரோவா போடுறே? உனக்கு என்ன புத்திக்கித்தி கெட்டுப் போச்சா? வேணும்னா, இதே கதைக்கு ரஜினியை வில்லனா வச்சுக்க! ஹீரோவுக்கு வேற ஆளைப் போட்டுக்கலாம்'னு சொன்னாரு. உடனே நான், 'ரஜினிகிட்டே வாக்குக் கொடுத்துட்டேன். மீற முடியாது'னு உறுதியா சொல்லிட்டு... அங்கிருந்து விருட்டுனு வெளியே வந்துட்டேன்.

வீம்புக்குப் பேசிட்டு வந்துட்டேனே தவிர... பணத்தை எப்படி புரட்டுறதுனு தெரியல! எல்லாத் திசையும் இருட்டாத் தெரிஞ்சுது. ரஜினிகிட்ட சொன்னபடி முதல்ல அவருக்கு அட்வான்ஸ் பணம் அஞ்சாயிரத்தையாவது தந்துடணும்னு ஜரூராய் முயற்சியில் இறங்கினேன்.

அந்த சமயத்துல, ஆனந்தி ஃபிலிம்ஸ் வேணுச் செட்டியார் தயாரிப்புல ரஜினியை ஹீரோவா போட்டு மகேந்திரன் டைரக்ஷன்ல படம் தயாராகப் போகுதுனு கேள்விப்பட்டு... வேணு செட்டியாரைப் போய்ப் பார்த்த தேன். என் கதையைச் சொன்னேன். செட்டியார், 'என்னய்யா இது, பெரிய கூத்தா இருக்குது! உன் கதையில ஹீரோவுக்கு ஒரு காலு போயிடுது. நான் எடுக்கப் போற ஹீரோவுக்கு ஒத்தக் கை போயிடுது. ரெண்டுத்துலயுமே ஹீரோ ரஜினியா? இது எங்கே போயி முடியப்போவுதோ!' என்று பட்டணத்தார் பாணியில் புலம்பிவிட்டார். உடனே, எனக்குள்ளே ஒரு பரபரப்பு பத்திக்கிச்சி. வேணு செட்டியார் புக் பண்றதுக்கு முன்னாடி நாம ரஜினிக்கு அட்வான்ஸ் கொடுத்துடணும்கிற வெறி அதிக மாயிடுச்சு.

நாயா பேயா அலைஞ்சி, அஞ்சாயிரம் ரூபாயை ரெடி பண்ணி, ரஜினியிடம் சொன்ன மாதிரியே பணத்தைக் கொடுக் கறதுக்காக காலையிலயே அவர் வீட்டுக்குப் போனேன்.

நான் போன சமயம், ரஜினி குளிச்சு முடிச்சு, ராகவேந்திரர் படத்துக்கு பூஜை பண்ணிக்கிட்டு இருந்தாரு. பூஜை முடிச்சு வந்தவர்கிட்டே, 'யாருங்க அந்த சாமியார்?'னு கேட்டேன். 'அவர் பெரிய மகான்'னு சொன்னார். அந்த மகான் ஏனோ என்னையும் ஈர்த்தார். அந்த மகான் ராகவேந்திரர் என்பதை அறிந்து பின்னாளில் அவர் பற்றி நிறைய தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்தது தனிக் கதை. நான் கொடுத்த அட்வான்ஸை வாங்கிக்கிட்டு நன்றி சொன்னார் ரஜினி. உடனே அருகில் இருந்த நட்ராஜ் என்னிடம், 'எத்தனை நாள் கால்ஷீட்?'னு கேட்க... '35 நாள் கொடுங்க'னு நான் சொல்ல.... உடனே ஓகே ஆயிடுச்சு.

'அட்வான்ஸ் கொடுத்தாச்சு... படம் எப்படி பண்ணப் போறோம்'னு நினைச்சப்பவே தலைசுத்த ஆரம்பிச் சிடுச்சு.

அந்த சமயத்துல 'ஆறு புஷ்பங்கள்' படம் ரிலீஸ் ஆச்சு. படத்துக்கு நல்ல ரெஸ்பான்ஸ். அதைப் பார்த்த விநியோகஸ்தரான காதர் மொய்தீனும் அவருடன் இருந்த இன்னொருத்தரும், 'முதல் ஆளா உங்க சொந்த படத்தை வாங்கறதுக்கு நாங்க பணம் தர்றோம். இந்தாங்க, பதினஞ்சாயிரம் அட்வான்ஸ்'னு கொடுத்தாங்க. மத்த ஏரியாக்களையும் வித்துத் தர்றதா நம்பிக்கை கொடுத்தாங்க. அப்படி முதல்ல எனக்குப் பணம் கொடுத்த அந்த காதர்மொய்தீன் வேற யாருமில்லை... பிறகு நடிகரா, டைரக்டரா புகழடைஞ்ச ராஜ்கிரண்தான்!

ஓரளவு பணம் சேர்ந்தாச்சு. ஷூட்டிங் ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி. ஹீரோவை புடிச்சாச்சி. வில்லனா யாரைப் போடுறதுனு யோசனை ஓடிக்கிட்டே இருந்துச்சி. முத்துராமன் சார், எனக்கு ரொம்ப வருஷமா நல்லப் பழக்கம். நேரா அவரு வீட்டுக்குப் போயிட் டேன். 'என்ன கலைஞானம்.. எப்படி இருக் கீங்க?'னு சிரிச்சுக்கிட்டேதான் விசாரிச்சாரு. நான் விஷயத்தைச் சொல்லி, 'நீங்கதான் வில்லனா நடிக்கணும்'னு படார்னு கேட்டுட் டேன். முத்துராமன் சாருக்குப் பயங்கர கோபம்!

'என்ன நினைச்சிட்டிருக்கீங்க என்னைப் பத்தி'னு கொஞ்சம் கோபப்பட்டபடியே, என் மொகத்தைக்கூட திரும்பிப் பார்க்காம விர்ருனு மாடிப்படி ஏறிப் போயிட்டார். எனக்கும் ஒரு மாதிரி ஆயிடுச்சு. பிற்காலத்துல அதே முத்துராமன் 'போக்கிரி ராஜா' படத்துல ரஜினிக்கு எதிரா வில்லனா நடிச்சது தனிக்கதை!

அடுத்து ஞாபகத்துக்கு வந்தவர் ஸ்ரீகாந்த். 'சில நேரங் களில் சில மனிதர்கள்' படம் பாப்புலராவும், பரபரப்பா வும் ஓடியிருந்த நேரம். அவர்கிட்டேயும் படார்னு விஷயத்தைச் சொல்லி, 'தயவுசெஞ்சு நீங்க மறுத்துடக் கூடாது'னு கேட்டுக்கிட்டேன். கொஞ்ச நேரம் என்னை மேல யும் கீழயும் பார்த்தவரு, அப்புறம் 'சரி'னு சொல்லிட்டாரு. வில்லனை சம்மதிக்க வைக்கவே இந்தப் பாடு... ரஜினி யோட ஹீரோயினா நடிக்க, யாரை, எப்படி சம்மதிக்க

வைக்கிறதுனு புரியலை! நான் தேவர் ஃபிலிம்ஸுக்காக கதை எழுதின 'ஆட்டுக்கார அலமேலு' படம் சூப்பர் டூப்பரா அப்ப ஓடுச்சு. அதுல ஹீரோயினா நடிச்ச ஸ்ரீபிரியா வுக்கு அந்தப் படத்தாலேயே தனி கிரேஸ் வந்திருந்தது. கூடவே, எனக்கு அவங்க ரொம்ப வருஷ பழக்கமும்கூட! அதனால நேரா அவங்களைத்தான் போய்ப் பார்த்தேன். நான் வச்ச வேண்டுகோளைக் கேட்டுக் கொஞ்சம் யோசிச் சாங்க. தன் அம்மாகிட்டே விவாதிச்சாங்க. 'சரி சார்'னு அவங்க சொன்னப்பவே... முக்கால் கிணறு தாண்டுன நிம்மதி என் முகத்துல வந்துடுச்சு. நான் கேட்டபடியே அத்தனை நாள் கால்ஷீட்டையும் மறுக்காம உடனே கொடுத்தாங்க.

ரஜினியை வில்லனா வச்சு 'காயத்ரி' படம் எடுத்த பட்டாபி ராமனை டைரக்டரா போடலாம்னு முடிவெடுத்து, அவர் கிட்டே பேசியிருந்தேன். தனக்கு முன்னாடியே ரஜினிக்கு அட்வான்ஸ் கொடுத்தாச்சுனு அவரு காதுக்குத் தகவல் போய் சேர... அந்த ஈகோவிலேயே அவர் என்கிட்டே இருந்து ஒதுங்க ஆரம்பிச்சாரு. இது புரியாம, நான் பெரும்பாடு பட்டு அவருக்காக அட்வான்ஸ் ரெடி பண்ணிட்டு போன் செஞ்சா, லைனுக்கே வரலை...

ரசிகனின் பார்வையில்...

கோவை மாவட்டத் தலைமை ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத்தின் அமைப்புச் செயலாளரான கே.பாலசுப்பிரமணியம் சொல்வது -

“ரஜினியோட முதல் படம் வந்தப்பவே ரசிகர் மன்றம் ஆரம்பிச்சிட்டோம். அப்ப நான் கண்டக்டரா வேலை செஞ்சுகிட்டு இருந்தேன். நம்மள போல கண்டக்டரா இருந்தவரு என்கிறதாலேயே அவர் மேலே எனக்கு தனி ஈர்ப்பு வந்திடுச்சு. இப்ப சத்தியநாராயணா இருக்கற இடத்துல ஆரம்ப காலத்துல இருந்தவர் பூக்கடை நடராஜன். அவரு மூலமா தலைவரை பார்க்க முதன்முதலா போயிருந்தேன். ‘நான் கண்டக்டரா வேலை செய்யறேன்’னு சொன்னதும், ஆச்சர்யமா பார்த்துட்டு, ‘வெரிகுட்! செய்யற தொழில்தான் அவங்க அவங்களுக்கு தெய்வம்’னு சொன்னாரு.

முந்தியெல்லாம் ஊட்டி, பொள்ளாச்சி, கோயமுத்தூர்னு தலைவரோட அவுட்டோர் ஷூட்டிங் நடக்கும். கிட்டத்தட்ட ஐம்பது தடவைக்கு மேலே அவரை நான் பார்த்துப் பேசியிருக்கேன். ‘மிஸ்டர் பாரத்’ ரிலீஸ் டைம்ல நடந்ததுதான் மறக்கவே முடியாதது” என்ற பாலசுப்பிரமணியம், அதையும் சொன்னார் -

“திருப்பூரைச் சேர்ந்த குமார் என்கிற பத்தொன்பது வயசு ரசிகன் ‘மிஸ்டர் பாரத்’ படத்துக்காக போஸ்டர் ஒட்டப் போனான். அப்ப பஸ் மோதி பரிதாபமா இறந்துட்டான். அவன் கூலி வேலை செய்யற பையன். அவங்க அப்பா-அம்மாவும் கூலி வேலைதான். சென்னைக்குக் கிளம்பிப் போய் இதை தலைவர்கிட்டே சொன்னதும் அவர் ரொம்ப நேரம் எதுவும் பேசவே இல்லை. பிறகு, அந்தப் பையனோட பெற்றோரை சென்னைக்கே வரவழைச்சாரு. ‘என்னை உங்க பையனா நினைச்சுங்க... எந்த உதவியா இருந்தாலும் தயங்காம கேளுங்க’னு சொல்லி அனுப்பினாரு. பிக்சட் டெபாஸிட்ல ஒரு தொகையை போட்டு மாசா மாசம் அவங்களுக்கு வட்டியும் வர்ற மாதிரி ஏற்பாடு செஞ்சாரு. இப்பவும்கூட அவங்க எப்படி இருக்காங்கனு விசாரிச்சு, தேவையான உதவிகளை செஞ்சுட்டுதான் இருக்காரு... எங்க தலைவன் பற்றி முழுசா தெரியாம பலபேரு ஏதேதோ பேசுறப்ப, எனக்கு மனசு கஷ்டமாத்தான் இருக்கு... பாவம், இதெல்லாம் தெரிஞ்சா அவங்க இஷ்டத்துக்கும் பேசமாட்டங்கள்ல...”

ராகவேந்திரர் வேடத்தில் சிவாஜி?

திருவாரூர் குணா

ரஜினியை முதலில் ஹீரோவாக ‘பைரவி’யில் அறிமுகப்படுத்திய கலைஞானத்தின் அனுபவம் இங்கே தொடர்கிறது -

“படத்துக்கு வில்லனா ஸ்ரீகாந்த்தையும் ஹீரோயினா ஸ்ரீப்ரியாவையும் பேசி முடிச்சிட்டு, டைரக்டரா பட்டாபிராமனைப் போடலாம்னு நினைச்சப்ப... ‘எனக்கு அட்வான்ஸ் தர்றதுக்கு முந்தி ரஜினிக்கு எப்படி தரலாம்?’ என்கிற கோபத்துல இருந்தாரு அவரு. நான் போன் பண்ணும் போதெல்லாம் லைனுக்கே வரலை. ஒருநாள் அவர் மகன் போனை எடுத்து, ‘என்ன விஷயம்னு அப்பா கேட்கச் சொன்னாரு’னு சொல்ல... எனக்கும் கோபம் பொத்துக்கிடுச்சி. ‘என்

புதுப் படத்துக்கு உங்க அப்பா டைரக்டர் கிடையாது. இதை உங்க அப்பாகிட்ட சொல்லிடுப்பா'னு போனை வச்சிட்டேன்.

அப்புறமாத்தான் ஸ்ரீதரிடம் உதவி டைரக்டராக இருந்த பாஸ்கரை 'பைரவி' படத்தின் டைரக்டர் ஆக்கினேன்.

அப்பல்லாம் ரஜினிக்குத் தமிழில் சில வார்த்தைகளை உச்சரிப்பது ரொம்ப தடுமாற்றமா இருக்கும். வேகவேகமாத்தான் பேசுவாரு. என்னை 'கலை ஞானம்'னு கூப்பிடுவதற்கு பதிலா, 'கல்ஞானம்' அப்படினுதான் கூப்பிடுவாரு. இதைப் பார்த்து விழுந்துவிழுந்து சிரிச்ச ஸ்ரீபிரியா... 'கல்ஞானம்' அப்படினு ரஜினி மாதிரியே பேசி, அவரோட உச்சரிப்பை டபாய்ப்பாங்க.

மேட்டுப்பாளையத்தில் இருந்த உடுப்பி ஹோட்டலில் அப்போது இருந்ததே ஒரே ஒரு ஏ.சி. ரூம்தான்! ஹீரோங்கிறதால அதை ரஜினிக்குக் கொடுத்தாச்சு. 'எனக்கு ஏ.சி. கிடையாதா?'னு ஸ்ரீகாந்த் கோவிச்சிக்கிட்டார். இது ஒரு பக்கம்னா... திடீர்னு ஒருநாள் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு ரஜினி, ஸ்ரீகாந்த் ரெண்டு பேருமே வரலை. யார் முதல்ல ஹோட்டல் அறையை விட்டுக் கிளம்புறதுனு 'ஈகோ' யுத்தம் தொடங்கிடுச்சுனு சொன்னாங்க. நான் விறுவிறுனு கிளம்பிப்போய், ரெண்டு பேரும் இருந்த அறைகளுக்கு மத்தியில நின்னு, 'எல்லாரும் பெரிய மனுஷங்கதான். ஆனா, காசு போட்டுப் படம் எடுக்கிற புரொடியூஸரையும் ஒரு மனுஷன்னு மதிக்க வேணாமா?'னு பொத்தாம்பொதுவா சத்தம் போட்டேன். அடுத்த நிமிஷமே ஹீரோவும் வில்லனும் ஸ்பாட்டுக்குப் போய்ட்டாங்க.

படத்தில் க்ளைமாக்ஸ் சண்டை... ஒரு வழுக்குப் பாறை மேலே நடக்கும். அது எல்.ஐ.சி. பில்டிங் மாதிரி ரெண்டு மடங்கு உயரம். மே மாச வெயில் பிச்சி எடுத்துக்கிட்டிருந்தது. புலி வேஷம் போட்டுக்கிட்டு ஸ்ரீகாந்தோடு ரஜினி ஒத்தைக் காலுடன் சண்டை போடற ஸீன். தவழ்ந்து தவழ்ந்து ஏறித்தான் அந்த வழுக்குப் பாறை மேலே நிக்கணும். பாறை மேலே இருந்து, குடிக்கத் தண்ணீர் கேட்டாலும் கீழே இருக்கறவங்களுக்கு எதுவுமே கேட்காது. சைகை மூலம் கேட்டாத்தான் உண்டு.

அந்த ஸீன் எடுக்கும்போது புரொடக்ஷன் மேனேஜர் கோபம் வந்து, யூனியன் ஆள் ஒருத்தரைத் திட்டிட்டாரு. உடனே உதவியாளர்கள், 'பாறை மேலே எல்லாம் ஏறிப்போய் பணிவிடை செய்ய முடியாது'னு சொல்லிட்டாங்க. ரஜினி மேலே நின்னுகிட்டு 'தாகம்... தாகம்'னு சைகை காட்டுறாரு. யாரும் அசையலை. கடைசியில், நானே ஒரு பாட்டிலில் தண்ணி எடுத்துக்கிட்டு தவழ்ந்து தவழ்ந்து போய் கொடுத்தேன். அதைப் பார்த்து மனம் மாறி யூனியன் ஆட்களும் முழுசா ஒத்துழைப்பு கொடுக்க ஆரம்பிச்சாங்க.

'பைரவி' படம் ரிலீஸ் ஆனது! 'ராஜகுமாரி' தியேட்டருக்கு தேவர் போயிருக்காரு. படத்தைப் பார்த்துட்டு, ரொம்பவே அவருக்குப் பிடிச்சுப் போச்சு. இடைவேளை சமயத்தில், அதே தியேட்டருக்கு ரஜினியும் போக... அவரை ஜனங்க தோளில் தூக்கிவச்சு ஆட... அமைதியா பார்த்துட்டு வெளியே வந்த தேவர், என்னைக் கூப்பிட்டு அனுப்பினாரு. 'என்னப்பன் முருகன் உன்பக்கமும் இருக்கான்டா. சரியான ஆளைத்தான் ஹீரோ ஆக்கியிருக்கே'னு பாராட் டினார்.

'பைரவி' படம் ஷூட்டிங் முடிஞ்ச பிறகு மறக்க முடியாத ஒரு விஷயம் நடந்தது. ரஜினிக்கு டி.எம்.சௌந்தர ராஜன் குரல்னா உசுரு. 'நண்டூறுது... நரியூறுது' பாடலுக்குத் தன் வாயசைப்புக்கு டி.எம்.எஸ். பாடறார்னு தெரிஞ்சதும் சந்தோஷக் கூத்தாடினாரு. வேற ஒரு ஷூட்டிங்ல சின்ன ரோலில் நடிச்சுக்கிட்டிருந்தவரு... அந்த டைரக்டர்கிட்டே போயி, 'சார்! என் கனவு ஒண்ணு நிறைவேறப் போகுது. ரெண்டு மணி நேரம் அவகாசம் கொடுங்க'னு கேட்டுக்கிட்டு... டி.ம்.எஸ். பாட்டு பாடினதை ரெக்கார்டிங் தியேட்டருக்கு வந்து உடம்பு சிலிர்க்கப் பார்த்துட்டுப் போனாரு!" என்று சொல்லி நிறுத்திய கலைஞானம்...

'பைரவி'க்குப் பிறகு பல வருடங்கள் கழித்து நடந்ததையும் நம்மிடம் பகிர்ந்து கொண்டார் -

"ஒருமுறை ரஜினி வீட்டில் அவரது நண்பர்களோடு ராகவேந்திரரைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து அவரைப் பார்க்கப் போனேன். ஏற்கெனவே ராகவேந்திரர் பற்றி நான் சேகரித்து வைத்திருந்த தகவல் களையெல்லாம் அப்ப நான் சொன்னேன். ரஜினி ராகவேந்திரரின் தீவிர பக்தராக இருந்து அவர் குறித்து நிறைய விஷயங்களை தெரிந்து வைத்திருந்தாலும், ராகவேந்திரர் குறித்து நான் சொன்ன விஷயங்களை ரஜினி கண்ணிமைக்காம கேட்டுக்கிட்டாரு. ராகவேந் திரர் வாழ்க்கையில் சுல்தான் பாய் என்கிற பாத்திரம் வித்தியாசமானது. ராகவேந்திரரை ஏமாற்று வதற்காக அவர் ஒருமுறை மாமிச துண்டுகளை ஒரு பாத்திரத்தில் வைத்துவிடுவார். ராகவேந்திரர் அதைத் தன் அசைக்கமுடியாத பக்தியால் புஷ்பமாக மாற்றி விடுவார். சுல்தான் அப்போதே ராகவேந் திரரின் பரம பக்தராகிவிடுவார். கடைசியில் தான் மகா சமாதியாகும் இடத் தையும் சுல்தானே அமைத்துத் தரும்படி ராகவேந்திரர் கேட்பார். அதை அமைத்து முடித்து, சுவாமிகள் சமாதி ஆவதற்கு முன்பு சுல்தான், ராகவேந்திரரின் காலில் விழுந்து கதறி அழுது, 'ஐயா! நீங்கள் போனபிறகு இது இந்துக்களின் புனித ஸ்தலமாகிவிடுமே. இஸ்லாமியனாகிய என்னை அனுமதிக்காவிட்டால் நான் எப்படி இங்கே வந்து உங்களைத் தரிசிப்பேன்?' என்று உருகிக் கேட்பார். உடனே ராகவேந்திரர், 'என் சமாதிக்கு மேல் ஒரு மாடம் அமைத்துவிடு. நீ எங்கிருந்து எப்போது பார்த்தாலும் நான் உனக்குக் காட்சி தருவேன்' என்று சொல்லி மறைந்து விடுவார்.

ஏற்கெனவே ராகவேந்திரரை வைத்து படமெடுக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்த ரஜினிக்கு, ராகவேந்திரர் குறித்து நான் சேகரித்து வைத்திருந்த தகவல்களையெல்லாம் சொல்லப் போக, அந்த எண்ணம் தீவிரமாகி விட்டது. விறுவிறுவென படமாக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதில் ராகவேந்திரராக அவர் மனதில் வைத்திருந்தது சிவாஜி சாரை. சுல்தான் பாயாகத் தான் நடிப்பதாகவும் முடிவெடுத்துவிட்டார். 'இதையெல்லாம் அறிவிப்பாக வெளியிட்டு விடுங்கள்' என்று என்னிடம் உடனே ரஜினி சொன்னார். நானும் உற்சாகமாக ரஜினியின் வீட்டிலிருந்து வெளியே வந்து காரில் ஏறப் போனேன். அப்போது உள்ளிருந்து ஓடிவந்த ஒரு நண்பர் அவசரமாக என்னை உள்ளே அழைக்க... போனேன். 'அவசரப்பட்டு அறிவிக்க வேண்டாம். இரண்டு நாள் பொறுப்போம்' என்றார் ரஜினி.

பிறகு என்ன நடந்ததோ... எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் ரஜினியே ராகவேந்திரராக நடிப்பதாக அறிவிப்பு வெளியானது. கொஞ்ச நாட்களிலேயே படமும் வெளிவந்தது. நான் சொன்ன ராகவேந்திரர் கதை இப்பவும் என் மனதில் கனவாக அப்படியே இருக்கிறது!"

ரசிகனின் பார்வையில்...

தேனி மாவட்ட ரஜினி மன்ற செயலாளர் புஷ்பராஜ்-

“1990-ல் நானும் மன்ற நிர்வாகிகளும் தலைவரை சந்திக்க சென்னைக்குப் போனோம். அப்போ ‘அண்ணாமலை’ படம் எடுத்துக்கிட்டிருந்தாங்க. பொக்லைன் வண்டியை வச்சு வீட்டை இடிக்கிற காட்சி. பொக்லைன் வர தாமதமானது. அதனால தலைவர் மூடு அவுட்டில் இருக்கிறதா சொல்லி, அங்கிருந்தவங்க எங்களை அவரைப் பார்க்கவிட மறுத்தாங்க.

“மந்திராலயம் போய் பிரசாதத்தோட வந்திருக்கோம். தலைவருக்குக் கொடுத்துட்டுப் போயிடறோம்”னு சொல்லி அனுமதி வாங்கினோம். தயக்கத்தோட தலைவரை நெருங்கி பிரசாதத்தைக் கொடுக்கவும், அந்த வளாகத்துக்குள் பொக்லைன் வண்டி சல்லுனு திரும்பிவந்து நிக்கவும் சரியா இருந்துச்சு!

தலைவர் ரொம்ப ரிலாக்ஸாகி, ‘எப்ப வந்தீங்க... ரயிலா-பஸ்ஸா?’னு அக்கறையா விசாரிக்க ஆரம்பிச்சாரு.

‘கார்லதான் வந்தோம்’னு சொல்லவும், ‘ராத்திரியில் கார்ல போறதைத் தவிர்த்திடுங்கப்பா. ரோடு விபத்துகள் எவ்ளோ நடக்குது, பார்க்கறீங்கள்ல... உங்களுக்கு ஒண்ணு ஆச்சுனா என்ன ஆகும்? அதுக்குப் பிறகு உங்க குடும்பம் படுற கஷ்டத்தையும் நினைச்சுப் பாருங்க’னு அட்வைஸ் செஞ்சவரு... அன்னிக்கு ராத்திரி சென்னையிலேயே இருந்துட்டு, விடிஞ்சதும்தான் ஊருக்குப் போகணும்னு கண்டிப்போட அட்வைஸ் தந்தாரு! என்னோட வந்தவங்கள்லாம், ‘என்னப்பா இது... இவ்ளோ அக்கறையா பேசுறாரு’னு ஆச்சரியப்பட...

‘அதான்டா நம்ம தலைவரு’னு பெருமையா காலரை தூக்கி விட்டுக்கிட்டேன்!”

ரஜினியை முதலில் ஹீரோவாக அறிமுகப்படுத்திய கலை ஞானத்தின் அனுபவத்தைத் தொடர்ந்து, இங்கே தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கி றார்- ரஜினியின் நெருங்கிய நண்பர் களில் ஒருவரான நட்ராஜ்.

“மூன்று முடிச்சு படத்தில் மட்டுமல்ல... ரஜினியின் ஆரம்ப காலம் தொட்டு அவரது நிஜ வாழ்க்கையிலும் கூடவே இருக்கிற முக்கியமான மனசாட்சிகளில் ஒருவர்” என்று திரை உலகத்தினர் சுட்டிக் காட்டுவது இந்த நட்ராஜைதான்!

ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் காலத்தில் தொடங்கிய இந்த நட்புக்கு மரியாதையாக, தனது பல படங்களில் நட்ராஜையும் நடிக்க வைத்ததோடு மட்டுமின்றி, ‘அன்புள்ள ரஜினிகாந்த்’ படத்தின் மூலம் இயக்குநராகவும் உயர்த்தி அழகு பார்த்தார் ரஜினி. பழைய நினைவுகளுக்குள் போகும்போதே முகமெல்லாம் பூரித்துப் போகிறது நட்ராஜுக்கு.

“அப்ப ஃபிலிம் சேம்பர்ல நடந்துகிட்டிருந்த இன்ஸ்டிட்யூட்ல எத்தனையோ மாணவர்கள் படிச்சாங்க. நிறைய பேர் வசதியானவங்க. இன்னும் பல பேரு சென்னையிலயே குடும்பத்தோட பாதுகாப்புல இருந்தவங்க. சுருக்கமா சொல்லணும்னா, சாப்பாடுங்கிறது அவங்க யாருக்குமே பிரச்னை கிடையாது. ஆனா, வெளியூர்லேர்ந்து கிளம்பி வந்து இன்ஸ்டிட்யூட்ல படிச்சுக்கிட்டிருந்த நானும் ரஜினியும் தினம் தினம் பட்ட கஷ்டங்களே எங்களை நல்ல நண்பர்களா ஆக்கிடுச்சு.

பல நாட்களில் காலையில சாப்பிட ஒண்ணுமில்லாம கிளம்பி இன்ஸ்டிட்யூட் வந்துடுவோம். மத்தியானம் ஆச்சுன்னா, யானைப் பசி ஆளை கொல்லும். ஜெமினி பாலத்தின் அருகில் இருந்த இன்ஸ்டிட்யூட்டில் இருந்து

நடந்து போற தூரத்துல இருந்தது 'ஆயிரம் விளக்கு கபே'. மத்தியான மீல்ஸுக்கு அங்கே எப்பவுமே கூட்டம் அலைமோதும். அளவுச் சாப்பாடு ஒண்ணேகால் ரூபா. ஆனா, அதுக்கே பலநாள் எங்ககிட்டே காசு இருக்காது. அப்புறம் எங்கே அன்லிமிடெட் மீல்ஸ் பத்தி நினைக்கிறது?

கரெக்டா மத்தியானம் 1 மணிக்கு சாப்பாடு ரெடியாயிடும். நானும் ரஜினியும் முதல்ல உள்ளே போயிடுவோம். இலைய போடுவாங்க. தண்ணி தெளிச்சு வெச்சுட்டு சமையல் ரூமையே பார்த்துக்கிட்டு இருப்போம். மொதல்ல கறி, கூட்டு... அதுக்கப்புறம்தான் அளவு சாப்பாடு சுடச்சுட கொண்டாந்து இலையில போடுவாங்க. சோறு வர்றதுக்கு முந்தியே, கறி-கூட்டை கபகபனு எடுத்துக் காலி பண்ணிடுவோம். அப்புறம் சோறு வைக்க ஆள் வரும்போது, 'காய் கொண்டாப்பா'னு மறுபடி கேட்டு வாங்கி அதையும் காலி பண்ணிடுவோம். சாதத்தைவிட இந்த காய்-கறிங்கதான் எங்க பசியை ஓரளவு தீர்க்கும்.

ரஜினியுடன் மீனா... 'அன்புள்ள ரஜினிகாந்த்' படப்பிடிப்பில் ரஜினி, நட்ராஜ்... நட்ராஜ்-ரஜினி இன்று

ராயப்பேட்டை வீட்டு மொட்டை மாடியில மல்லாந்து படுத்துக்கிட்டே வானத்தில் மின்னிய நட்சத்திரங்களைப் பார்த்தபடி எங்க எதிர்காலம் பத்தின கற்பனையில் பல நாட்கள் மூழ்கி இருக்கோம். 'மனசால நாம எதையாவது உறுதியா நினைச்சோம்னா, நிச்சயமா அது நமக்குக் கிடைக்காம போகாது நட்ராஜ்'னு ரஜினி உறுதியா சொல்லுவாரு.

'மூன்று முடிச்சு' படத்துல ரஜினிக்கு வில்லன் ரோல்... அப்பவே அந்த யூனிட்ல அவருக்கு நல்ல முக்கியத்துவம் தர ஆரம்பிச்சிட்டாங்க. ஏற்காட்டுல படப்பிடிப்பு. கமல் ஏரியில் விழுந்துடுவாரு. ஸ்ரீதேவி கெஞ்சிக் கதறியும் கமலைக் காப்பாத்தாம ரஜினி படகை ஓட்டிக்கிட்டே போற மாதிரி ஸீன் எடுத்துக்கிட்டிருந்தாங்க. ரஜினியோட மனசாட்சியா வந்து அவரை எச்சரிக்கை பண்ற ரோலை நான் செஞ்சேன். நானும் ஏற்காடு போயிருந்தேன்.

ரஜினியை அங்கிருந்த ஒரு பங்களாவில் தங்க வச்சிருந்தாங்க. மத்த சாதாரண நடிகர்கள் தங்குகிற இடத்துல எனக்கும் இடம் ஒதுக்கி இருந்தாங்க. திடீர்னு ஒருத்தர் என்னைத் தேடிக்கிட்டு வந்தாரு. 'உங்க துணிமணியெல்லாம் எடுத்துக்கிட்டு ரஜினி சார் தன்னோட பங்களாவுக்கு வரச் சொன்னாரு' அப்படின்னாரு. 'இப்பனு இல்லை... எப்பவுமே நீ என் நண்பன்தான்' அப்படினு ரஜினி சொல்லாமல் சொன்ன தருணம் அது.

'ஆடுபுலி ஆட்டம்' படத்துல கமலுக்கு மட்டும் மதன் அப்படினு பேரு வச்சிட்டு, கூட நடிச்ச மத்த மூணு பேருக்கும் அவங்கவங்க சொந்த பேரையே வச்சிட்டாரு டைரக்டரு. கமலும், ரஜினியும் தர்க்கம் பண்ற ஸீன்ல, 'இதுதான் மதன் ஸ்டைல்' அப்படினு கமல் சொல்வாரு. உடனே ரஜினி 'இது ரஜினி ஸ்டைல்'னு சொல்வாரு. அதை அவர் சொன்ன விதத்தைப் பார்த்தவங்களுக்கு, 'அட, நல்லா யோசிச்சு வொர்க் பண்ணியிருக்காரே'னு தோணும். ஆனா, நிஜ வாழ்க்கையிலேயே ரஜினி எப்பவும் ஸ்டைலான ஆளுதான்னு எங்களுக்கெல்லாம் நல்லா தெரியும்.

தொடர்ச்சியா பல படங்களுக்கு நான்தான் ரஜினிக்கு கால்ஷீட் பார்த்துக்கிட்டிருந்தேன்.

‘இளமை ஊஞ்சாலாடுகிறது’ படத்துல ரஜினிக்கு முக்கியமான ரோல் வச்சு கதை ரெடி பண்ணியிருந்தார் டைரக்டர் ஸ்ரீதர். ரஜினிக்குக் கதையை சொல்றதுக்காக யாரோ ஒருத்தரை அனுப்பியிருந்தாரு. வந்தவருக்கும் ரஜினிக்கும் என்னவோ சரிப்பட்டு வரலை. அதனால, ‘இந்தப் படத்துல நடிக்க எனக்கு விருப்பமில்லை’னு சொல்லி அனுப்பிட்டாரு. அன்னிக்கு நான் வேறொரு வேலையா ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்ல இருந்தேன். என்னைத் தேடிக்கிட்டு டைரக்டர் அங்கேயே வந்துட்டாரு. எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை. அவருகிட்டே பேசி அனுப்பிட்டு, ரஜினிகிட்டே போனேன். ‘தனிப்பட்ட ஆட்களை வெச்சு எதையும் எடை போடக்கூடாது... ஸ்ரீதர் சார் பெரியாளு... தமிழ் சினிமாவோட டிரெண்ட் செட்டர்! இந்த வாய்ப்பு உனக்கு இன்னொரு பரிமாணத்தைக் கொடுக்கும்’ அப்படினு பக்குவமாகச் சொன்னேன். ரஜினியும், ‘அப்ப சரிப்பா’னு குழந்தை மாதிரி தலையாட்டினது, அப்படியே பச்சுனு இப்பவும் மனசுல இருக்கு.

அதென்னவோ... ஆரம்ப காலத்துல ரஜினிக்கு கார் ஓட்டறதுல அப்படியொரு வெறி. 78-ம் வருஷத்துல ஒரு சம்பவம்... ராஜ்குமார் என்கிற நண்பர் பூந்தமல்லியில் இருக்கிற தன் வீட்டுக்கு விருந்துக்கு வரச் சொல்லியிருந்தாரு. நானும் ரஜினியும் ஒரு ஆடிட்டருக்கு சொந்தமான கார்ல போயிருந்தோம். எங்க கூடவே ஆடிட்டர்தான் கார் ஓட்டிட்டு வந்தாரு. சாப்பிட்டுத் திரும்பும்போது, ‘சார்! நான் வண்டி ஓட்டறேன்’னு ஆடிட்டர்கிட்ட கேட்டாரு ரஜினி. ஆடிட்டரும் டிரைவிங் ஸீட்டைக் கொடுத்துட்டு பக்கத்துல உட்கார்ந்தாரு. வண்டியை யூ டர்ன் போட்டு விருட்டுனு திருப்பின வேகத்துல, உள்ளே இருந்த நாங்கள்லாம் குலுங்கி சரிஞ்சிட்டோம். அந்த நேரம் பார்த்து பல்லவன் பஸ் ஒண்ணு சீறிக்கிட்டு தாண்டிப் போக... ‘அவ்வளவுதான், நம்ம கதி அம்போ’னு நினைச்சுக் கண்ணை மூடிக்கிட்டேன். எதுவுமே நடக்காத மாதிரி மெயின் ரோட்டுல வண்டி வேகத்தை இன்னமும் கூட்டின ரஜினி, ‘என்னா... பயந்துட்டீங்களா? சும்மா நசநசன்னு வண்டி ஓட்டுனா எனக்குப் புடிக்காது... எதுலயும் ஒரு த்ரில் வேணாமா... அதான் ஒடிச்சு வளைச்சேன்’ அப்படினு சொல்ல... நானும் ஆடிட்டரும் சகஜ நிலைமைக்கு வந்து, ரொம்ப நேரம் சிரிச்சோம்.

இப்பவும் அவர் கையில் வண்டியைக் கொடுத்தா, போகிற வேகத்தை யாரும் தூர இருந்து பார்தாலே வயித்தைக் கலக்கத்தான் செய்யும். எவ்வளவு வேகம் போனாலும் சரி, கன்ட்ரோல் கொஞ்சம்கூட தப்பாது.

அவர் முதல்ல வாங்குனது டிஎம்யு 5004 என்ற நம்பர் உள்ள ஃபியட் கார். வாங்கினதுமே முதல்ல எங்களைத்தான் கூப்பிட்டு அதுல உட்காரவச்சு ரவுண்ட் அடிச்சாரு. ஜெமினி பாலம், கோடம்பாக்கம் ரோடு, பீச்சுன்னு சுத்திச்சுத்தி வந்தப்ப ஒரு பச்சைக் குழந்தையோட பூரிப்பு அவர் முகத்துல.

ஒரு தடவை மந்திராலயம் கோயிலுக்குக் கிளம்பினோம். ஃப்ளைட்ல பெங்களூர் அழைச்சிட்டுப் போனாரு ரஜினி. அதான் நான் முதன்முதலா விமானத்துல போறது... நடு வானத்துல ஃப்ளைட் போய்ட்டிருக்கும்போது, ‘என்னப்பா நட்ராஜ். எப்படி இருக்கு அனுபவம்? இந்த ஃப்ளைட் சுக்குநூறா வெடிச்சா எப்படி இருக்கும்’னு அவர் கேட்க... எனக்கு ஈரக்குலையே நடுங்கிடுச்சு. ‘எதுலதான் விளையாடுறதுனு இல்லையா? ஃப்ளைட்டைவிட்டு இறங்கற வரைக்கும் யாரும் வாயே திறக்காம இருங்க... புண்ணியமாப் போகும்’னு கேட்டுக்கிட்டேன். வெடிச் சிரிப்பு சிரிச்சாரு ரஜினி.

இப்பகூட திடீர்னு ஜாலி மூட் வந்துச்சுன்னா... போன் பண்ணுவாரு. எல்லா ஃப்ரெண்ட்ஸும் அசெம்பிள் ஆனப்புறம் காரை எடுப்பாரு. ஏதாவது ஹோட்டல்ல போய் பார்சல் வாங்கிக்குவோம். காரை அவரேதான் ஓட்டுவாரு. சிட்டிக்கு வெளியே ஆள் அரவமே இல்லாத இடத்துல உட்கார்ந்து கட்டுச் சோறு பிரிச்சி, கூட்டமா உட்கார்ந்து சாப்பிடுவோம். ‘இப்படி உங்களோட உட்கார்ந்து அரட்டை அடிச்சா, ஆறு மாசத்துக்கு மொத்தமா சார்ஜ் ஆயிடுதுப்பா’னு சந்தோஷமா சொல்வாரு.

உலகத்துல எத்தனையோ பேரு ரஜினி மாதிரி மிமிக்ரி பண்ணி கைத்தட்டலை வாங்கறாங்க. ஆனா, ரஜினியே சூப்பரா மோனோ ஆக்டிங், மிமிக்ரியெல்லாம் பண்ணுவார்னு நிறைய பேருக்குத் தெரியாது. அதுவும் பழைய நண்பர்கள் மாதிரி அவங்ககிட்டே அவர் நடிச்சுக் காட்டும்போது, கண்-கைகால் அசைவு எல்லாமே அச்சு அசலா அவ்ளோ பிரமிப்பா இருக்கும்.

பாம்புக்கும் ரஜினிக்கும் சென்டிமென்ட்டா ஒரு தொடர்பு உண்டு. அது முதன்முதலா 'பைரவி' படத்துலதான் ஆரம்பிச்சது. அதுக்கப்புறம் 'தம்பிக்கு எந்த ஊரு', 'அண்ணாமலை', 'படையப்பா' வரைக்கும் தொடர்ந்துகிட்டே இருக்கு. 'சந்திரமுகி'யிலகூட கிராபிக்ஸ்ல பாம்பைக் காட்டியிருப்பாங்க.

ஒரு தடவை, தேவரோட மாப்பிள்ளை தியாகராஜன் சாரைப் பார்க்கப் போயிருந்தேன். 'நட்ராஜ்! என்கிட்டே அசிஸ்டென்ட் டைரக்டரா ஒர்க் பண்றீங்களா?'னு கேட்டார். நானும் ஓகே சொல்லிட்டேன். நாமளே ஒரு படத்தை டைரக்ட் பண்ண மாட்டோமா என்கிற ஏக்கம் எனக்குள்ளே ரொம்ப காலமா இருந்தது.

இந்த சமயத்துலதான் தூயவன் சார் என்னிடம், 'எம்.ஜி.ஆரை வைத்து எடுக்க வேண்டிய ஒரு நல்ல கதை கைவசம் இருக்கு. ஆனா, ஏனோ பண்ணமுடியலை' என்றார். அவரே, 'அந்த கேரக்டர்ல ரஜினி நடிச்சாலும் நல்லாயிருக்கும்'னு சொன்னார். அது எல்விஸ் பிரெஸ்லி நடிச்ச இங்கிலீஷ் படத்தோட கதை. பாப் பாட்டை பாடிக்கிட்டே ஆடுறதுலே கில்லாடி அவரு. நோய்ல இருக்கிற ஒரு சின்னப் பொண்ணு அவரோட ரசிகை. அவளுக்கு நேர்லயே வந்து அவர் செய்ற உதவிதான் கதை.

'சரி, ரஜினியோட கால்ஷீட் வாங்கித் தந்தா நான்தான் டைரக்ஷன் பண்ணுவேன், சரியா?'னு தூயவன்கிட்டே கேட்டேன். அவரும் சம்மதிச்சாரு. ரஜினியோ பயங்கர பிஸி. இருந்தும், நான் போய் விஷயத்தை சொன்னதுமே... 'உனக்காக ஓகே சொல்றேன் நட்ராஜ்'னு உடனே சம்மதிச்சிட்டாரு.

ரஜினி அந்த படத்தில் நடிச்சது ஐந்தே ஐந்து நாட்கள்தான். படம் பிரமாதமா பேர் வாங்குச்சு. எனக்கு டைரக்டர்ங்கிற மரியாதையும் கிடைச்சுது. கொடுத்த அஞ்சு நாள் கால்ஷீட்ல துளி நேரத்தைக்கூட வீணாக்காம எனக்கு ரஜினி ஒத்துழைப்பு கொடுத்ததுதான் படத்தோட வெற்றிக்கு முக்கிய காரணம்.

அதேமாதிரி, அவரே கதை, வசனம் எழுதுன 'வள்ளி' படத்தையும் என்கிட்டே கொடுத்து, 'நீயே டைரக்ட்' பண்ணுனு சொன்னாரு.

எனக்கு மகள் பொறந்தப்ப எல்லாரும் ஆளுக்கொரு பேர் வைக்க ஐடியா சொன்னாங்க. எனக்கும் என் மனைவிக்கும் எந்த குழப்பமோ தயக்கமோ இல்லை. பளிச்சுனு 'ரஜினி'னே பேர் வச்சோம். இப்ப என் பொண்ணு ரஜினி, எம்.பி.ஏ. படிச்சுக்கிட்டிருக்கா.

கொஞ்சநாளைக்கு முந்தி ரஜினியோட பேசிக்கிட்டிருக்கும்போது, 'பார்த்துக்கிட்டிருக்கும்போதே காலம் ஓடிடுச்சு. புள்ளைங்கள்லாம் பெரிசாயிடுச்சு. எனக்குக் கல்யாணம் ஆகி 25 வருஷம் முடிஞ்சிடுச்சி'னு நான் சொன்னேன். கொஞ்ச நேரம் ரஜினி அமைதியா இருந்தாரு. 'நிஜம்தான் நட்ராஜ்! காலம் ரொம்ப வேகமாத்தான் ஓடுது. உனக்கும் சரி, எனக்கும் சரி... பெரியவங்களா பொண்ணு பார்த்து, பஜ்ஜி, சொஜ்ஜி கொடுத்து கல்யாணம் பண்ணி வைக்கலை. நாமளாதான் பொண்ணு பார்த்தோம். நாமளாதான் கட்டிக்கிட்டோம். இருந்தாலும், ஆண்டவன் ரொம்ப நல்ல குடும்ப வாழ்க்கையைக் கொடுத்திருக்கான், இல்லையா?'னு கேட்டாரு. ஏனோ தெரியலை... அப்ப என் கண்ணு கலங்கிடுச்சு!" என்று முடித்தார் நட்ராஜ்.

ரசிகனின் பார்வையில்...

மதுரை மாவட்டத் தலைமை ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத் தலைவரான ஜாஃபர், இப்படி சிலாகிக்கிறார்-

“தலைவர்கூட ரொம்ப நெருக்கமாயிருக்கிற பாக்கியம் கிடைச்ச ஆளுங்கள்ல நானும் ஒருத்தன். அதுக்கு முக்கிய காரணம், தொடக்கத்துலயிருந்தே நானெல்லாம் அவர் பின்னாடியே போயிட்டிருக்கிறதுதான். ‘மூன்று முடிச்சு’ படத்துல அவரோட ஸ்டைலைப் பார்த்துக் கிறங்கிப்போய் ‘கவர்ச்சி வில்லன் ரஜினிகாந்த் ரசிகர் மன்றம்’னு அவருக்கு முதன்முதலில் ரசிகர் மன்றம் ஆரம்பிச்சதே நாங்கதான். அதை மதுரையிலதான் ஆரம்பிச்சோம். அப்புறம் தலைவர் ஹீரோவா கலக்க ஆரம்பிச்சதும் அந்த மன்றத்தை ‘ஸ்டைல் ஹீரோ ரஜினிகாந்த் ரசிகர் மன்றம்’னு மாத்திட்டோம். தலைவரை நான் பலமுறை சந்தித்துப் பேசியிருக்கேன். ரொம்ப பாசக்கார மனுஷனுங்க அவரு.

‘ப்ரியா’ பட ஷூட்டிங்குக்காக தலைவர் சிங்கப்பூர் போயிருந்தார். வரும்போது ஒரு கேமரா வாங்கிட்டு வந்திருந்தாரு. அந்த நேரத்துல நாங்க மதுரையிலிருந்து அவரைப் பார்க்கிறதுக்காக சென்னை போயிருந்தோம். உடனே, எங்களை நிக்க வெச்சு, அந்த கேமராவுல விதவிதமா படமெடுத்துத் தள்ளினாரு. எந்த ஹீரோங்க தன்னோட ரசிகன்கிட்ட இந்தளவுக்குப் பழக முடியும்? அவரு உசரத்துல இருக்கறதுக்கு இதெல்லாம் ஒரு காரணம். ஒவ்வொரு வருஷமும் பல ஆயிரம் குழந்தைகளின் படிப்புக்காக வெளியில தெரியாம உதவி பண்ணிட்டிருக்காரு. ஏராளமானவர்களுக்கு மருத்துவ உதவிகளையும் செய்றாரு. ஒருதடவை மதுரையில உள்ள செல்வம்ங்கிறவரோட ஆபரேஷன் செலவுக்காகத் தலைவர் பண உதவி பண்ணியிருந்தார். சில வருஷம் கழிச்சு ஒரு விழாவுக்காகத் தலைவர் மதுரை வந்திருந்தார். அப்ப என்கிட்ட, ‘ஜாஃபர், செல்வத்தோட ஹெல்த் எப்படியிருக்கு? நார்மலா?’னு கேட்டார். ‘உங்க புண்ணியத்துல நல்லாயிருக்கிறாரு தலைவா’னு சொன்னேன். உடனே, ‘நோ, நோ... நாம என்ன பண்ணினோம்? ஆண்டவன்தானே எல்லாத்தையும் செய்றாரு..!’ அப்படினு சொல்லிட்டுப் போய்ட்டாரு. அப்படியொரு பெருந்தன்மைக்குச் சொந்தக்காரர்தாங்க எங்க தலைவர் ரஜினி!”



ஸ்டைல் வில்லனாகத் தமிழ்த் திரையில் பரிமளித்துக் கொண் டிருந்த ரஜினியைஒரு ஹீரோவாக்கி, அவரது வேறொரு பரிமாணத்தை வெளிக்கொண்டு வந்தவர் கலைஞானம் என்றால் ஹீரோவாக மாறிய ரஜினிக்குள் இருந்த மற்ற பல பரிமாணங்களை வெளிக்கொண்டு வந்த பெருமை, டைரக்டர் எஸ்.பி.முத்துராமனை சாரும். ரஜினியை நாயகனாக வைத்து 25 படங்களை எடுத்து சாதனை செய்த ஒரே இயக்குநரும் எஸ்.பி.எம்- தான்!

‘புவனா ஒரு கேள்விக்குறி’, ‘ஆறிலிருந்து அறுபது வரை’, ‘எங்கேயோ கேட்ட குரல்’, ‘ஸ்ரீராகவேந்திரா’ போன்ற படங்கள் மூலம் ரஜினிக்குள் ஒளிந்திருந்த குணச்சித்திர நடிகனையும்,

‘முரட்டுக்காளை’, ‘போக்கிரிராஜா’, ‘பாயும்புலி’, ‘நல்லவனுக்கு நல்லவன்’ போன்ற படங்களின் மூலம் ஆக்ரோஷமான ஆக்ஷன் ஹீரோவாகவும் ரஜினியை அவதாரம் எடுக்க வைத்தவர் எஸ்.பி.முத்துராமன்தான். இதைவிட இன்னொரு முக்கியமான விஷயம்... காமெடியிலும் கலக்குவார் ரஜினி என்பதை எடுத்துக் காட்டியவை- எஸ்.பி.எம். இயக்கிய ‘வேலைக் காரன்’, ‘குருசிஷ்யன்’, ‘தர்மத்தின் தலைவன்’ போன்ற படங்கள்தான்.

‘என் தமிழ்நாட்டு அண்ணன்’ என்று ரஜினியால் மனமார புகழாரம் சூட்டப்பட்ட எஸ்.பி.முத்துராமன், இந்த வாரம் தன் ஹீரோவைப் பற்றிப் பேசுகிறார்-

“அந்தக் காலத்துல சிகரெட்டை தூக்கிப் போட்டு வாயில் புடிக்கறது, தலைமுடிய கலைச்சிட்டு ஸ்டைல் காட்டுறதுன்னு ரஜினி வில்லனாவே பெர்ஃபார்ம் பண்ணிக்கிட்டிருந்தப்ப சிவகுமார் சார்தான் பெரிய ஹீரோ. அவர் நடிச்ச படங்கள்லாம் அமோகமா போயிட்டிருந்தது. அப்பதான் எனக்கு அந்த விநோத யோசனை வந்துச்சு.

எஸ்.பி.முத்துராமன்

‘ஹீரோவா நடிக்கிற சிவகுமாரை வில்லனாவும், வில்லனா நடிச்சிட்டுருக்க ரஜினியை ஹீரோவாவும் போட்டா எப்படி இருக் கும்?’ங்கிறதுதான் அந்த யோசனை. இது ஒரு அக்னிப் பரீட்சைதான்னு தெரிஞ்சாலும், மனசுல அந்த எண்ணம் ஆணியடிச்ச மாதிரி நிலைச்சுப் போச்சு. இந்த ஐடியாவுக்குத் தோதா எழுத்தாளர் மகரிஷி யோட ‘புவனா ஒரு கேள்விக்குறி’ங்கற நாவல் நம்பிக்கை கொடுக்கவும், அதே டைட்டில்லயே அந்தக் கதையைப் படமா எடுத்தோம். ‘ரஜினின்னா ஸ்பீடா ஸ்டைல் மட்டு மில்ல, சூப்பரா நடிக்கவும் முடியும்’னு நிரூபிச்ச படம் ‘புவனா ஒரு கேள்விக்குறி’. ஆரம்பத்துல ‘என்ன சார்! டயலாக்கெல்லாம் ரொம்ப பெருசா இருக்கு’னு ரஜினி பயந்தாரு... ஆனா, நான் கொடுத்த என்கரேஜ்மென்ட்ல பிச்சி எடுத்துட்டாரு. ‘ராஜா என்பார் மந்திரி என்பார்’ பாட்டுல ரஜினி காமிச்ச ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான பெர்ஃபார்மன்ஸ், அவருக்குள்ளே இருக்குற அற்புத மான நடிகனை வெளிக்கொண்டு வந்ததைப் பார்த்துட்டு நான் மட்டுமில்ல... தமிழ்த் திரையுலகமே அசந்து போச்சு!

இதே படத்துல ஒரு குரூப் டான்ஸ்... இதை ஷூட் பண்ண சித்தூர் பக்கத்துல ஒரு குக்கிராமத்துக்குப் போயிருந்தோம். ரஜினி நடிக்கிற ஸீனை எடுக்குறப்பதான் பாட்டை ப்ளே-பேக் செய்ற மெஷின் ரிப்பேரான விஷயம் தெரிஞ்சது. அதை சரி பண்ணணும்னா மறுபடி மெட்ராஸ்தான் போகணும். அதனால் ரஜினிகிட்ட, ‘மெட்ராஸ் போய் ரெஸ்ட் எடுத்துட்டு அடுத்த நாள் வாங்க’னு சொன்னேன்.

‘அதுவரைக்கும் இங்கே நீங்க என்ன செய்யப் போறீங்க?’னு திருப்பிக் கேட்டார். ‘நாங்க இங்கேயே எதையாவது சாப்பிட்டுட்டு எங்காவது படுத்துக்கிறோம்’னு சொன் னேன். ஆனா, ரஜினி அதுக்கு சம்மதிக்கலை. எங்க ளோடயே அந்தக் கிராமத்துல தங்கினதோட, அங்க இருந்த பொட்டிக் கடையில பஜ்ஜியும் பிஸ்கட்டும் வாங்கிச் சாப்பிட்டுட்டு ஒரு குடிசைலயே படுத்துத் தூங்கிட்டாரு. மறுநாள் எந்த பந்தாவும் பண்ணாம கிராமத்துல இருந்த குளத்துல குளிச்சுட்டு ஸ்பாட்டுக்கு வந்துட்டாரு. அதை இப்ப நினைச்சாலும் எனக்கு ஆச்சர்யமாத்தான் இருக்கு.

‘முரட்டுக்காளை’ படத்துல வர்ற ‘சீவிடுவேன் சீவி...’ டயலாக் அப்போ ரொம்ப பாப்புலர். நாங்க வெறும் வார்த்தையில எழுதிக் கொடுத்த அந்த வசனத்துக்கு ரத்தமும் சதையும் கொடுத்து, அந்த அளவுக்கு அது பிரபலமாக அதுக்கு உயிர் கொடுத்ததே ரஜினிதான். அந்த டயலாக்கை சொல்லும்போது கைய தூக்கிக் காட்டி, விரலை பாம்பு மாதிரி நெளிச்சு, ஸ்டைலா ‘சீவிடுவேன் சீவி’னு அவர் சொன்னதைக் கேட்டு கிளாப்ஸ் வராத தியேட்டரே இல்லை!

கவிதாலயா பேனர்ல முதன் முதலா வெளி டைரக்டரா படம் பண்ணுன முதல் ஆளு நான்தான். ஒருநாள் கே.பாலச்சந்தர் சார் என்னைக் கூப்பிட்டு அனுப்பினாரு. ‘கதை ப்ளஸ் கமர்ஷியல்னு ஹிட் குடுக்குற டாப் டைரக்டர் நீதான். ஒரு நல்ல கதை இருக்கு. அப்பா, மகன் ரெண்டு கேரக்டர். இந்த ரெண்டு ரோலையும் ரஜினிதான் செய்யிறாரு. நீ ஒரு டைரக்டரா அவருக்குள்ள இருக்குற நடிப்புத் திறமை எல்லாத்தையும் இந்தப் படத்துல கொண்டு வந்துடு’னு கே.பி. சார் சொன்னாரு. அந்தப் படம்தான் ‘நெற்றிக்கண்’!

பொதுவா ஒரு குடும்பத்துல அப்பா யோக்கியமா இருப்பாரு. மகன் தறுதலையா சுத்துவான். ஆனா, இந்தப் படத்துல இது அப்படியே உல்டா... அப்பா தீராத விளையாட்டுப் பிள்ளை. மகன் சாது, இருக்கிற இடமே தெரியாது! ரெண்டு ரோலுக்கும் நல்ல வேரியேஷன் காட்டி கலக்கலா நடிச்சு அசத்தி னாரு ரஜினி.

'நல்லவனுக்கு நல்லவன்' படத்துல ஒரு சண்டைக் காட்சி. வேலைக்குப் போய்ட்டு வீட்டுக்குத் திரும்புறார் ரஜினி... அப்ப வில்லன்கள் விரலை சொடுக்கிச் சொடுக்கி கேப் கொடுத்து ரஜினியை அடிக்கிற மாதிரி ஸ்கிரிப்ட் பண்ணியிருந்தோம். அத்தனை அடி வாங்கியும் திருப்பி ஒரு அடிகூட அடிக் காம ரஜினி வீட்டுக்குப் போயிடுவாரு.

மனைவி ராதிகா, 'அவனுங்கள போய் அடிச்சிட்டு வாங்க'னு சொன்னப்புறம், ஆவேசமா கிளம்புவாரு. அப்ப நாங்க ஸ்கிரிப்ட்ல எழுதாத ஒரு விஷயத்தை செஞ்சார் ரஜினி... அதாவது, வில்லன்ங்க எப்பிடி சொடக்குப் போட்டு அடிச்சாங்களோ, அதேமாதிரி ஸ்டைலா சொடக்குப் போட்டு ஒவ்வொருத்தனையும் பின்னி யெடுக்கிற மாதிரி அடிச்சு நடிச்சாரு. அதைப் பார்த்து நாங்க அசந்து போயிட்டோம். இதான் ரஜினிகிட்ட உள்ள ஸ்பெஷாலிட்டி. ஒரு காட்சியைப் புரிஞ்சுகிட்டு, அந்தக் காட்சியை மெருகேத்தறதுல அவர் தனிக் கவனம் எடுத்துக்குவாருங்கறதுக்கு ஒரு சின்ன உதாரணம்தான் நான் சொன்ன இந்த விஷயம். அதேமாதிரி 'மனிதன்' படத்துல 'சுத்திச் சுத்தி அடிப்பேன்'னு ஸ்டைலா ஒரு டயலாக் சொல்வாரு. உண்மையில, அப்படி ஒரு டயலாக்கே நாங்க எழுதல. ஷூட்டிங் ஸ்பாட்ல அவரே யோசிச்சுப் பேசுன டயலாக்தான் அது. பின்னாடி எல்லா மியூசிக் கச்சேரியிலயும் மிமிக்ரி பண்றவங்க ரஜினியின் டிரேட் மார்க் டயலாக்கா அதையே ஆக்கிட்டாங்க.

இதெல்லாம் ரஜினியோட ஒருபக்கம். 'ஸ்ரீராகவேந்திரா' படம் டைரக்ட் பண்ணுனப்பதான் அவரோட இன்னொரு பக்கமும் எனக்குத் தெரிஞ்சது. அப்போ எவ்வளவு அனுபவங்கள்... அதுலயும் அந்தப் படத்துல க்ளைமாக்ஸ்ல வர்ற ஜீவசமாதி காட்சியை எடுத்தப்ப, எங்க யூனிட்டே சிலிர்த்துப்போன சம்பவம் ஒண்ணு...

ரசிகனின் பார்வையில்...

சிவகங்கை மாவட்ட முன்னாள் ரஜினி மன்ற பொறுப்பாளர் ரவிச்சந்திரன், ரஜினியுடனான தனது நினைவுகளை நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார்...

"1980-ம் வருஷம் ஜனவரி முதல் தேதி தலைவரை நேரில் பார்த்து வாழ்த்துச் சொல்ல சென்னைக்குப் போயிருந்தேன். இரண்டாம் தேதிதான் தலைவரைப் பார்க்க வாய்ப்பு கெடைச்சுது. நான் அவர்கூட நின்னு போட்டோ எடுத்துக்கிட்ட நேரத்துல, 'ஐயப்பன் கோயிலுக்குப் போறப்ப பிள்ளையார் பட்டிக்கு வந்துட்டு போங்க தலைவா'னு கேட்டுக்கிட்டேன். வர்றேன்னு சொன்னவர், சொன்னமாதிரியே ஒரே ஒரு தடவை பிள்ளையார் பட்டிக்கு வந்துட்டுப் போனார். ஒரு ரசிகனோட வார்த்தைக்கு மதிப்புக் குடுத்து அவர் வந்ததை நினைச்சா இன்னிக்கும் எனக்கு ஆச்சர்யமா இருக்கு.

ரவிச்சந்திரன்

பிறகு 1986-ல மறுபடியும் ஒரு தடவ தலைவரை சந்திச்சேன். அதுக்கப்புறம் நேரில் பார்க்கவே முடியல. எப்படியாச்சும் பார்த்தே ஆகணுங்கிற முடிவோட 1994-ம் வருஷம் ரிஷிகேஷுக்கே போயிட்டேன். என்னை அங்கே பார்த்துப் பிரமிச்சுப் போன தலைவரு, 'என்னைப் பார்க்குறதுக்காகவா இவ்ளோ தூரம் வந்தே?'னு பாசமா கேட்டாரு. அவரு அப்படி கேட்டதும், என்னோட பயணக்களைப்பெல்லாம் பறந்தே

போச்சு...” என்று சிலிர்த்துக்கொண்டார்.

ரஜினி என்ற நடிகனுக்குள் புதைந்துகிடந்த நடிப் பாற்றலின் பன்முகங்களை வெளிக்கொண்டு வந்த இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், ரஜினியுடன் இணைந்து பணியாற்றியபோது தனக்குக் கிடைத்த அனுபவங்களை இந்த வாரமும் தொடர்கிறார்...

“ஸ்ரீராகவேந்திரர் படத்தை நீங்கதான் டைரக்ட் பண்ண ணும்னு ரொம்பநாளா சொல்லிக்கிட்டிருந்தாரு ரஜினி. அது கமர்ஷியலா சக்சஸ் ஆகாதோங்கிற யோசனையில ‘செய்வோம், செய்வோம்’னு அந்த விஷயத்தை நான் தள்ளிப் போட்டுக்கிட்டே வந்தேன். அந்த சமயத்துல ரஜினி நூறாவது படத்தை நெருங்கிட்டார். ‘100-வது படமா ‘ஸ்ரீராகவேந்திரர்’ படம்தான் பண்ணணும்’னு அவர் ரொம்ப உறுதியா இருந்தார். அதோட கே.பி.சார்கிட்டே போய், ‘என்னோட நூறாவது படத்தை கவிதாலயாதான் தயாரிக்கணும்... முத்துராமன் சார்தான் டைரக்ட் பண்ணணும்... அவரு ஏனோ தயங்கிக்கிட்டே இருக்காரு. நீங்கதான் அவருகிட்டே எப்படியாவது எடுத்துச் சொல்லி படத்தை டைரக்ட் பண்ண வைக்கணும்’னு சொல்லியிருக்காரு.

எந்த விஷயமானாலும் வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு சடார்னு பேசக்கூடிய பாலச்சந்தர் சார், என்னைக் கூப்பிட்டு அனுப்பினாரு. ‘உங்களுக்குள்ள என்ன பிரச்னை?’னு கேட்டாரு. அதுக்கு நான், ‘சார், இந்தப் பக்திப் படத்தை ரஜினி ரசிகர்கள் ஏத்துக்க மாட் டாங்க... அது மட்டுமல்ல, கமர்ஷியலாவும் படம் பெருசா கைகொடுக்காது’னு சொன்னேன்.

‘இந்தப் பட விஷயத்துல கமர்ஷியலப் பத்தியோ, வியா பாரத்தைப் பத்தியோ நீ கவலைப்படாதே. ரஜினியோட சென்டிமென்ட்டுக்கு நாம மதிப்பு கொடுக்குறதுதான் முக்கியம். கவிதாலயாதான் தன்னோட நூறாவது படத்தைத் தயாரிக்கணும்னு சொல்ற அவரோட அந்த உணர்வுக்கு மரியாதை கொடுக்கணும். இந்தப் படத்துல கவிதாலயாவுக்கு எந்த நஷ்டம் வந்தாலும் அதப்பத்தி எனக்குக் கவலை இல்ல. எப்படியாவது ‘ஸ்ரீராகவேந்திரர்’ படத்தை எடுத்தாகணும்’னு கே.பி. சார் சொன்னார்.

ரஜினியுடன் எஸ்.பி.முத்துராமன்... ‘போக்கிரி ராஜா’ படத்தில்... ‘முரட்டுக்காளை’ படத்தில்...

அதைக் கேட்டு, ‘இதுல இன்னொரு பிராப்ளம் இருக்கு சார்’னு இழுத்தேன். ‘இன்னும் என்னப்பா குழப்பம்... அதையும் சொல்லு’ன்னார்

‘இல்ல சார்... அடிப்படையில நான் சுயமரியாதை குடும்பத்துலேர்ந்து வந்தவன். புராணப் படங்களோட அரிச்சுவடிகூட எனக்குத் தெரியாது. நான் எப்படி சார்...’னு மறுபடியும் இழுத்தேன்.

‘நீ காமெடி, சென்டிமென்ட், சோகம் எல்லாத்தையும் படமா எடுத்திருக்கே... அதனால் இந்தப் படத்தையும் உன்னால ஈஸியா எடுக்க முடியும்... நம்பிக்கையோட எடு’ன்னு சொன்னார்.

அதுக்கப்புறம், நிறைய புராணக் கதைப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பிச்சேன். பழைய புராணப் பட வீடியோ கேஸட்டுகளை வாங்கிப் பார்த்தேன். உண்மையில 'ஸ்ரீராகவேந்திரர்' படத்தை எடுக்கிறதுக்கு எனக்கு ரொம்ப உதவியா இருந்தது, ஏ.பி.நாகராஜன் சார் படங்கள்தான்.

அந்தப் படம் பூஜை போட்டு ஆரம்பமாச்சு. ஷூட்டிங் ஸ்பாட்ல ரஜினி ரொம்ப ஃபாஸ்ட்டா டயலாக் பேசுவாரு. உடனே, 'ரஜினி நீ 'பாயும் புலி' ரஜினி இல்ல... ராகவேந்தர் சுவாமிகளா நடிக்கிறே. அதனால டயலாக்கோட ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானமா பேசு'னு பலமுறை சொல்லியிருக்கேன். அதோட நடக்கிறப்பவும் ரொம்ப ஃபாஸ்ட்டா நடப்பாரு. அப்பவும், 'நீ சுவாமிகள். ஸ்லோவா நட'னு சொல்லணும். அதேமாதிரி செய்வாரு. ஆனா, இதெல்லாம் ரெண்டு நாள்தான். அதுக்குப் பிறகு ஸ்ரீராகவேந்திரராவே அவர் மாறிட்டதைப் பார்த்து யூனிட்ல இருந்த எல்லாரும் அசந்துட்டோம்.

அதுவும் அந்த க்ளைமாக்ஸ் காட்சில ரஜினி ஜீவசமாதி ஆகுறப்போ 'குருவே சரணம்'னு ஒரு பாட்டு வரும். அந்த ஸீன் எடுக்குறப்ப நூத்துக்கணக்கான ஆர்டிஸ்ட்டுங்க இருந்தாங்க. சமாதியில ரஜினி ஸ்ரீராகவேந்திரரா உட்கார்ந்ததும் கடைசியா சமாதி மேல கல்லைத் தூக்கி வைக்கிறப்ப எல்லோருமே நெஜமாவே கதறி அழுதுட்டாங்க.

அந்தப் படம் கமர்ஷியலா பெரிசா போகலை. ஆனா, இன்னிக்கும் மந்த்ராலயா போறவங்க நிறைய பேரு 'ஸ்ரீராகவேந்திரர்' படத்தோட சி.டி-யையும், பாட்டு கேஸட்களையும் அதிகமாக வாங்கிட்டுப் போறாங்க. மொதல்ல மந்த்ராலயத்தில்தான் படத்தை ஆரம்பிச்சோம். படம் முடியுற மூணு மாசம் வரைக்கும் யூனிட்ல இருந்த எல்லோருமே விரதம் இருந்தோம். படம் முடிஞ்ச பிறகு எல்லோருமே மந்த்ராலயம் போயிட்டு வந்தோம்.

'ஸ்ரீராகவேந்திரர்' படத்துல இப்பிடியொரு அனுப வம்னா 'போக்கிரி ராஜா' படத்துல வேறொரு அனுபவம்!

அந்தப் பட ஷூட்டிங்குக்காக திடீர்னு அவுட்டோர் போக வேண்டியதாயிடுச்சு. எல்லாரும் ரெடியாயிட்டோம். ரஜினி வேறொரு ஸ்டூடியோவுல இருந்தாரு. அவர்கிட்டே போயி அர்ஜென்டா போகணும்னு சொன்னதும் 'ஓகே, நான் ரெடி. போகலாம்'னு சடக்குனு கிளம்பிட்டாரு. காரை நேரா அவர் வீட்டுக்கு விடச்சொன்னேன். 'வேணாம் சார், நேரா அவுட்டோருக்குப் போங்க'னு ரஜினி சொன்னார். 'வீட்டுக்குப் போய் டிரஸ் எடுத்துக்க வேணாமா?'னேன். 'அட எதுக்கு சார், அங்க போனவுடனே லுங்கி தரப்போறீங்க. அதை நைட்ல கட்டிக்கப் போறேன்... ஷூட்டிங் ஸ்பாட்ல நடிக்கறதுக்காக எனக்கு தைச்சிருக்கிற டிரஸ்ஸை போட்டுக்கப் போறேன். மறுபடி ராத்திரியாச்சுன்னா கைலி கட்டிக்கப் போறேன். எதுக்கு அனாவசியமா எக்ஸ்ட்ரா டிரஸ்?'னு அவர் சிம்பிளா சொன்னப்ப... அவரு எவ்வளவு பெரிய மனுஷன்னு தோணுச்சு.

திருத்தணிக்குப் பக்கத்துல இருக்கிற ஒரு கிராமத்துல தான் 'போக்கிரிக்கு போக்கிரி ராஜா' பாட்டை ஷூட் பண்ணினோம். ரஜினி டான்ஸ் ஆடுற எடத்துல கூரான கல்லு பரவலா கொட்டிக் கிடந்துச்சு. ராதிகாவையும் தோள் மேல தூக்கிட்டு அவரு அந்தத் தரையில ஆடணும். காலுலயும் செருப்பு கிடையாது. ஆனா ரஜினி எதைப்பத்தியும் கவலைப்படாம கல்லு குத்துனதைத் தாங்கிக்கிட்டு அந்தப் பாட்டுக்கு வலியோட டான்ஸ் ஆடி யிருப்பாரு. எதுக்கு இதை சொல்றேன்னா... அவரு ஒரு விஷயத்தைக் கமிட் பண்ணிட்டா எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக்குவாருங்கிறத சொல்லத்தான்..!

'ப்ரியா' படத்துக்காக ஹாங்காங் போனோம். மலைமேல எல்லாம் ஷூட் பண்ணணும். ஆனா, போனதோ கொஞ்சம் பேர்தான். அதனால மலை மேல பொறுமையா ஏறி இறங்கித்தான் ஷூட் பண்ணனும். தனியாளா ஏறி இறங்கறதுக்குள்ள மூச்சு வாங்கிடும். ஆனா ரஜினி, வெயிட்டான கேமரா ஸ்டாண்டை தன்னோட முதுகு மேல

தூக்கிக்கிட்டு அந்த மலையிலே ஏறி இறங்கினாரு. நான் வேணாம்னு எவ்வளவோ சண்டை போட்டும், அவர் ஸ்டாண்டை மத்தவங்ககிட்ட கொடுக்கவேயில்ல.

அவரோட இந்த கமிட்மென்ட், ஷூட்டிங் ஸ்பாட்டோட மட்டும் நின்னு போகாது. ஷூட்டிங் முடிஞ்சு ஆறு மணிக்குக் கிளம்பிப் போனார்னா, ராத்திரி பதினோரு மணிக்கு போன் பண்ணி, 'என்ன சார் இன்னிக்கு எடுத்த ஸீன் எப்படி வந்திருக்கு... திருப்தியா இருக்கா... இல்லைனா நாளைக்கு மறுபடியும் எடுத்துடலாமா?'னு கேட்பார். அதுமட்டுமில்லாம 'நாளைக்கு என்ன ஸீன், என்ன டயலாக்?'னு கேட்டுக்குவாரு. மறுநாள் எடுக்கப்போற அந்த ஸீனை தன் வீட்ல இருக்கிற ஆளுயரக் கண்ணாடி முன்னால நின்னு நடிச்சு, வசனம் பேசிப் பார்த்து- ஹோம் ஒர்க் பண்ணுவாரு!

எனக்கு ஏவி.எம். செட்டியார் காலத்துலருந்தே ஒரு பழக்கம் உண்டு. நான் ஒர்க் பண்ற படம் ரிலீஸாச்சுன்னா மக்களோட ரியாக்ஷன் என்னான்னு பாக்கிறதுக்காக தியேட்டருக்குப் போயிடுவேன். அதுபோல என் டைரக்ஷன்ல வந்த ஒவ்வொரு ரஜினி படத்தையும் தியேட்டர்ல போய், நேரடியா ஆடியன்ஸ் ரியாக்ஷனைப் பார்த்திருக்கேன்.

படம் ரிலீஸாகி நான் தியேட்டருக்குப் போய் பார்த் துட்டு வந்ததும், ரஜினிகிட்டயிருந்து போன் வரும். இல்லைனா என்னை நேர்ல வரச் சொல்லுவாரு. போனதும், 'ரசிகர்கள் எந்த பாட்டுக்கு டான்ஸ் ஆடினாங்க... எந்த ஸீனை ரொம்ப இன்வால்வா ரசிச்சாங்க... எந்த டயலாக் பேசறப்ப கைத்தட்டினாங்க'னு நுணுக்கமா கேட்பாரு. அதைல்லாம் மனசுல வச்சுக்கிட்டு அடுத்த படத்துல பப்ளிக் டேஸ்ட்டுக்கு ஏத்த மாதிரி நடிச்சு அசத்துவாரு.

புதுசா ஒரு படத்துல நடிக்க போறார்னா அந்தப் படத்தோட கதையை ஒரு தடவைக்கு ரெண்டு தடவை கேட்டு, அவருக்கு டைஜஸ்ட் ஆனாதான் அந்த புராக்ஜெக்ட்லேயே ரஜினி இறங்குவாரு. அரைகுறை மனசோட நடிக்கிற பழக்கம் அவர்கிட்ட அறவே கிடையாது. கதை கேட்கிறப்ப மனசுல ஏற்படுற சந்தேகத்தை எல்லாம் உடனே கேட்டு க்ளியர் பண்ணிக்குவாரு.

ரஜினியை வச்சு நான் படம் பண்ணி ரொம்ப நாளாச்சு. இருந்தும் இப்பகூட தீபாவளி, பொங்கல்னு எல்லாப் பண்டிகைக்கும் அவர் வீட்டுக்குப் போயிடுவேன். அவரு குடும்பத்துல ஒருத்தனா இருந்து சாப்பிட்டுட்டுதான் வருவேன். விசேஷ நாள்ல நான் வேற வேலையில் மாட்டிக்கிட்டு அவர் வீட்டுக்குப் போகலைனா, 'ஏன் எஸ்.பி.எம். சாரை காணோம்?'னு வீட்ல கேட்பாரு. நடிகர்-டைரக்டர் என்ற தொடர்பை மீறி, குடும்ப மெம்பர்ல ஒருத்தரா எங்க நட்பு இப்பவும் தொடருதுன்னா அதுக்குக் காரணம்- ரஜினி சாரோட பக்குவமும் நட்புக்கு அவர் கொடுக்குற மரியாதையும்தான்..." என்று பழைய நினைவுகளில் இருந்து மீண்டு புன்னகைத்தார் எஸ்.பி.எம்.!

ரசிகனின் பார்வையில்....

சோளிங்கர் ஒன்றியத் தலைவரான ரவிக்கு ரஜினி என்ற பெயரைச் சொன் னாலே உடல் சிலிர்க்கிறது.

ரஜினியுடன் ரவி...

“85-ம் வருஷம் ரசிகர் மன்றக் கிளை திறந்த பிறகு மெட்ராஸுக்குப் போனேன். தலைவர் அப்ப ரசிகர்களை சந்திச்சி போட்டோ எடுத்துக்கிட்டு இருந்தாரு. ரசிகர்களோட அவர் போட்டோ எடுத்துக் கிட்டதைப் பார்த்துக்கிட்டே இருந்தப்ப ஒரு ரசிகர்கிட்ட, ‘ஒவ்வொருத்தனும் தன்னோட உழைப்பை மட்டுமே நம்பி வாழணும். நாலு காசு கையில வெச்சிருந்தாத்தான் ஊரு உலகம் நம்மளை மதிக்கும்’னு அட்வைஸ் பண்ணினாரு. அந்த சமயத்துல எங்க குடும்பம் வறுமையில இருந்ததால, மத்தவங்களுக்கு சொன்னதையே எனக்கும் சொன் னதாக நினைச்சி வீட்டுக்கு வந்தேன். அதுக்கப்புறம் 92-ல் இருந்து சோளிங்கர் பகுதி ஒன்றியச் செயலாளராக இருந்து கிட்டு வர்றேன். தலைவர் சொன்ன அட்வைஸ்படி உழைச்சேன். இன்னைக்கு நான் நல்லா வசதியா இருக்கேன். எனக்கு வழிகாட்டின தலைவருக்கு எப்படி நன்றி காட்டறதுன்னு குழம்பிக்கிட்டிருந்தப்ப 2004 நாடாளுமன்ற தேர்தல் வந்தது. ‘பாபா’ பட சமயத்துல இருந்து எங்களுக்கும் பா.ம.க-வுக்கும் இடையில் இருந்த பிரச்னையில் ‘எம்.பி. எலெக்ஷனில் நிற்கிற பா.ம.க வேட்பாளர்களை நாம் எதிர்ப்போம்’னு சொல்லி முதன்முதல்ல அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர்ல ஆயிரக்கணக்கான ரசிகர்களைத் திரட்டித் தலைவருக்கு இருக்கிற செல்வாக்கை முதன்முதலில் நாங்கதான் வெளிப்படுத்தினோம். விழாவைப் பற்றிய முழுத் தகவல்களையும் சத்யநாராயணா மூலம் போனிலேயே கேட்ட தலைவர், ‘எதுக்கும் ரவியைப் பத்திரமா இருக்கச் சொல்லுங்க’ என்றாராம். மேலும் இது தொடர்பாக அவர் என் பெயரை குறிப்பிட்டு அறிக்கை வெளியிடச் செய்தது எந்த தலைவனும் செய்யாத ஒன்று...” என்றார் பரவசத்துடன்.

சூப்பர் ஸ்டார் ரஜினியை அவருடைய அந்தநாள் நண்பர்கள் சிவாஜிராவ் என்று அழைப்பார்கள். ரசிகர்கள் தலைவா என்று பாசத்தோடு கூப்பிடுவார்கள். பெரும்பாலான டைரக்டர்கள் ‘சார்’ என்று விளிப் பார்கள். ஆனால் ரஜினியை ‘டா’ போட்டு அன்று முதல் இன்று வரை உரிமையோடு பேசுபவர் ஒருவர்தான். அவர் ரஜினியின் ஆரம்ப கால தோஸ்த் ராஜ்பகதூர்! ‘சந்திரமுகி’ படத்தில் ‘ரிபீட்டு’ என்று தேவுடா பாடலில் முகம் காட்டியவர்தான் இந்த ராஜ்பகதூர்.

ரஜினி பெங்களூரில் கண்டக்டராக பணியாற்றிய பஸ்ஸுக்கு டிரைவராக இருந்த ராஜ்பகதூர், ரஜினி இரண்டு வருடங்கள் சென்னை திரைப்படக் கல்லூரியில் படித்தபோது அவருடைய உணவு முதல் சிகரெட் வரை அத்தனைக்கும் தன் பாக்கெட்டிலிருந்து பணம் கொடுத்தவர். அவர் இங்கே ரஜினி பற்றிய நினைவுகளை வாசகர்களிடம் பகிர்ந்து கொள்கிறார்.

“இன்னிக்கு வரைக்கும் உங்களுக்கெல்லாம் அவன் (ரஜினி) ‘சூப்பர்ஸ்டார்’. ஆனா, எனக்கு எப்பவுமே அவன் கண்டக்டர் சிவாஜிராவ்தான். கர்நாடக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்ல 10-ஏ நம்பர் வண்டிதான் எங்க ரெண்டு பேருக்கும் தாய்வீடு... குருகுலம் எல்லாமே. அந்த பஸ் அனுமந்த் நகர்லேர்ந்து ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் போகும். காலைல ஆறுமணி ஷிஃப்டை முடிச்சிட்டு ஈவ்னிங் ட்ராமாவுல ஆக்ட் பண்ண போயிடுவோம். இப்படியே மூணு வருஷம் ஒண்ணா வேலை செஞ்சோம். கண்டக்டரா இருக்குறப்பவே ரஜினி பயங்கரமா ஸ்டைல் காட்டுவான். எந்நேரம் பார்த்தாலும் தலைமுடிய ஸ்டைலா கோதிவிட்டுக்கிட்டே இருப்பான். அதோட டிக்கெட்டை ஸ்டைலா கிழிச்சு கொடுப்பான். பாக்கி சில்லறைய கொடுக்குறப்பவும் வேறொரு

ஸ்டைல் காட் டுவான். இந்த ஸ்டைலை பார்க்கவே எங்க பஸ்ஸில கூட்டம் அலைமோதும். எங்க பஸ்ஸுக்கு முன் னாடி போற அதே நம்பர் பஸ் காலியா போகும். இந்த பஸ்ல மட்டும் கூட்டம் தாங்காது. பஸ் ஸ்டாப் பேரை ஸ்டைலா உச்சரிக்கிறது... படிக்கட்டுல ஸ்டைலா ஏறுறது இறங்கறதுன்னு கலக்குவான் ரஜினி. அவன் சினிமாவுக்காக புதுசா ஸ்டைலை கத்துக்கல... இயல்பாவே அவன்கிட்ட அது இருந்துச்சு.

ட்ராமாவுல நடிச்சு முடிச்சதும் ரெண்டு பேரும் தண்ணியடிச்சிட்டு வீட்டுக்குப் போவோம். எவ்வளவுதான் குடிச்சாலும் காலைல ஆறுமணி டியூட்டிக்கு ரெண்டு பேரும் ஆஜராயிடுவோம். போனவருஷம்தான் நான் டிரைவர் வேலையிலிருந்து ரிட்டயர்டு ஆனேன்.

நானும் ரஜினியும் நடிக்கிற நாடகத்துல ரஜினியோட நடிப்பு தனியா தெரியும். நடிக்கிற கேரக்டரோடு தன்னோட ஸ்டைலையும் சேர்த்து பிரமாதமா நடிப்பான். நாடகத்துலேயே இப்படி நடிக்கிறானே, சினிமாவுல சான்ஸ் கிடைச்சா எந்த ரேஞ்சுக்கு போவான்னு பிரமிச்சு போவேன். அந்த சமயத்துல மெட்ராஸ்ல ஃபிலிம் இன்ஸ்டிடியூட்ல ஆக்டிங் கோர்ஸ்-க்கு ஆள் எடுக்கிறாங்கன்னு பேப்பர்ல நியூஸ் வந்துச்சு. அதைப் படிச்சதும், 'டேய் ரஜினி நீ பேசாம கிளம்பி இன்ஸ்டிடியூட்ல சேர்ந்துடு... அங்க வர்ற சினிமா பிரபலங்க கண்ணுல நீ பட்டா டெஃபனிட்டா உன்னை நடிக்க அவங்க கூப்பிடுவாங்க... நீ நடிகனாயிடலாம்'னு சொன்னேன்.

அதுக்கு ரஜினி, 'அது சரி... நீ சொல்ற மாதிரி அங்க போய் சேந்துட்டா செலவுக்கும், சாப்பாட்டுக்கும் என்ன பண்றது'னு திருப்பிக் கேட்டான்.

உடனே, 'டே... நான் எதுக்குடா இருக் கேன்... பணத்தைப் பத்தி கவலைப்படாதே. உன்னை இன்ஸ்டிடியூட்ல படிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு'னு சொல்லி அவனுக்கு தைரியம் சொன்னேன். அதைக் கேட்டு கண்ணுல நீர் முட்ட அப்பிடியே என்னை கட்டிப் பிடிச்சுக்கிட்டான்.

ரகுநந்தன்

ராஜ்பகதூர்

இப்பகூட தனியா சந்திச்சு மனம் விட்டு பேசறப்ப... 'டேய் நீ என்னைவிட பெரிய சாமியாருடா... அப்பவே என் ஜாதகத்தை கரெக்டா கணிச்சு என்னை மெட்ராஸுக்கு அனுப்புனியே அது எப்படிடா?'னு... கேட்டு பச்சைப்புள்ள மாதிரி சிரிப்பான்.

அதுக்கப்புறம் இன்ஸ்டிடியூட் வந்து படிச்சிட்டிருந்தான். கன்னடத்துல நாடகம் போட்டப்பதான் பாலச்சந்தர் சார் ரஜினியை ரசிச்சுப் பார்த்துட்டு 'தமிழை நல்லா பேச கத்துக்க'ன்னு சொல்லியிருக்கார். இதை அவன் என்கிட்ட சொன்னான். 'உனக்கு அவர் சான்ஸ் தரப்போறார்னு நினைக்கிறேன். அதனால இனிமே நீயும் நானும் தமிழில்தான் பேசணும்'னு சொன்னேன். 'ஓகே'ன்னான். ஏன்னா நான் தமிழன். பெங்களூர்ல செட்டிலாயிட்டாலும் இப்பவும் எங்க வீட்ல எல்லோரும் தமிழ்ல தான் பேசுவாங்க. அதுபோல என் சொந்தக் காரங்க நிறையபேரு சென்னையிலதான் இருக்காங்க.

அன்னிலேர்ந்து எதப்பத்தி பேசினாலும் ரெண்டு பேரும் தமிழ்லதான் பேசுவோம். புதுசா எந்த விஷயமா இருந்தாலும் அத சட்டுனு அப்சர்வ் பண்ற திறமை இருந்ததால ரொம்ப குயிக்கா ரஜினி தமிழ் பேச கத்துக்கிட்டான். பாலச்சந்தர் சார் படத்துல முதல் தடவையா சான்ஸ் கிடைச்சப்ப இந்த பிராக்டீஸ் அவனுக்கு ரொம்ப உபயோகமா இருந்துச்சு.

'அபூர்வ ராகங்கள்' படத்துல தொடங்கி இன்னிக்கு 'சிவாஜி' வரை ரஜினி எங்கேயோ போயிட்டான்.

நான் என்ன கஷ்டப்பட்டாலும் சரி... என் நண்பன் ரஜினிய எப்படியாவது ஒரு நடிகனா ஸ்கிரீன்ல பார்க்கணும்ங்கிறதுதான் என்னோட கனவு... ஆனா, அவனைத் தமிழ்நாட்டு மக்கள் சூப்பர் ஸ்டார் ரேஞ்சுக்கு உசரத்துல உட்கார வைப்பாங்கன்னு நெனச்சுக்கூட பார்க்கலே"- சொல்லும்போதே ராஜ்பகதூரின் குரல் தழுதழுத்தது.

"இருந்தாலும் என் ஃப்ரண்ட் பெரிய சூப்பர் ஸ்டார் ஆயிட்டானேன்னு டிரைவர் வேலையை உதறிட்டு அவன்கிட்ட நான் ஓடி வந்துடலை. ஆனா ரஜினி, 'நான்தான் நல்லா சம்பாதிக்கிறேனே... நீ என்கூடவே வந்துடு. என்ன தொழில் பண்ணனும்னு சொல்லு. நானே வச்சித் தர்றேன்'னு பல தடவை வற்புறுத்திருக்கான். 'நம்ம ஃப்ரெண்ட்ஷிப் லைஃப் லாங்கா நீடிக்கணும்னா தூரமா இருக்கிறதுதான் நல்லது'னு சொல்லிக் கடைசிவரைக்கும் அவன் சொன்னத நான் மறுத்துட்டேன்.

இப்பகூட 'ஆசிரம்' பள்ளியோட ஃபங்ஷன் காமராஜ் அரங்கத்துல சமீபத்துல நடந்துச்சு. அங்கே, மேடையிலே

என்னை ஏற்றி அறிமுகப்படுத்தி கௌரவப்படுத்தினான்.... அவன் சூப்பர் ஸ்டாரா இருந்தாலும் என்னைப் பொறுத்த வரை எனக்கு அவன் ஃப்ரண்டுதான். என்னை அவன் வாடா போடான்னு கூப்பிடுவான். உரிமையோட திட்டுவான். நானும் அவனை அப்படி மோசமா திட்டி கூப்பிடணும்னு பாசமா எதிர்பார்ப்பான்" என்று ராஜ்பகதூர் நம்மிடம் பேசிக்கொண்டிருக்கும் போதே அவருடைய செல்போன் சிணுங்கியது.

எதிர் முனையில் பேசியது ரஜினி! சில நொடிகளுக்கு முன்பு ராஜ்பகதூர் சொன்னதை மெய்ப்பிக்கும் வகையில் வாடா போடா என்று ஆரம்பித்து உரிமையுடன் திட்டிக் கொள்ளும் அளவுக்கு நீண்டது அவர்கள் உரையாடல்.

"பாத்தீங்களா சார் இதுதான் எங்க ஃப்ரண்ட்ஷிப்..." என்று பெருமையுடன் சொன்ன ராஜ்பகதூர், "இப்பக் கூட பெங்களூர் வர்றப்ப என் வீட்டுக்கு வந்துடுவான். வந்ததுமே அவனுக்குப் பிடிச்ச சாப்பாடு செய்யச் சொல்லி ரசிச்சு ருசிச்சி சாப்பிடுவான். அப்புறமா நாங்க ரெண்டு பேரும் மாறுவேஷம் போட்டுக்கிட்டு பெங்களூர் பூரா சுத்துவோம். ரோட்டோர டீக்கடையில உட்கார்ந்து டீ குடிப்போம். பீடி வாங்கி பிடிப்போம். நாங்க அந்த காலத்துல ஜாலியா சுத்தின இடங்களைத் தேடித்தேடிப் போயி அந்தக் கால ஞாபகத்தைச் சொல்லி சொல்லி சிரிப்போம். சினிமா தியேட்டர் போய் தரை டிக்கட்ல உட்கார்ந்து மக்களோட மக்களா படத்தை பார்ப்போம். உடுப்பி தர்மசாலா கோயில்களுக்கெல்லாம் பஸ்லேயே டிக்கெட் எடுத்துட்டு கூட்டத்தோட கூட்டமாய் நெருக்கியடிசுச்சிகிட்டு போய்ட்டு வருவோம்..." என்ற ராஜ் பகதூரிடம், "எந்த மாதிரி மாறுவேஷம் போடுவீங்க?" என்று கேட்டோம்.

"வேணாமே! இந்த மாறுவேஷ டூர் எதிர்காலத்துலயும் தொடரும். இப்ப உங்ககிட்ட அந்த வேஷத்தோட அடையாளத்தைச் சொல்லிப் புட்டா... அப்புறம் ரஜினியோட சுதந்திரம் பறிபோயிடும்... அதனால வேண்டாம் பிரதர்" என்று சிரித்தார் ராஜ்பகதூர்.

நாம் ராஜ்பகதூரை சந்திக்க சென்ற போது அவருடன் ரஜினியின் இன்னொரு நெருங்கிய நண்பரான ரகுநந்தன் என்பவரும் வந்திருந்தார். அவரிடமும் ரஜினி பற்றிக் கேட்டோம்.

"ரஜினிகூட நானும் இன்ஸ்டிடியூட்ல கன்னட பிரிவுல படிச்சிட்டிருந்தேன். நண்பன்னு சொல்றதுக்கு ஒரு நல்ல அடையாளம் சிவாஜிராவ்னு சொன்னா தப்பேயில்லை. அன்னியிலேர்ந்து இன்னிக்கு வரைக்கும் ரஜினிகூட ஆக்டிங் கோர்ஸ் படிச்சிட்டிருந்த எல்லோருமே பெரிய நடிகரா ஆகணும்னுதான் ட்ரை பண்ணிகிட்டிருந்தோம். இப்பவும்

அங்கொன்னும் இங்கொன்னுமா என்னையும் சேர்த்து ஒண்ணுரெண்டு கேரக்டர்ல தலைய காட்டி நடிச்சிகிட்டுதான் இருக்கோம். ஆனால், எங்க செட்லேயே சிவாஜிராவ் ஒருத்தர்தான் சூப்பர் ஸ்டாராயிருக்கார். எங்க ஃப்ரண்ட்ஸ்ல வேற யாராவது பெரிய ஸ்டாராயிருந்தால் சிவாஜிராவ் மாதிரி பழச மறக்காம பழகுவாங்களான்றது சந்தேகம்தான். ஏன்னா சினிமா ஃபீல்டுல நன்றின்னா கிலோ எவ்வளோன்னு கேட்பாங்க...

அந்தக் காலத்துலேயே நல்ல பசியா அவருக்கு இருக்கும் போது சாப்பாடு கிடைச்சுதுன்னா அதை அவரு மட்டும் ஒண்டியா சாப்பிடமாட்டாரு. எங்களுக்கு பகிர்ந்து கொடுத்துத்தான் சாப்பிடுவாரு. இப்பவும் அந்தப் பண்பு அப்படியே அவர்கிட்ட பத்திரமாயிருக்கு.

எம்.ஜி.ஆர்., சிவாஜி, என்.டி.ஆர்., ராஜ்குமார் இவங்க எல்லோர் மேலேயும் ரொம்ப பாசமா இருப்பாரு. பெங்களூர் வந்தார்னா ராஜ்குமார் சார் இருந்தப்ப... அவர் வீட்டுக்கு வந்து அவரோட காலைத் தொட்டு கும்பிட்டுத்தான் போவார். ராஜ்குமார் சார் ஹீரோவா நடிச்ச நிறைய படத்துக்கு நான் அசோசியேட் டைரக்டரா ஒர்க் பண்ணியிருக்கேன்.

ராஜ்குமார் சாருக்கு கர்நாடகா பூரா தீவிரமான ரசிகருங்க நிறைய பேரு இருக்காங்க. ஆனா அந்த ராஜ்குமாரே ரஜினியோட பரம ரசிகர் என்பதுதான் ஆச்சர்யமான விஷயம். ரஜினியோட ஸ்டைலை நாமெல்லாம் ரசிக்கிறதைவிட, ராஜ்குமார் சார் ரொம்ப ரொம்ப ரசிப்பாரு. அதுவும் தன்னோட வீட்ல இருக்குற ஹோம் தியேட்டர்ல ரஜினி படத்தை குடும்பத்தோட உட்கார்ந்து பார்ப்பாரு. படையப்பா படத்தை பார்த்தப்ப 'டேய் ரகு, உன் ஃப்ரெண்ட் என்னடா இப்படி சூப்பரா ஸ்டைல் பண்றாரு... பாருடா ரஜினி மாதிரி எவனும் ஸ்டைல் பண்ண முடியாதுடா'ன்னு சொல்லிவிட்டு விசிலடிச்சி ரசிச்சாரு" என்று தனது நண்பனின் நினைவுகளில் லயித்தபடி முடித்தார் ரகுநந்தன்.

ரசிகனின் பார்வையில்...

ரஜினிகாந்த் ரசிகர் மன்றத்தின் தஞ்சாவூர் மாவட்டச் செயலாளராக இருந்தவர் ஹிமாயூன். ரஜினியைப் பற்றிக் கேட்டால் சட்டென நெகிழ்ந்து போகிறார். "ரஜினி என்கிற மலையின் மீது எத்தனையோ சிட்டுக் குருவிகள் மோதி சின்னா பின்னமாகி இருக்கின்றன. தலைவரின் தனித் தன்மை என்னவென்றால் தன்னை மோதியவர்களின் தழும்புகளுக்குக்கூட எண்ணெய் தடவி விடும் இரக்க குணம்தான். இதுநாள் வரையில் பலமுறை தலைவரையும் லதா மேடத்தையும் நேரில் சந்தித்திருக்கிறேன். முதலில் நம்மைப் பற்றியும் நம் ஏரியாவைப் பற்றியும்தான் விசாரிப்பார். அப்புறம்தான் அவருடைய படங்களையும் மன்றங்களைப் பற்றியும் கேட்பார்.

அவரை நெருங்குகிற சூழல் வருகிற போதெல்லாம் 'உங்களுக்குன்னு உயிரைக் கொடுக்க உண்மையான கூட்டம் இருக்கு. அவங்க சும்மா ரசனைக்கு மட்டும் அடிமையாகலை. ஆண்டவன் ரூபத்தில உங்களைப் பார்த்து ஆசை வச்சிருக்காங்க. அவங்களுக்காகவாவது நீங்க அரசியல்ல அடி எடுத்து வைக்கணும்'னு சொல்வோம். ஆனால், எல்லாவற்றையும் கேட்டபடியே மென்மையா சிரிப்பார். அவ்வளவுதான். ஏன்னா அந்த சிரிப்பு தெய்வ ரூபத்தில இருக்கிற குழந்தையோட சிரிப்பு. ஒவ்வொரு தேர்தலும் கடந்து போனது. ஆனாலும் தலைவர் அரசியலில் அடி எடுத்து வைக்கலை. யார் யாரோ தலைவரை சீண்டிப் பார்த்தாங்க. ம்கூம்... தலைவரோட பொறுமையைக் கலைக்க முடியலை. ஆனாலும் தலைவரை தமிழ்நாட்டோட விடிவு காலமா நினைக்கிற லட்சக்கணக்கான மக்கள் அவர் அரசியலுக்கு வர மாட்டாரான்னு ஏக்கம் பிடிச்சுப் போயிட்டாங்க. அதனால 'நாம அழிஞ்சாலும் பரவாயில்லை.. ஆனா தலை வரோட மனசை

மாத்தணும்'னு நினைச்சு மனித வெடிகுண்டா மாறினேன். உண்மைதான்... தலைவருக்கு எதிரா கருத்துச் சொல்ல நாம் எப்ப துணியிறோமோ அப்பவே செத்துட்டோம்கிறதுதான் எங்க மன்றத்தில் உள்ளவங்களோட எண்ணம்.

கடந்த சட்டமன்றத் தேர்தலப்ப கடைசி வரை தலைவர் வாய் திறக் கலை. மனசு ரொம்ப வெறுத்துப் போச்சு. தலைவரைத் திட்டிய பா.ம.க. அங்கம் வகிச்ச தி.மு.க. கூட்டணிக்கு எதிரா செயல்பட முடிவெடுத்து, அப்போதைய முதல்வரான ஜெயலலிதாவை நேரில் சந்தித்து எங்க ஆதரவைச் சொன்னோம். அப்ப ஒரு முக்கிய நபர் 'ரஜினி மன்றங்களைக் கலைச்சிட்டு அ.தி.மு.க-விலேயே ஐக்கியமாகிடலாமே'ன்னு சீரியஸாகவே சொன்னார். எங்களுக்கு அதில் உடன்பாடில்லை. எங்க முக ரியாக்ஷனை சரியா புரிஞ்சுக்கிட்ட ஜெயலலிதா மேடம் "ரஜினியோட ரசிகர்களாகவே இருந்து நீங்க எங்களுக்கு ஆதரவு தரணும். அவரோட பெயர்தான் உங்களுக்கு சக்தியைக் கொடுக்கும்"னு சொன்னாங்க. உண்மையாகவே வியந்து போயிட்டோம்.

ஆனாலும் ஒட்டுமொத்த சக்தியையும் உள்ளடக்கிக் கொண்டு ஒன்றுமறியாத குழந்தை போல இருக்கும் தலைவரை எங்களோட செயல்பாடுகளும் கொஞ்சம்கூட சலனப்படுத்திடலை. ஆனா 'நம்ம ரசிகர்களும் இப்படி நோகடிக் கிறாங்களே'ன்னு அவர் கொஞ்சம் வருத்தப்பட்டார்னு சொன்னாங்க. இருந்தும் ஆரம்பத்தில சொன்ன மாதிரி தன் மேல மோதி விழுந்தவங்களைக் கூட தட்டிக் கொடுக்கிற மாதிரி இன்னும் எங்களை அனுஆதரவா நடத்திக்கிட்டு இருக்கிறார். அதான் அவரோட தனி குணம்" என்கிறார் ஹிமாயூன் சிலாகிப்பின் உச்சத்தோடு!

மாங்குடி மைனர்' படத்தில் ஹீரோவாக, 'காளி' படத்தில் நண்பனாக, 'தனிகாட்டு ராஜா'வில் வில்லனாக, 'என் கேள்விக்கென்ன பதில்' படத்தில் அண்ணனாக 'பணக்காரன்', 'பாட்ஷா' போன்ற படங்களில் அப்பாவாக, 'சந்திரமுகி'யில் மாமனாராக...

இப்படிப் பல கேரக்டர்களில் ரஜினியுடன் திரையில் ஜொலித்தவர் நடிகர் விஜயகுமார். ஆரம்ப காலத்தி லிருந்து இன்று வரை திரையுலகில் ரஜினியின் சக பயணி என்றவகையில், இங்கே ரஜினி பற்றிய தன் நினைவுகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் விஜயகுமார்.

" 'ஆறு புஷ்பங்கள்' படத்துலதான் ரஜினி எனக்குப் பழக்கமானார். அவர்கிட்டே, 'எங்கே தங்கியிருக் கிங்க'ன்னு கேட்டேன். ராயப்பேட்டையில விட்டல் வீட்டுல தங்கியிருக்கிறதா அவரு சொன்னதும் எனக்கு ஆச்சர்யம். ஏன்னா நானும் ஆரம்பகாலத்துல விட்டல் வீட்லதான் தங்கியிருந்தேன். இதை ரஜினிகிட்ட சொன் னதும் ரொம்ப சந்தோஷப்பட்டாரு.

அதுக்கப்புறம் 'என் கேள்விக்கென்ன பதில்' படத்துல நான் அண்ணன், ரஜினி தம்பி மாதவன் சார்தான் டைரக்ஷன். இந்தப் படத்துக்காக சித்தூர் பக்கத்துல உள்ள கிராமத்துல ஷூட்டிங் நடந்துச்சு. ஒருநாள் சாயங் கால நேரம் ஷூட்டிங் யூனிட்ல உள்ளவங்களுக்கும், கிராமத்து ஆளுங்களுக்கும் ஏதோ தகராறு வந்துடுச்சு. அது ஒரு கட்டத்துல ரொம்ப முற்றிப் போற மாதிரி தெரியவும் மாதவன் சார், தன்னோட ஃபியட் காரை கொடுத்து என்னையும் ரஜினியையும் உடனே மெட் ராசுக்குப் போகச் சொன்னாரு. நல்ல இருட்டுல ரெண்டு பேரும் கிளம்பினோம். அந்த நேரம் பார்த்து காரோட ஹெட் லைட் ஒர்க் பண்ணலை. வேற வழியில்லாம ரெண்டு பேரும் ஜன்னல் பக்கமா கைய ஆட்டி கிட்டே ஓரம்போ... ஓரம்போ... பாட்டை பாடிக்கிட்டு வண்டியை ஓட்டுனோம். ஆனா கொஞ்சதூரம் வந்ததுமே இன்ஜினும் சீஸ் ஆயி வண்டி நின்னுடுச்சு. என்ன பண்றதுன்னு புரியலை. அப்ப ரஜினி, 'பஸ்ல போயிடலாம் விஜி'ன்னார்.

அந்த அத்துவானத்துல இருந்து ஒருவழியா நடந்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்தோம். மெட்ராஸ் பஸ்ல நாங்க ஏறி உட்கார்ந்ததும் மத்தவங்க எங்களை அடையாளம் கண்டுக் கிட்டாங்க. 'சார் நீங்கள்லாம்

சினிமா நடிகருங்க... கார்ல போகாம பஸ்ல வர்றீங்களே...'னு கேட்டாங்க. அதுக்கு ரஜினி, 'நாங்களும் உங்களை மாதிரி பஸ்ல போன வங்கதான்... நான் கண்டக்டராவே இருந்தவன்தான்'னு சொல்ல எல்லாரும் ஆச்சர்யமா பாத்தாங்க. அப்புறம் மெட்ராஸ் வந்த பிறகு வாடகை டாக்ஸி பிடிச்சி வீடு போய் சேர்ந்தோம்.

'காளி' படத்துல நான் ரஜினிக்கு ஃபிரெண்டா நடிச்சிருப் பேன். அதுல என்னை வில்லன் ஆளுங்க அடிச்சு ஒரு போட் ஹவுஸ்ஸில் கட்டி வைச்சிருப்பாங்க. அதுக்காக மதுராந்த கம் பக்கத்துல உள்ள ஒரு ஏரியில செட் போட்டிருந்தாங்க. ரஜினி எதிரிங்களை அடிச்சு போட்டுட்டு என்னை தோள்ல தூக்கிட்டுப் போறப்ப போட் ஹவுஸ் தீப்பிடிக்கிற மாதிரி சீன்... ஆனா, யூனிட் ஆளுங்க வழக்கத்துக்கு அதிகமா டீசலை ஊத்திட்டாங்க. இதனால சுத்தியும் தீ ஜிவுஜிவுன்னு எரிய ஆரம்பிச்சுடுச்சு. ரஜினி வெளியே வரும்போது நெருப்பு பந்து ஒண்ணு அவர் முகத்துல அடிக்க துடிச்சிப் போய்ட்டாரு. அந்த ஜுவாலை என் முகத்தையும் பதம் பார்த்துச்சு. ஒரு நிமிஷம் நானும் துடிச்சிட் டேன். அப்புறம் நாங்க பலமா சத்தம் போட்டதும்தான் ஏரித் தண்ணிய ஊத்தி நெருப்பை அணைச்சாங்க.

'விடுதலை' படத்துக்காக சிவாஜிசார், நான், ரஜினி, விஷ்ணுவர்த்தன் எல்லாரும் லண்டன் போயிருந்தோம்... சிவாஜிசாரை மட்டும் வேறொரு ஹோட்டல்லே தங்க வச்சாங்க. நாங்க மூணு பேரும் இன்னொரு ஹோட்டல்ல தங்கியிருந்தோம். இருபது நாள் தொடர்ந்து லண்டன்ல ஷூட்டிங் நடந்துச்சு.

ஒவ்வொரு நாள் ராத்திரியும் நாங்க மூணுபேரும் ஹோட்டல்லயே இருக்கமாட் டோம். லண்டனோட இண்டு இடுக்கு சுத்தி பாக்கறதுதான் எங்க வேலை... இப்படியே இருபது நாளும் கழிஞ்சுச்சு.

கடைசியா ஷூட்டிங் முடிஞ்சி ஊருக்குக் கிளம்ப ஏர்போர்ட்டுக்கு வந்தோம். அப்பப் படத்தோட தயாரிப்பாளர் பாலாஜி சார் பட படப்போட வந்து, 'ஏம்பா ரஜினி உன்னையும், விஜயகுமாரையும், விஷ்ணுவர்த்தனையும் லண்டன் போலீஸ் தேடுறதா பேப்பர்ல வந்திருக்கே... என்னப்பா தப்பு செஞ்சீங்க...'னு கேட்டாரு. அதோட பேப்பரையும் விரிச்சு காண்பிச்சாரு. முதல் பக்கத்துல நாங்க மூணு பேரும் இருக்கற பெரிய போட்டோவை போட்டு 'இவர்களை லண்டன் போலீசார் தேடி வருகிறார்கள்' என்று செய்தி வெளியிட்டிருந்தாங்க. அதைப் பார்த்ததுமே ரஜினி திக் பிரமை பிடிச்ச மாதிரி ஆயிட்டாரு. எங்களுக்கும் அதே நிலமைதான்.

எங்களோட அதிர்ச்சியைப் பார்த்து கொஞ்ச நேரம் ரசிச்ச பாலாஜி சார், திடீர்னு கட கடன்னு சிரிக்க ஆரம்பிச்சிட் டாரு. எங்கக் கைய பிடிச்சி நேரா ஏர்போட்ல இருக்கிற பேப்பர் கடைக்கு அழைச் சிட்டுப் போனாரு. அங்கே உள்ள பேப்பர் கள்ல முதல் பக்கம் மட்டும் ப்ளாங்க்கா இருக்க... மத்த பக்கங்கள்ல நியூஸ் இருக்குமாம். பப்ளிக் யாராவது தங்களைப் பத்தி நியூஸ் வரணும்னு ஆசைப்பட்டு பணம் கொடுத்தா போதும்... உடனே முதல் பக்கத்துல அவங் களைப் பத்தி நியூஸ் போட்டு, உடனே பிரின்ட்டும் பண்ணி தருவாங் களாம். லண்டன்ல இருக்கவங்க மத்தவங்களை கிண்டல் பண்றதுக் காக எலிசபெத் ராணியை சந்திச்ச மாதிரி எல்லாம் விளையாட்டா படத்தோடு நியூஸ் போட்டுக்குவாங் களாம். அப்படித்தான் எங்க போட் டோவை அந்த பேப்பர் கடையில கொடுத்து பிரின்ட் பண்ண வச்சிருக் காரு பாலாஜி சார்... அந்த திகில் காமெடிய இப்ப நினைச்சாலும் சிரிப்பாதான்இருக்கு...

'உழைப்பாளி' படத்துக்காக நானும், ரஜினியும் ஊட்டிக்கு போனப்ப, ரயிலை விட்டு ரஜினி இறங்குனதுமே அவருக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரங்க பாதுகாப்பு கொடுக்க ஆரம்பிச்சுட்டாங்க. அப்போ சினிமா

இண்டஸ்ட் ரில 'பெப்சி' போராட்டம் பெரிய அளவுல நடந்துகிட்டு இருந்துச்சு. அதனாலதான் ரஜினிக்கு பாதுகாப்பு. கார்ல நாங்க ஏறுனதும் போலீஸ்காரங்க துப்பாக்கியோட ட்ரிக்கர்ல விரலை வச்சுகிட்டு ரெண்டு பக்கமும் பாதுகாப்பா வந்தாங்க. அதைப் பார்த்துட்டு நான், 'யப்பா அந்த விரலை எடுங்கப்பா... பள்ளம் மேட்டுல கார் போறப்ப ஆட்டோமேடிக்கா விரல் துப்பாக்கிய அமுக்கிடப் போவுது... அப்புறம் யாருக்குமே பாதுகாப்பு இல்லாம போயிடும்பான்'னு சொன்னதும் ரஜினி விழுந்து விழுந்து சிரிச்சாரு.

ரஜினியுடன் எல்.வி.பிரசாத்...

நான் நடிச்ச 'நாட்டாமை' படத்தை பார்த்துட்டு ரஜினி எனக்கு போன் பண்ணினார். 'விஜி தமிழ்ல நீங்க செஞ்ச கேரக்டரை தெலுங்குல நான் பண்ணப்போறேன். அதுக்காக கேரக்டர் ஸ்டடி பண்ணிக்க நான் நாற்பது தடவை படத்தை பார்த்துட்டேன்'னு சொன்னாரு. தெலுங்கு படத்துல அவர் டிஃபரென்டா சுருட்டு பிடிக்கிற மாதிரி ஸ்டைல் மிக்ஸ் பண்ணி நடிச்சாரு... அது 'பெத்தராயுடு'ங்கிற பேர்ல வெளிவந்து சூப்பர் டூப்பரா ஓடிச்சு. அந்தப் படம் நடிக்கறதுக்கு முன்னாடி ரஜினி படம் தெலுங்கில் ஓஹோன்னு போனது கிடையாது. 'பெத்தராயுடு'க்கு அப்புறமா தான் ரஜினியோட பழைய படங்களை யெல்லாம் தூசு தட்டி தெலுங்குல டப்பிங் பண்ணி வெளியிட்டாங்க... அதுலருந்து அங்கயும் ரஜினியோட கொடிதான்...

'பாபா' படம் சரியா போகலேன் னதும் வாங்குன பணத்தை விநியோகஸ் தர்களுக்கு திருப்பி கொடுத்தது சினிமா வுலக வரலாற்றுலேயே பெரியவர் எல்.வி.பிரசாத் சாருக்குப் பிறகு ரஜினி ஒருத்தர்தான்! இத பத்தி ரஜினிகிட்டே கேட்டப்ப, 'இல்ல விஜி... நாம சம்பாதிக்கிற காசுல நாம வாழ்ந்தாலே போதும். யாரோ கஷ்டப்பட்டு சம்பாதிச்ச காசு நம்மகிட்ட இருந்தா மனசு உறுத்திக்கிட்டே இருக்கும் அதான் திருப்பி தந்துட் டேன்..'னு சொன்னாரு.

ரஜினி அரசியலுக்கு வரணும்னு எனக்கு ரொம்ப ஆசை. 'பணத்தை சம்பாதிச்சிட்டீங்க. புகழும் அளவுக்கு அதிகமா இருக்கு... இதுக்கு மேலே என்ன வேணும் பேசாம மக்களுக்கு சேவை பண்ண அரசியலுக்கு வந்துடுங்கன்னு' அவர்கிட்டயே பல தடவை கேட்டிருக்கேன். அதுக்கு, 'அரசியல்லயும் நான் இறங்கணும்னு தலைவிதி, பிராப்தம், நேரம் இருந்தா அதை யாராலயும் தடுக்க முடியாது... என் அரசியல் பிரவேசம் நடந்தே தீரும்'ன்னு பளிச்சுன்னு சொன்னாரு.

ரஜினியோட பல வருஷமா பழகிட்டு வர்றேன். இந்த பழக்கத்துல அவர்கிட்ட இருந்து எத்தனையோ நல்ல பண்புகளை நான் கத்துக்கிட்டு இருக்கேன். சினிமா உலகத்துல ரஜினிக்கு குறைவான நண்பர்கள்தான் இருக்காங்க. அதுல நானும் ஒருத்தன்னு சொல்லிக்கிறதுலே எனக்கு ரொம்பப் பெருமை.." என்று நெகிழ்ச்சியோடு முடித்தார் விஜயகுமார்.

ரசிகனின் பார்வையில்...

வாணியம்பாடி நகர ரஜினி மன்ற செயலாளர் டி.குருசீனிவாசன், தன் தலை வன் பற்றிய நினைவுகளை பூரிப்புடன் சொல்கிறார்.

"1986-ம் ஆண்டு தலை வரை சந்திக்க சென்னையில் அவரது இல்லத்துக்குச் சென் றோம். அதிகாலையே அவர் 'வேலைக்காரன்' படப்பிடிப்புக்கு சென்று விட்டதால் வீட்டு வாச லிலேயே காத்திருந்தோம். மாலை யில் வீட்டுக்கு வந்த தலைவர் எங்களை நலம் விசாரித்ததோடு இரவு சாப்பாட்டை எங்களுடன் சேர்ந்தே சாப்பிட்டதைப் பார்த்து புல்லரித்துப் போனோம்.

'பாபா' ரீலீஸ் சமயத்தில் பா.ம.க-வுடன் ஏற்பட்ட பிரச்னையில் வாணியம்பாடி போலீஸ் என்னைக் கைது செய்தது. இது தலைவருக்குத் தெரிந்ததும் நான் வெளியே வந்தவுடன் சென்னைக்கு வரச் சொல்லி, 'எந்தப் பிரச்னையையும் அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும்' என அட்வைஸ் செய்தார்.

போன வருடம் தலைவரை சந்தித்த பொழுது, 20 ஆண்டுகளாக நான் கலெக்ட் செய்திருந்த போட்டோக் களில் சிலவற்றை அவரிடம் கொடுத்தேன். அவற்றை ரொம்பவும் ரசித்தவர் 'எவ்வளவு புகைப்படம் சேகரித்தி ருக்கிறீர்கள்' என்று கேட்டார். இரண்டாயிரத் துக்கும் மேல் என்றதும் சிரித்துக்கொண்டே என் தோளில் அன்போடு தட்டிக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆருக்கு 'இதயக் கனி', சிவாஜிக்கு 'வெள்ளை ரோஜா', ரஜினிக்கு 'மூன்று முகம்', 'தங்கமகன்' என வெற்றிப் படங்களை இயக்கித் தந்தவர் ஏ.ஜெகந்நாதன். அவர் இந்த இதழில் ரஜினி பற்றிய தன் நினைவுகளை விவரிக்கிறார்-

"எஸ்.பி.முத்துராமன் டைரக் ஷன்ல ரஜினியோட 'ராணுவ வீரன்' படம் முடிவடையற நிலையில் இருந்துச்சு. அந்த சமயம் என்னை ரஜினிகிட்ட அறிமுகப்படுத்தினார், முன்னாள் அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன். அப்ப ரஜினியிடம், 'நீங்க இவரோட ஒரு படம் பண்ணணும்'னார். அதுக்கு ரஜினி, 'நான் இவர் டைரக்ட் பண்ணின படம் எதையும் பார்த்ததில்லையே'னு சொன்னார். 'எம்.ஜி.ஆர் நடிச்ச 'இதயக்கனி' படத்தோட டைரக்டர் இவர். வேணும்னா உங்களுக்கு அந்தப் படத்தைப் போட்டுக் காட்டச் சொல்றேன்' என்று ஆர்.எம்.வீ. சொல்ல, அதைப் பார்க்க சம்மதித்தார் ரஜினி.

மறுநாள் சத்யா மூவிஸ் மேனேஜர் பழனியப்பன் போனில், 'இன்னிக்கு சாயங்காலம் ஹோட்டல் சவேரால உள்ள ப்ரீவ்யூ தியேட்டர்ல ரஜினி 'இதயக்கனி' படம் பார்க்க வர்றார். நீங்களும் மறக்காம வந்துடுங்க'னு எனக்குச் சொன்னார்.

படம் பார்த்துவிட்டு வெளியே வந்த ரஜினி என் கையைப் பிடிச்சுக்கிட்டு, 'எம்.ஜி.ஆர். சாரையே டைரக்ட் பண்ணின நீங்க என் படத்தையும் நல்லாப் பண்ணுவீங்க. நாம சேர்ந்து ஒர்க் பண்ணலாம்'னு புன்னகைத் தார்.

ஏற்கெனவே 'மூன்றுமுகம்' படத்தின் திரைக்கதை, வசனம் ரெண்டும் பக்காவா இருந்ததால ரஜினியின் கால்ஷீட் கிடைச்சதும் பட வேலைகள் கிடுகிடுன்னு ஆரம்பிச்சுடுச்சு.

கதைப்படி அப்பா-மகன் ரெண்டு கேரக்டரில்தான் ரஜினி முதல்ல நடிக்கறதா இருந்துச்சு. வில்லன் கேரக்டர்ல நடிக்க, அப்போ பிரபலமா இருந்த பல நடிகர்களைக் கேட்டுப் பார்த்தோம். அப்ப எல்லாருமே 'வில்லன் கேரக்டரையும் ரஜினியே செஞ்சா நல்லா இருக்கும்'னு சொன்னாங்க. ரஜினியிடம் இதைச் சொன்னோம். 'நானும் வில்லன் ரோல் பண்ணி ரொம்ப நாளாச்சு. இப்போ பண்ணிட்டாப் போச்சு'னு சந்தோஷமா ஒப்புக்கிட்டார்.

முதல்ல படத்தோட டைட்டிலை 'அலெக்ஸ் பாண்டியன்'னு வெச்சோம். அது கிராமப்புறத்துல இருக்குற பாமர மக்கள் கிட்டே அந்தளவுக்கு ரீச் ஆகாதுன்னு தோணுச்சு. அதனால எல்லாருக்கும் ஈஸியா ரீச் ஆகிற மாதிரி 'மூன்றுமுகம்'னு பேர் வெச்சோம்.

அலெக்ஸ் பாண்டியன் கேரக்டர் மற்ற ரெண்டு கேரக்டர்களைவிட வித்தியாசமா தெரியறதுக்காக ரஜினிக்கு வித்தியாசமா 'விக்' வெச்சோம். முகத்துல முரட்டுத்தனம் தெரியணும்ங்கிறதுக்காக மேக்-அப் மேன் சுந்தரமூர்த்தியை வரவழைச்சு, ரஜினியோட பல்லுக்கு மேலே இன்னொரு பல்செட் வச்சோம். அப்படி வெச்சிப் பார்த்தப்போ பெர்ஃபெக்டா டி.எஸ்.பி-யாவே தெரிஞ்சார் ரஜினி.

ஷூட்டிங் ஸ்பாட்லயே அலெக்ஸ் பாண்டியன் கேரக்டர் ஹிட்டாயிடுச்சு. அந்தப் படம் எடுத்தப்ப ஆர்.எம்.வீரப்பன் அமைச்சரா இருந்தாரு. அவர்கூட அலெக்ஸ் பாண்டியன் ஸீன் ஷூட் பண்றோம்னு தெரிஞ்சா, வந்து ரஜினியோட நடிப்பைப் பார்த்து ரசிச்சுப் பாராட்டிட்டுப் போவாரு.

குறிப்பா, செந்தாமரையோட கும்பல்ல சாராயம் காய்ச்சுற ஆசாமிகளை போலீஸ் ஸ்டேஷனில் டெல்லி கணேஷிடம் பேசிக்கிட்டே ஒவ்வொருத்தரா ஸ்டைலா அடிச்சு லாக்-அப்பில் தள்ளுவார். இப்படி ஒரு காட்சியை முன்னாடி எடுக்கறதா ஐடியா இல்லை. அது மிஸ்டர் ரஜினியே யோசிச்சு நடிச்ச ஸீன்... தியேட்டரில் பயங்கர க்ளாப்ஸ் வாங்கிச்சு.

அதுபோல ரஜினியிடம் செந்தாமரை, 'ஏகாம்பரம் பேரைச் சொன்னா கர்ப்பத்துல இருக்கிற குழந்தைகூட வாயை மூடிக்கும்'னு டயலாக் பேசுவார். அதுக்கு ரஜினி, 'அதே குழந்தைகிட்டே அலெக்ஸ் பாண்டியன் பேரைச் சொன்னா, அது அவங்க அம்மா வாயையும் சேர்த்து மூடிக்கும்'னு டைமிங்கா சொந்தமா ஒரு டயலாக் சொன்னப்ப, யூனிட்ல இருந்த எல்லாரும் கைதட்டிட்டாங்க!

ஜான் கேரக்டரில் நடிக்கும் வில்லன் ரஜினி, சாராயம் குடிக்கிற மாதிரி ஒரு ஸீன் எடுத்தோம். அப்ப ரஜினி திடீர்னு பாட்டில்ல இருக்கற மதுவை உள்ளங்கையில ஊத்தி ஸ்டைலா குடிக்கிற மாதிரி நடிச்சார். இது மாதிரி சடார்னு ஒரு ஸ்டைலை இந்தியாவுல எந்த நடிகருமே செஞ்சதில்லை.

ரஜினி ஷூட்டிங் ஸ்பாட்டுக்குக் காலைல ஆறு மணிக்கெல்லாம் வந்துடுவார். ஏழு மணிக்கெல்லாம் முதல் ஷாட் எடுத்து முடிச்சிடுவோம். ஸ்டன்ட் ஸீன் எடுத்தா, அன்னிக்கு சரியாவே சாப்பிட மாட்டார். வீட்டுலேர்ந்து வர்ற சாப்பாட்டு கேரியர்ல ஒவ்வொரு பாக்ஸா திறந்து எல்லாத்தையும் பார்ப்பார். ரசத்தை மட்டும் குடிப்பார். மத்த ஐட்டங்களை எல்லாம் பக்கத்துல இருக்கறவங் களுக்குக் குடுத்துடுவார். ரஜினியிடம், 'சார், ரசத்தை மட்டும்தான் குடிச்சீங்க. ஏன் எல்லா பாக்ஸையும் திறந்து பார்த்தீங்க?'னு கேட்டா, 'வீட்ல சாப்பாடு நல்லா இருந்துச்சான்னு கேப்பாங்க. என்னென்ன ஐட்டம் இருந்துச்சுன்னு சொல்லணும் இல்லே... சாப்பிடலாம்தான். வயிறு முட்ட சாப்பிட்டுட்டா எப்பிடி ஃபைட் பண்றது'னு சிரிப்பார்.

என்கிட்ட ரஜினி பேசும் போதெல்லாம் மக்கள் திலகத்தைப் பத்திக் கேப்பார். 'எம்.ஜி.ஆர். சார்'னு அவரைக் கூப்பிடுவார். அவரோட பர்சனா லிட்டி, வள்ளல் தன்மை எல்லாத்தையும் புகழ்ந்து பேசுவார். அப்போ முதலமைச் சரா இருந்த எம்.ஜி.ஆர். 'மூன்றுமுகம்' படத்தை பார்க்கணும்னு எங்களுக்கு ஆசை.

படம் ரிலீஸ் ஆகறதுக்கு முன்னாடி ராமாவரம் தோட்டத்துக்கு எம்.ஜி.ஆரைப் பார்க்கப் போனேன். ஏகப்பட்ட பேர் சி.எம்-மைப் பார்க்கறதுக்காகக் காத்துக்கிட்டு

இருந்தாங்க. ஒரு போலீஸ் அதிகாரி, வந்திருக்கறவங்க பேரையெல்லாம் லிஸ்ட் போட்டு எம்.ஜி.ஆர்-கிட்டே கொடுத்தார். 'வக்கீல் ராகவாச்சாரியையும் டைரக்டர் ஜெகந்நாதனையும் தவிர எல்லோரையும் ரெண்டு நாள் கழிச்சு வரச்சொல்லுங்க'னு சொல்லிட்டார் எம்.ஜி.ஆர். அப்ப சாயங்காலம் அஞ்சு மணிக்கு மேல இருக்கும். ஹாலுக்கு வந்த எம்.ஜி.ஆர்., 'ஜெகந்நாதன், கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நான் வக்கீல்கிட்டே பேசிட்டு வந்துடறேன்'னார். மணி ஆறாச்சு... ஏழாச்சு... எட்டாச்சு... ஒன்பது மணிக்குத்தான் எம்.ஜி.ஆரும், ராகவாச்சாரியும் வெளியே வந்தாங்க.

'மூன்றுமுகம் படம் ரொம்ப நல்லா வந்திருக்கு. நீங்க அவசியம் படத்தைப் பார்க்கணும். அதுக்கு அழைக்கத்தான் வந்தேன்'னு சொன்னேன். 'ரொம்ப சந்தோஷம். திங்கள்கிழமை நிச்சயமாப் படம் பார்க்க வரேன்'னு அவரு சொன்னார். அதனால திங்கள்கிழமை மறுபடியும் போனேன். அவர் மூகாம்பிகை கோயிலுக்குப் போயிட்டார்னு சொன்னாங்க.

அதுக்கப்புறம் படம் ரிலீஸாச்சு. ரிலீஸான பிறகு சி.எம்-மைக் கூப்பிடறது மரியாதை இல்லைனு அதை அப்படியே விட்டாச்சு. கலை உலகத்துல எம்.ஜி.ஆரோட வாரிசான ரஜினியின் 'மூன்று முகம்' படத்தை அவர் பார்க்க லைங்கிறது இப்பவும் எனக்கு ஒரு குறைதான்.

ஒரு பேட்டியில ரஜினி யோட மகள் ஐஸ்வர்யா, 'எங்கப்பா நடிச்ச படத்துலயே எனக்குப் பிடிச்ச படம் மூன்றுமுகம்தான்'னு சொல்லி யிருந்தாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு. ஐஸ்வர்யா கல்யாணத்துக்கு நான் போயிருந்தப்போ, தனுஷ்கிட்டே- 'இவர்தான் 'மூன்றுமுகம்' டைரக் டர் ஜெகந்நாதன்'னு ரஜினி அறிமுகப்படுத்தி வெச்சார். அவ்வளவுதான்... தனுஷும், ஐஸ்வர்யாவும் சந்தோஷம் பொங்க மாறிமாறிக் கைகொடுத்தாங்க.

இத்தனைக்கும் 'மூன்றுமுகம்' படத்துல பாடல்கள் சரியா அமையலை. 100 சதவிகிதம் ரஜினியோட நடிப்புக்காக ஓடின படம் அது.

அதுக்கப்புறம் 'தங்கமகன்' படத்தை எடுத்தேன். அப்போ, 'ராத்திரியில் பூத்திருக் கும் தாமரைதான் பெண்ணோ' பாட்டை அடிக்கடி முணுமுணுத்துக்கிட்டே இருப் பார் ரஜினி. அந்த அளவுக்கு அந்தப் பாட்டு அவரை இம்ப்ரஸ் பண்ணிடுச்சு. அந்தப் பாட்டை ஊட்டியில் உள்ள பூக்கள் நடுவுல வித்தியாசமா ஷூட் பண்ணினேன். இப்ப மாதிரி டெக்னாலஜி எல்லாம் இல்லாத அந்தக் காலத்துல ரஜினியையும், பூர்ணிமாவையும் வைத்துப் படம் பிடிச்சோம்.

'தங்கமகன்' ஷூட்டிங்ல கேஷூவலாப் பேசிட்டி ருந்தப்போ, 'உங்களுக்கு எத்தனை குழந்தைங்க?'னு கேட்டார் ரஜினி. 'பெண் குழந்தைங்க ரெண்டு, ஒரு பையன்'னு பதில் சொன்னேன். உடனே 'ரெண்டு 'வெள்ளை ரோஜா', ஒரு 'தங்கமகன்'... மொத்தத்தில் 'மூன்றுமுகம்'னு சொல்லுங்க'னு ரஜினி சொன்னது இப்பவும் ஞாபகத்துல இருக்கு!

1982 அக்டோபர் 1-ம் தேதி, மூன்று முகம் ரிலீஸ். இருபத்தஞ்சு வருஷமாச்சு. இப்பக்கூட நான் ஏதாவது விழாக்களுக்குப் போனா, 'டேய் இவருதான்டா தலைவர் சூப்பர் ஸ்டாரை வெச்சி 'மூன்றுமுகம்' எடுத்த டைரக்டர்'னு ரசிகர்கள் என்னைப் பிரமிப்பா பார்த்துக் கைதட்டுறாங்க. ரஜினியால எனக்குக் கிடைச்சிருக்கிற பெரிய சொத்து அதுதான்" என்று சொல்லும் போதே நெகிழ்கிறது, டைரக்டர் ஏ.ஜெகந்நாதனின் குரல்!

கோலிவுட்டில் நாற்பது வருடங்களாக டான்ஸ் மாஸ்டராகக் கோலோச்சியவர் புலியூர் சரோஜா. டைரக்டர் எஸ்.பி.முத்துராமன் ரஜினியை வைத்து இயக்கிய எல்லாப் படங்களி லும் புலியூர் சரோஜாதான் டான்ஸ் மாஸ்டர். ரஜினியைத்தான் ஆட்டுவித் ததைப் பற்றியும், ரஜினியின் மனிதாபி மானத்தால் தான் ஆட்கொள்ளப்பட்ட தையும் புலியூர் சரோஜா இங்கே மனம் திறந்து சொல்கிறார்-

"ரஜினியை நான் தம்பின்னுதான் கூப்பிடு வேன். அவரும் என்னை அக்கான்னுதான் கூப்பிடுவார். முதல்முதலா 'முரட்டுக்காளை' படத்துலதான் அவர் எனக்கு அறிமுகம். அதில் வர்ற 'பொதுவாக எம்மனசு தங்கம்...' பாட்டுக்கு டான்ஸ் ரிகர்சல் நடந்தப்போ ரஜினி, 'நானும் வரேன்க்கா'னு சொன்னாரு. எனக்கு ஒரே ஆச்சர்யமா போச்சு. ஏன்னா பொதுவாப் படத்தோட ஹீரோக்கள் எல்லாம் ரிகர்சல் ஏரியா பக்கமே எட்டிப் பார்க்க மாட்டங்க. ஆனா ரஜினி ஈகோ பாக்காம, அப்படிக் கேட்டதுதான் எனக்கு ஆச்சர்யமா இருந்துச்சு. ரிகர்சல்ல நல்லா டிரெய் னிங் எடுத்துக்கிட்ட ரஜினி, அப்புறமா ஒரே டேக்குல டான்ஸ் ஆடி ஓகே பண்ணிட்டாரு.

ரஜினி, சில்க் ஸ்மிதா காம்பினேஷன்ல ஏகப் பட்ட பாட்டுங்க ஹிட்டான காலம் அது... அப்படித் தான் 'பாயும் புலி' படத்துல வர்ற 'ஆடி மாசக் காத்தடிக்க...' ஒரு ஸ்டார் ஹோட்டல்ல உள்ள நீச்சல் குளத்துல ஷூட் பண்ணினோம். அப்போ ஷூட்டிங்கை வேடிக்கை பார்க்க வந்த சிலபேர் நீச்சல் குள மேடையில உட்கார்ந்திருந்தாங்க. டான்ஸ் மூவ்மென்ட்ஸைப் பலமுறை சொல்லிக் கொடுத்தும் டேக்குல சில்க் சொதப்பிக்கிட்டே இருந்தாங்க. இதனால வேடிக்கை பார்க்க வந்திருந்தவங்க சிரிச்சுக் கிட்டே இருந்தாங்க. திடீர்னு சில்க்குக்குப் பயங்கர கோபம் வந்துடுச்சு. யாருமே எதிர்பார்க்காதப்ப, தடால்ன்னு சிரிச்சவங் களை எல்லாம் நீச்சல் குளத் துக்குள்ள தள்ளி விட்டுடுச்சு. எல்லாரும் ஷாக்காயிட் டோம். உடனே ரஜினி சில்க்கைக் கூப்பிட்டு ரொம்ப நேரம் அட்வைஸ் பண்ணினாரு.

'நல்லவனுக்கு நல்லவன்' படத்துல 'வச்சுக்கவா உன்னை மட்டும்...' பாட்டு ரொம்ப ஃபாஸ்டா இருக்கும். அந்தப் பாட்டை இப்பவும் எல்லோரும் ரசிக்கிறாங்க. ஆனா அதைப் படமாக்கும்போது ரஜினி பட்டபாடு எங்களுக்குத்தான் தெரியும். அந்த பாட்டுல ரஜினியும் மும்பை பொண்ணு ஒண்ணும் டான்ஸ் ஆடியிருப்பாங்க. அவங்க போட்டுருக்கிற டிரஸ் முழுக்க கலர் பல்புங்க எரிஞ்சு கிட்டே இருக்கும். டிரஸ்ஸுக்கு வெளியில பல்பும் உள்ளுக்குள்ள வயரும் இருக்கும். அதனால டான்ஸ் ஆடுறப்போ ரெண்டு பேருக்குமே நிறைய தடவை ஷாக் அடிச்சது. இதைப் பொறுக்க முடியாமல், அந்த மும்பை பொண்ணு அடிக்கடி பல்ப் பொருத்துன காஸ்ட்யூமை கழற்றிட்டு வலிதாங்க முடியாம புலம்பும். ஆனா, ரஜினி ஷாக் வலியைத் தாங்கிக்கிட்டே முகத்துல அந்தக் கஷ்டத்தைக் காட்டிக்காம சிரிச்சுக்கிட்டே டான்ஸ் ஆடி முடிச்சாரு. அந்த டைம்ல ரஜினி பெரிய ஸ்டார். அவர் நினைத்திருந்தா அந்த காஸ்ட்யூமையும், டான்ஸ் கம்போஸிங்கையும் மாத்தச் சொல்லி இருக்கலாம். ஆனா அப்படி செய்யலே... அதான் ரஜினி!

சரோஜா

'ராஜா சின்ன ரோஜா' படத்துக்காக ஊட்டில 'சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா சின்ன குழந்தை யும் சொல்லும்' பாட்டை ஷூட் பண்ணினோம். ரஜினி ரெண்டு மூணு டேக் வாங்கிக்கிட்டே இருந்தார். எனக்கு முழுத் திருப்தி இல்லை. அதனால ரீ-டேக் எடுத்துட்டே இருந்தேன். அதைப் பார்த்து டென்ஷனான எஸ்.பி.முத்துராமன் சார் என்கிட்ட வந்து, 'இதுக்கு முன்னாடி எடுத்த டேக்கை வெச்சே சரிப்பண்ணிக்கலாம்'னு கோபமா சொன்னார்.

'இல்லை சார், எனக்குத் திருப்தியில்லை. அதான்...'னு இழுத்தேன். உடனே எஸ்.பி.எம்., 'ரஜினி வலது தோள்பட்டை இறங் கிடுச்சு. அவரு வலியில துடிச் சுட்டு இருக்காரு. நீ என்னடான்னா ரீ-டேக் போயிட்டே

இருக்கியே. உன் மனசுல என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே?'னு காதுகிட்டே வந்து கத்தினாரு. அப்பத்தான் எனக்கு ரஜினி தோள்பட்டை வலியோட டான்ஸ் ஆடுற விவரமே தெரிஞ்சுது.

ஆனா அப்பகூட ரஜினி, 'அக்கா! உங்களுக்கு ஓகே ஆகறவரைக்கும் டேக் எடுங்க'னு சொன்னார். நான் நெர்வஸாயிட்டேன். கடைசியில எனக்குப் பிடிச்ச மாதிரி டான்ஸ் ஆடிமுடிச்சுட்டுதான் போனாரு.

அப்போ ஊட்டியில பயங்கர குளிர். ரஜினி என்கிட்டே வந்து 'டான்ஸாடுற கேர்ள்ஸ் எத்தனை பேர்?'னு கேட்டுட்டுப் போனார். அதுக்கப்புறம் பார்த்தால் யூனிட்ல உள்ள எல்லாருக்கும் ஸ்வெட்டர் ரஜினிகிட்ட இருந்து வந்துசேர்ந்தது. அப்போ எனக்கு எம்.ஜி.ஆர். ஞாபகம்தான் வந்துச்சு. ஏன்னா, அவர் சினிமாவுல இருந்தவரைக்கும் நாங்க நிறைய பேர் அவர் வீட்டுலதான் பொங்கல் கொண்டாடுவோம். எம்.ஜி.ஆர். தனக்கு எந்த ரகத் துணி எடுக்கிறாரோ அதே ரகத்தைத்தான் பாத்ரூம்ல வேலை செய்றவருக்கும் எடுத்துக் கொடுப்பார். அதே மாதிரி வீட்டு வேலை செய்ற பொண்ணுக்கு என்ன தரத்துல புடவை எடுக்கிறாரோ, அதையேதான் ஜானகி அம்மாவுக்கும் எடுத்துத் தருவார். பொங்கலன்னிக்கு அவரு வீட்ல புதுத் துணி போட்டு, சாப்பிட்டுட்டு, ஒரு ரூம்ல இருப்பார். தன் பக்கத்துல ரெண்டு பெட்டி வெச்சிருப்பார். அவரைப் போய்ப் பார்க்கும்போது பெட்டிக்குள்ளே கையை விட்டு அள்ளியள்ளிக் கொடுத் துட்டே இருப்பார். சிலருக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும். வேற சிலருக்கு மூணாயிரம் இருக்கும். அது அவங்க அவங்க அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. இதை ஒருமுறை நான் ரஜினி தம்பிகிட்ட சொன்னப்ப ஆச்சர்யமா கேட்டுக் கிட்டாரு.

இதுபோல நிறைய பொருத்தம் எம்.ஜி.ஆருக்கும், ரஜினிக்கும்! 'நாடோடி மன்னன்' படம் முடிஞ்சதும் படத்துல வர்க் பண்ணின எல்லாருக்கும் மோதிரம் பரிசா கொடுத்தார் எம்.ஜி.ஆர். அதேமாதிரி 'தம்பிக்கு எந்த ஊரு' படம்

ம் மோதிரம் தந்தார். அதனால தம்பியை 'ரெண்டாவது எம்.ஜி.ஆர்!'னு

கண்ணு சவுக்கி யமா?' பாட்டு சாதாரணமா எடுக்கிற மாதிரிதான் ஐடியா ' சின்னச் சின்ன ஸ்டைல் மூவ்மென்ட்ஸ் கொடுத்தா நல்லாயிருக்கும்'னு ார்.

'வேலைக்காரன்' படத்துல வர்ற 'வா வா வா... கண்ணா வா'ங்கிற பாட்டைப் படம் பிடிக்கறதுக்காக காஷ்மீர் கிளம்பிக்கிட்டிருந்தோம். அப்போ அங்கே மைனஸ் டிகிரி குளிர். ஆனாலும் யூனிட்டோட கிளம்பிட்டோம். அங்கே போனா காலைக் கீழே வெச்சா ஊசிக் குத்துற

மாதிரி பனி காலைக் குத்துது. அங்கே காங்கடி என்ற பேர்ல ஒரு சின்ன சட்டியில நெருப்பைப் போட்டு அதை விற்பாங்க. அதை வாங்கி வயித்துல கட்டிக்கிட்டு சால்வையால உடம்பை மூடிக்கணும். சட்டியில உள்ள தணல் ஓரளவு குளிரைத் தாங் கும். அந்த காங்கடியை வாங்கி எல்லாருக்கும் கொடுத்தார் ரஜினி.ஆனா, அவரும் அமலாவும் மட்டும் அதை வாங்கலை. ஏன்னா அதை வயித்துல கட்டிக்கிட்டு டான்ஸ் ஆடறது கஷ்டம். இதே படத்தில் 'மாமனுக்கு மைலாப்பூருதான்' பாட்டை டெல்லியில உள்ள ஸ்டார் ஹோட்டல்ல எடுத்தோம். அப்ப ரஜினிகூட டான்ஸ் ஆட ஒரு மாமி கேரக்டர் தேவைப்பட்டுச்சு. மெட்ராஸ்லேர்ந்து அவங்க வர்ற வரைக்கும் டைம் இல்லை. அதனாலே ரஜினி எஸ்.பி.எம்- கிட்டே 'பேசாம அக்காவையே ஆடச் சொல்லுங்க'னு சொல்லி என்னை நடிக்க வைத்தார்.

'குரு சிஷ்யன்' படத்தை 22 நாள்ல முடிச்சாங்க. அது கௌதமிக்கு முதல் படம். அதுல 'ஜிங்கிடி ஜிங்கிடி' பாட்டுக்கு ரஜினியோட ஸ்பீடுக்கு அவரால ஈடுகொடுத்து டான்ஸ் ஆட முடியலை. அதனால ஒருநாள் முழுக்க ஒத்திகை பார்த்துட்டுதான் டான்ஸ் ஆடுனாங்க. இதுல வர்ற 'கண்டுபிடிச்சேன் கண்டு பிடிச்சேன்' பாட்டை மூணே மணி நேரத்துல டான்ஸோட தன் ஸ்டைலையும் மிக்ஸ் பண்ணி அசத்தினார் ரஜினி.

'மலையூர் மம்பட்டியான்' படத்தை இந்தியில் எடுத் தப்போ என்னைத்தான் டான்ஸ் மாஸ்டரா போடணும்னு சொன்னார் ரஜினி. அதில் ரஜினி, சரிகா, ஓம்பூரி ஆடின குரூப் சாங் நல்லா வந்திருக்குன்னு சொன்னார்.

அவுட்டோர் ஷூட்டிங் எங்கே போனாலும் அங்கே இருக்கிற பெரிய ஸ்டார் ஹோட்டலில் யூனிட்ல இருக்கிற எல்லாருக்கும் விருந்து கொடுப்பார். ஒரே ஆட்டம், பாட்டு, கொண்டாட்டம்தான். கேமரா இல்லாம ஜாலியா டான்ஸ் ஆடுவார் ரஜினி.

நான் என்மகனை ஆக்ஸிடென்ட்ல பறிகொடுத்தப் புறம் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் கிடந்தேன். இதைக் கேள்விப்பட்ட ரஜினி என்னை வெளிநாடு அழைச்சுட்டுப் போய், தன் சொந்த செலவில் ட்ரீட்மென்ட் எடுக்க ஏற்பாடு செஞ்சாரு. ஆனா அதுக்குள்ளே எனக்கு சரியாயிடுச்சு.

இடையில் ஒரு தடவைஎன்னைப் பார்த்தார். 'என்ன உதவி வேணும்னா லும் தயங்காமக் கேளுங்க'ன்னார். அதுக்கு நான் 'கடவுள் புண்ணியத் துல காசு பணத்துக்குக் குறை வில்லை. என் மகன் சின்ன வயசுலேயே இறந்துட்டான். அதான் மனசு தாங்கலே'னு சொன்னேன். 'கவலைப்படா தீங்க, கடவுள் எல்லாப் பூக்களையும் எடுத்துக்கற தில்லை. தனக்குப் பிடிச்ச பூவை மட்டும்தான் எடுத்துக் கறான். அப்படிப்பட்ட புனித மான பூதான் உங்க மகன்'னு ஆறுதல் சொன்னார். மேலும் 'உங்க மகன் உயிரோட இல்லைனு நினைக்காதீங்க. என்னை உங்க மகனா ஏத்துக்கங்க'னு சொன்னார். அதாங்க ரஜினி!" என நெகிழ்ந்துபோய் முடித்த போது- புலியூர் சரோஜாவின் கண்களில் கண்ணீர்ப் பூக்கள்!

ரஜினிக்கு சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்தைக் கொடுத்தவர் தயாரிப்பாளர் தாணு. 'பைரவி' படம் முதல் இன்று வரையிலும் ரஜினியின் நெருங்கிய நண்பராக இருக்கும் தாணு, தனக்கும் ரஜினிக்கும் இடையே நடந்த சில சுவாரஸ்யமான சம்பவங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்...

"பைரவி படம் ரிலீஸானப்ப சென்னை விநியோக உரிமையை நானும் என் ஃபிரெண்டும் சேர்ந்து வாங்கினோம். படத்துக்கு போஸ்டர் அடிக்கறதுக்காகவும் பேப்பர்ல விளம்பரம் தர்றதுக்காகவும் போட்டோ

தேவைப்பட்டுச்சு. அதுக்காக ஸ்டில்ஸ் ரவியைத் தேடிப்போனோம். அவர்கிட்ட இருந்த படங்கள்ல பளிச் பளிச்சுன்னு பக்காவா நேர்த்தியா ரஜினி போஸ் கொடுத்திருந்தார். ஒரு புதுப் படம் ரிலீஸாகுறப்ப பெரிய போஸ்டர் அடிப்பாங்க. வழக்கமா இந்த போஸ்டரை நாலு பார்ட்டா அச்சடிச்சு முழு போஸ்டரா ஒட்டுவாங்க. ஆனா சினிமா வரலாற்றிலேயே முதல் முறையா பைரவி படத்துக்காக ஆறு துண்டுகள் கொண்ட மெகா போஸ்டர் அடிச்சேன். அது அப்பவே பெரிய பரபரப்பை உண்டாக்கிச்சு.

அதுக்கப்புறம் பிளாசா தியேட்டர்ல ரஜினிக்கு முப்பத்தஞ்சு அடியில கட் அவுட் வச்சேன். 'இவ்ளோ பெரிசா வைக்காதீங்க. கீழே விழுந்துடப்போவுது'னு கார்ப்பரேஷன்காரங்க சொன்னாங்க. அது விழாம இருக்கறதுக்காக சாரமெல்லாம் கட்டி வெச்சேன். இதைக் கேள்விப்பட்ட ரஜினி அந்த கட் அவுட்டை யாருக்கும் தெரியாமல் போய்ப் பார்த்திருக்கார்.

படத்துக்குப் பெரிய ஓப்பனிங் கிடைச்சது. ரிலீஸ் ஆன நாள்லேர்ந்து தொடர்ந்து படம் ஹவுஸ்ஃபுல்தான். ரசிகர்களோட ரியாக்ஷனைப் பார்க்க ராஜகுமாரி தியேட்டருக்குப் போனேன். அப்ப கே.என்.சுப்பு, பஞ்சுஅருணாசலம் இவங்களோட கறுப்பு பேன்ட்டும் பிங்க் கலர் டி சர்ட்டும் போட்டுக்கிட்டு ஆடியன்ஸோட ஆடியன்ஸா படம் பார்க்க வந்திருந்தாரு ரஜினி. இடைவேளை வந்துச்சு. ஃபாஸ்டா லீட்டை விட்டு எந்திரிச்ச ரஜினி, 'டிஸ்ட்ரிபியூட்டர் எங்கே?'ன்னு கேட்டிருக்காரு. உடனே என்னை அவர்கிட்டே அறிமுகப்படுத்தினாங்க. என் கையை கெட்டியாப் பிடிச்ச ரஜினி, 'பப்ளிசிட்டி பியூட்டிஃபுல். ஃபென்டாஸ்டிக்'னு கட்டிப்புடிச்சுக்கிட்டார்.

மறுநாள் பேப்பர்ல 'தி கிரேட் சூப்பர் ஸ்டார் ரஜினியின் பைரவி'னு விளம்பரப்படுத்தியிருந்தேன். அதைப் பார்த்த ரஜினி ரொம்ப டென்ஷன் ஆயிட் டார். உடனே என் ஆபீஸ் தேடி தயாரிப்பாளர் கலை ஞானமும், டைரக்டர் பாஸ்கரும் வந்து, 'ரஜினி ரொம்ப ஃபீல் பண்றாரு. எம்.ஜி.ஆர்., சிவாஜி மாதிரியான சீனியர் கலைஞர்கள் இருக்கும்போது அவங்க மனசு புண்படற மாதிரி தி கிரேட் சூப்பர் ஸ்டார்னு போட் டது தப்புன்னு வருத்தப்படறாரு'ன்னாங்க. 'எனக்கு அவரைப் பார்த்தா சூப்பர் ஸ்டாரா தெரியுது. அதான் அப்படிப் போட்டேன். நாளைக்கு வர்ற விளம்பரத்தைப் பாருங்க'ன்னு சொல்லி அனுப்பிட்டேன்.

போஸ்டர்லயும் பேப்பர்லயும்தான் சூப்பர் ஸ்டார்னு விளம்பரம் செஞ்சேன். வெள்ளித்திரையில் போடுற பாக்கியம் எனக்குக் கிடைக்கலை. இந்தப் பட்டத்தை புரட்சிதாசன்தான் 'நான் போட்ட சவால்' படத்துல முதன் முதலா ஸ்கிரீன்ல போட்டார்.

தெய்வ சக்திக்கும் தீய சக்திக்கும் நடக்கற போராட் டத்தை மையமா வெச்சு 'சக்தி' கண்ணன் டைரக்ஷன்ல 'யார்' படத்தைத் தயாரிச்சேன். அந்தப் படத்துல கெட்ட சக்தியை எதிர்த்து சாமிகிட்டே பிரார்த்தனை பண்ற மாதிரி ஒரு ஸீன்ல ரஜினி நடிச்சார். அந்தக் காட்சியை ரஜினி வீட்டிலேயே ஷூட் பண்ணினோம். 'தாணு, படம் ரிலீஸான பிறகும்கூட நான் நடிச்சிருக்கறதை விளம்பரப்படுத்தக் கூடாது. ப்ராமிஸ் பண்ணித் தரணும்'னு கேட்டார். நானும் ஒப்புக்கிட்டேன்.

ரஜினியுடன் தாணு...

'தெருப்பாடகன்' பட பாடல் கேஸட் வெளியீட்டு விழாவில்...

படம் ரிலீஸ் ஆச்சு. தொண்ணூறாவது நாளன்னிக்கு ரஜினியோட பிறந்தநாள். அப்ப ஒரு வேலை செஞ்சேன். 'யார்' படத்துல ராகவேந்திர சாமியை ரஜினி கும்பிடுற மாதிரி ஒரு ஸ்டில் இருந்துச்சு. அதைப் பெரிசா கட்-அவுட் செஞ்சு 'இன்று பிறந்த நாள் கொண்டாடும் ரஜினியே! நீங்கள்

ஸ்ரீராகவேந்திரர் அருளால் நூறாண்டு காலம் வாழ்க'னு போட்டு கீழே சின்னதா 'யார்- 90-வது நாள்'னு போட்டிருந்தேன்.

அன்னிக்கு 'விடுதலை' படத்துக்காக சுஜாதா டப்பிங் தியேட்டருக்கு வந்திருந்த ரஜினி, 'என்கிட்டே கொடுத்த சத்தியத்தையும் காப்பாத்திட்டு அதே சமயம் டைமிங்கா பார்த்தே அன்னிக்கு கட்-அவுட் வச்சி அசத்திட்டீங்க'ன்னு பாராட்டினார். அப்ப 'யார் படத்தோட நூறாவது நாள் விழாவுல கலந்துக்கணும்'னு கேட்டேன். அவரும் சரின்னார். ஃபங்க்ஷனுக்கு முன்கூட்டியே வந்தவர், 'இதுவரைக்கும் மேடையில் பேசிப் பழக்கமில்லை. நெர்வஸா இருக்கு தாணு'ன்னார். விழா ஆரம்பம் ஆச்சு. மேடையில் எம்.ஜி.ஆர்., ஆர்.எம்.வீரப்பன் மாதிரி பெரிய ஆட்களுக்கு ஃபைனான்ஸ் பின்னணியா இருந்த யாசின், ராமானுஜம் போன்றவங்க இருந்தாங்க.

ரஜினி பேச எழுந்தார். 'ஒரு பரம ஏழைக்கு ஒரு பணக்கார ஃபிரெண்டு. அவன் மேல பாசம் அதிகம் வச்சதால அந்த ஏழை அடிக்கடி அந்த ஃபிரெண்டைப் பார்க்கப் போவான். அப்போ தெல்லாம், பணக்கார ஃபிரெண்ட் போனில் பத்து லட்சம், இருபது லட்சம் என்று பணத்தைப் பத்தியே பேசிக்கிட்டு இருப்பான். பார்க்க வந்த நண்பனைக் கண்டுக்கவே மாட்டான். ஒருநாள் ஏழை நண்பன் அவனைப் பார்க்க போனபோது பணக்கார நண்பன் வழக்கம்போல் போனில் பேசாமல் சோக முகத்துடன் இருந்தான். 'என்ன நண்பா, என்ன பிரச்னை?' என்று ஏழை கேட்க 'என் பிரச்னையை உன்னால தீர்க்க முடியுமா?' என்று எகத்தாளமாகச் சிரித்தபடி, 'அரை மணி நேரத்தில் இருபது லட்ச ரூபாய் தேவை. உன்னால தரமுடியுமா?'ன்னு கேட்டான். பதிலேதும் சொல்லாத ஏழை டேபிளிலிருந்த போனை எடுத்து ஒரு நம்பருக்குப் பேசி உடனே இருபது லட்ச ரூபாய் எடுத்துவரச்சொல்லி போனை வைத்தான். பணக்கார நண்பனுக்கு ஒரே ஆச்சர்யம். அரைமணி நேரத்தில் சொன்ன மாதிரியே ஒருவர் பணத்தைக்கொண்டு வந்து கொடுத்து சல்யூட் அடித்துவிட்டுப் போக... பணக்காரன் அசந்துபோனான். 'இது எப்படி?' என்று அவன் திகைத்துப்போய் கேட்டான். அதற்கு, 'நீ பணத்தைத்தான் இதுவரை சம்பாதித்துக் கணக்குப் பார்த்தாய். நான் நிறைய மனிதர்களை சம்பாதித்து இருக்கிறேன். அதுதான்' என்றான். இந்தக் கதையைச் சொன்ன ரஜினி, 'அந்த ஏழை நண்பனைப் போல மேடையில் உள்ள ஏகப்பட்ட பெரிய கோடீஸ்வர மனிதர்களை தாணு சம்பாதித்து இருக்கிறார்' என்று பேச - மேடையில் இருந்தவர்களும் கூட்டத்தில் இருந்தவர்களும் பலமாகக் கைதட்டினாங்க. பேசறதுக்கே நெர்வஸா இருக்குன்னு சொன்னவரு முதல் மேடையிலேயே செஞ்சுரி அடிச்சுட்டார். அதே ஸ்டேஜ்ல 'சீக்கிரமா தாணுவுக்கு ஒரு படம் பண்ணுவேன்'னு சொன்னார்.

ஒரு நாள் எதேச்சையா அவரைப் பார்த்தப்போ டைரக்டர்கள் சக்தி - கண்ணனை அழைச்சிட்டு வரச்சொன்னார். அவங்ககிட்டே, 'தாணு தயாரிப்பில் நடிக்கப் போறேன். கதையை ரெடி பண்ணுங்கன்'னு சொன்னார். அதுக்கப்புறம் சக்தி - கண்ணன் ரெண்டு பேரும் பிரிஞ்சுட்டாங்க. அந்த ப்ராஜக்ட் ட்ராப் ஆயிடுச்சு.

திடீர்னு ஒருநாள் போன் பண்ணி வரச்சொன்னார் ரஜினி. போய்ப் பார்த்தேன். 'தாணு நாம படம் பண்றதுக்கு முன்னாடி நடுவுல ஒரு படம் பண்ணுங்க. இந்தியிலே 'காலியா'ன்னு ஒரு படம் பார்த்தேன். ரொம்ப நல்லாயிருக்கு. அதை விஜயகாந்தை ஹீரோவா வெச்சு செஞ்சா நல்லாயிருக்கும்'னார்.

அந்தப் படம்தான் 'கூலிக்காரன்'. அந்தப் படம் முடிந்தபிறகு படத்தின் முதல் பிரின்ட்டை விஜயகாந்த் பாக்கலை... டைரக்டர் பாக்கலை... தயாரிப்பா ளரான நானும் பார்க்கலை. தி.நகர்ல இருக்கிற தேவி ஸ்ரீதேவி பிரிவ்யூ தியேட்டர்ல தனியா உட்கார்ந்து படத்தைப் பார்த்து ரசிச்சார் ரஜினி.

‘தெருப்பாடகன்’ பட பாடல் கேஸட் வெளியீட்டு விழாவில் கலந்துக் கணும்னு கலைஞர்கிட்டே கேட்டேன், சம்மதித்தார். அந்த விழாவில், ‘தாணுவுக்கு நான் ரசிகன், எனக்கு தாணு ரசிகர். அவர் எந்த நேரத்தில் எனக்கு சூப்பர் ஸ்டார் பட்டம் கொடுத்தாரோ... இப்ப வரைக்கும் நான்தான் சூப்பர் ஸ்டாரா இருக்கேன்’னு ரஜினி பேசினார்.

ஒருநாள் கலைஞரோட பேசிக்கிட்டிருந்தப்போ, ‘ஏன்யா இந்த ரஜினிக்கு எவ்ளோ பெரிய மாஸ் இருக்கு... அவரு என்னடான்னா ஷேவ்கூடப் பண்ணாம வெள்ளை தாடியோட வெளியே சுத்துறார். எம்.ஜி.ஆரை எடுத்துக்கோ... கண்ணுக்குக் கீழே லேசா கருவளையம் விழுந்ததும் கூலிங் கிளாஸ் போட்டாரு. தலைமுடி உதிர ஆரம்பிச்சதும் குல்லா போட்டுக்கிட்டாரு. ரஜினியும் எம்.ஜி.ஆர். மாதிரி பெரிய நடிகர். அவர்கிட்டே நான் சொன்னேன்னு போய் ஷேவ் பண்ணச் சொல்லுய்யா’ன்னார். அதை அப்படியே ரஜினியிடம் சொன்னேன். அதைக்கேட்டு ஆச்சர்யப்பட்டுப் போனார்.

மறுநாள் குட்லக் தியேட்டரில் கலைஞர், ராஜாத்தி அம்மாள், கனிமொழி ஆகியோர் மாடியில் படம் பார்த்துவிட்டு லிஃப்ட் மூலம் கீழே வர, படம் பார்ப்பதற்காக லிஃப்டுக்காக ரஜினி காத்திருக்க யதேச்சையா இருவரும் சந்திச்சுக்கிட்டங்க. அப்ப ரஜினி மழுமழுவென்று ஷேவ் செய்யப்பட்ட தாடையை கலைஞருக்குக் காட்டி, ‘தாணுகிட்டே சொன்னீங்களாமே... இப்போ ஓகேவா?’னு கேட்க, கலைஞர் சிரிச்சுக்கிட்டே ரஜினிக்குக் கைகொடுத்துட்டுப் போனார்.

வைகோ தி.மு.க-வைவிட்டு விலகியபோது அவர் ரஜினியைச் சந்தித்தது... ‘பாபா’ வெளியீட்டின்போது, பா.ம.க-வுக்கும் ரஜினி ரசிகர்களுக்கும் மோதல் வந்து பிறகு ரஜினியும் அன்புமணி ராமதாஸும் நண்பர்களான கதை... எல்லாம் சுவையான விஷயங்கள்...

ரஜினியுடனான தன் நினைவுகளை இந்த இதழிலும் தொடர்கிறார், தயாரிப்பாளர் தாணு...

“தி.மு.க-வை விட்டு வைகோ பிரிஞ்ச நேரம் அது. சில தலைவர்களைத் தனியா சந்திச்சு தன்னிலை விளக்கம் கொடுத்துக்கிட்டிருந்தார் வைகோ. அப்ப ரஜினியைப் பார்க்கணும்னு என்கிட்டே சொன்னார். அதன்படி ரெண்டு பேரும் ரஜினியோட போயஸ் கார்டன் வீட்ல சந்திச்சாங்க. அரை மணி நேரம் டைம் கொடுத்திருந்தார் ரஜினி. ஆனா, அந்த சந்திப்பு மூணரை மணி நேரம் நீண்டுபோச்சு. அதுக்கப்பறம் ரஜினி என்கிட்டே பேசும்போது ‘கலைஞருக்கு வயசாச்சு. இவருக்கு இன்னும் வயசிருக்கு. பெரியவரோடயே இவரை இருக்கச் சொல்லுங்க தாணு’னு சொன்னார்.

இதேமாதிரி ‘பாபா’ ரிலீஸான சமயத்துல பா.ம.க. தொண்டர்களுக்கும் ரஜினி ரசிகர் களுக்கும் பெரிய மனக்கசப்பு. ஒருத்தருக்கு எதிரா ஒருத்தர் அறிக்கை விட்டுக்கிட்டு இருந்தாங்க. அப்போ நான் ஐயாவின் மகன் அன்புமணியை சந்திச்சேன். ரஜினி யார், எப்பேர்ப்பட்ட மனுஷர், அவரோட குணம் என்ன என்று எல்லாத்தையும் விரிவா சொன்னேன். ‘எங்களுக்கும் அவரைப் பிடிக்கும். அவர் படம் ரிலீஸ் ஆனதுமே பார்த்துடுவோம். இந்தப் பிரச்னை எப்படி ஆரம்பம் ஆச்சுன்னே தெரியலை. உலக அளவில் எடுத்த சர்வேயில் வடக்கே அமிதாப்பும் இங்கே ரஜினியும் சினிமாவில் ஸ்டைலா சிகரெட் பிடிக்கறதைப் பார்த்து சின்னப் பசங்க பாதிப்பு அடையறாங்கன்னு தெரியவந்தது. படத்தில் சிகரெட் பிடிக்கிற மாதிரி காட்சி வைக்கக் கூடாதுன்னுதான் சொன்னோமே தவிர, அவரைப் பத்தி வேற எந்தக் கசப்பும் என் மனசில் கிடையாது’னு சொன்னார் அன்புமணி.

நேரா ரஜினி வீட்டுக்குப் போனேன். அன்புமணியை சந்திச்சதைச் சொன்னேன். ‘ஓஹோ... அப்படியா சொன்னார் அவர்? எனக்கும் அவங்க மேலே தனிப்பட்ட முறை யில் எந்த மனத்தாங்கலும் கிடையாது’னு சொன்னார் ரஜினி.

உடனே அன்புமணிக்கு போன் போட்டேன். ரஜினிகிட்டே போனைக் கொடுத்தேன். ரெண்டு பேரும் மனம் விட்டுப் பேசி அப்பவே நல்ல ஃபிரெண்ட்ஸ் ஆயிட்டாங்க.

அன்னிக்கு ராத்திரியே என்னை போனில் கூப்பிட்டார் ரஜினி. 'பலபேர் இந்தப் பிரச்னை பெரிசா வெடிக்கணும்னு விரும்பினாங்க. அரசியல் தலைவர்கள்ல சில பேர் நினைச்சிருந்தா, உடனே விவகாரத்தைத் சால்வ் பண்ணி இருக்க முடியும். என் நண்பர்கள்கூட பலபேர் வேடிக்கை பார்த்துட்டுத்தான் இருந்தாங்க. நான் உங்களுக்குப் பெரிசா எதையும் செய்யலைனாலும் எனக்கே தெரியாம தானாப் போயி சிக்கலை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தீங்க'னு உணர்ச்சிவசப்பட்டார்.

அதோட, 'புரவிப்பாளையத்தில் சச்சிதானந்த ஸ்வாமிகள் அடக்கம் ஆகியிருக்கார். ராமதாஸ் சாரோ அன்புமணி சாரோ அந்தப் பக்கம் போகும் போது ஸ்வாமிகள் சமாதி மேலே பூ வெச்சிட்டுப் போகச் சொல்லுங்க'னும் சொன்னார். இதை நான் அன்புமணிக்குத் தெரியப்படுத்தினப்போ அவர், 'பூ என்ன... மாலையே வைக் கிறேன்னு ரஜினி சார்கிட்டே சொல்லுங்க'ன்னார். அந்த சமயத்தில்தான் அன்புமணிக்கு பெண் குழந்தை பிறந்துச்சு. அதைக் கேள்விப்பட்ட ரஜினி தானே அன்புமணிக்கு போன் போட்டு, 'மகாலட்சுமியே உங்களுக்குப் பொண்ணாப் பிறந்திருக்கு'ன்னு வாழ்த்தினார்.

'முத்து' படம் ரிலீஸ் ஆனபோது ஒரு அரசியல் கட்சிப் பிரமுகர் ரஜினியைக் கன்னாபின்னான்னு திட்டி ஒரு அறிக்கை விட்டார். அந்த சமயத்தில் யதேச்சையா ரஜினியைப் பார்க்கப் போயிருந்தேன். அவர் ரொம்ப அப்ஸெட் ஆகியிருந்தார். 'நான்பாட்டுக்கு என் தொழிலைப் பார்த்துட்டிருக்கேன். ஏன் இப்பிடி எல்லாம் நம்மளை டிஸ்டர்ப் பண்றாங்க..?'னு ரொம்ப ஃபீல் பண்ணினார். எனக்கு ஒரு மாதிரி ஆயிடுச்சு. வைகோவுக்கு போன் போட்டு, 'ரஜினியை ஆதரிச்சு ஒரு அறிக்கை விடுங்க'னு சொன்னேன். அன்னிக்கு ஈவினிங் பேப்பர்லேயே வைகோவோட அறிக்கை பிரசுரமாச்சு. அதைப் பார்த்த ரஜினி, வைகோவுக்கு போன் பண்ணி தேங்க்ஸ் சொன்னார்..." என்று ரஜினியைச் சுற்றிச்சுழன்ற அரசியல் புயல்களை சொன்ன தாணு, மீண்டும் திரையுலகம் பக்கம் தன் நினைவலைகளைத் திருப்பினார்.

"ஒருநாள் எனக்குத் திடீர்னு போன் செய்த ரஜினி, 'உடனே புறப்பட்டு ராகவேந்திரா கல்யாண மண்டபத்துக்கு வாங்க'னு சொல்லிட்டு போனை வெச்சுட்டார். நானும் கொஞ்ச நேரத்துல அங்கே ஆஜராயிட்டேன்.

'நான் சொன்னது ஞாபகம் இருக்கா? உங்களுக்காக ஒரு படம் பண்றேன்னு சொல்லியிருந்தேன், இல்லையா... அது சம்பந்தமா பேசணும். நான் இப்போ மும்பை போறேன். கதை ரெடி பண்ணிக்கிட்டு நீங்களும் அங்கே வந்துடுங்க'னு சொன்னார்.

அடுத்த நிமிஷம் கலைப்புலி சேகரன்கிட்டே விஷயத்தை சொன்னேன். அவர் ஒரு வாரத்துக்குள்ளே கதை தயார் பண்ணிட்டார். ரெண்டு பேரும் மும்பை போனோம்.

அங்கே 'ஹாலி டே இன்' ஹோட்டல்ல தங்கி இருந்தார் ரஜினி. எங்களை வரவேற்றவர், தன் கைப்பட எங்களுக்கு சூடா டீ கலந்து கொடுத்தார். சேகரன் கதை சொல்ல ஆரம்பித்தார். ரொம்ப கவனமா ரஜினி அதைக் கேட்டார். கேட்டு முடிச்சதும் என்னைத் தனியா அழைச்சுட்டுப் போய், 'என்ன தாணு, எனக்குக் கதை சொல்லச் சொன்னா கமலுக்குச் சொல்ல வேண்டிய கதையை என்கிட்டே சொல்றாரு? அதுவும் படம் ஆரம்பிச்சு அஞ்சு ரீலுக்கு அப்பறம்தான் நான் என்ட்ரி ஆவேன்ங்கிறாரு. என் ரசிகர்கள் அதை ஏத்துப்பாங்களா? அதைவிட, படத்தில் நான் பேசற முதல் வசனமே 'தேக்கோ,

தேக்கோ'னு ஹிந்தியில் பேசணுமாம். இது சரிப்படுமா? நாளைக்கு ஹைதராபாத்லேருந்து ஸ்கிரிப்ட் சொல்ல வராங்க. அதையும் கேட்கிறேன். அது ஒர்க் அவுட் ஆச்சுன்னா அதுக்கு நீங்கதான் புரொட்யூஸர், சரியா?'ன்னார். அந்தப் படம் என்ன காரணத்தாலேயோ பண்ண முடியாமப் போச்சு.

அப்புறம், 'முத்து' பட வேலைகள் நடந்துட்டிருந்தப் பவும் இதேமாதிரி சேர்ந்து படம் பண்றது சம்பந்தமா ரஜினி கூப்பிட்டார். அந்த சமயத்துல திடீர்னு அவர் சுவிட்சர்லாந்து போக வேண்டியது ஆயிடுச்சு. இப்படி ரெண்டு பேர் மனசுல ஆசை இருந்தும், சேர்ந்து படம் பண்றது மட்டும் தட்டித்தட்டிப் போச்சு.

ஒரு சந்தர்ப்பத்தில் நான், ரஜினி, கமல் மூணு பேரும் ஒண்ணா பேசிக்கிட்டிருந்தோம். அப்ப கமல், 'என்ன ரஜினி, இந்தத் தாணுகிட்ட ரொம்ப நாளா கால்ஷீட் கேட்டுட்டிருக்கேன். மனுஷன் வாயையே திறக்க மாட்டேங்கிறார்...'னு சொல்லவும் ரஜினி, 'நீங்க தாணுவுக்கு கால்ஷீட் கொடுக்கறது சரி, அவர் என்ன உங்களுக்கு கால்ஷீட் தர்றது?'னு கேட்டார். 'மகளிர் மட்டும் படத்தில் தாணுவுக்கு ஒரு கேரக்டர் இருக்கு. நடிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறார்'னு கமல் சொன்னதும், 'அதெல்லாம் நடிப்பார். நான் சொல்லிக்கிறேன். நீங்க மத்த வேலைகளைக் கவனிங்க'னு என்னைக் கேட்காமலேயே சொல்லிட்டார். அப்படி அவர் உரிமையா சொன்னதாலேயே நான் அந்தப் படத்தில் நடிச்சேன்.

'ஆளவந்தான்' படத்தால் எனக்குக் கோடிக்கணக்கா நஷ்டம். அப்போ என்னை வீட்டுக்கு வரச்சொன்னார் ரஜினி. போனேன். 'ஆளவந்தான் படத்துல உங்களுக்கு இவ்வளவு பெரிய நஷ்டம் எப்படி வந்துச்சு?'னு என்கிட்ட கேட்டார்.

'ஆபீஸ்லதான் முதல்ல பூஜை போட்டேன். அப்புறம் 58 லட்ச ரூபாய் செலவில் நேரு இன்டோர் ஸ்டேடியத்துல பூஜை போட்டேன். உலகத்துல இருக்கிற அத்தனை நவீன கருவிங்களையும் வரவழைச்சேன். காஷ்மீர்ல ஷூட்டிங் எடுத்தோம். அதே மாதிரி செட் போட்டு டெல்லியில படம் பிடிச்சோம். அதையே சென்னையிலும் செட் போட்டு எடுத்தோம்'னு சொன்னேன். எல்லாத்தையும் கேட்டவர், 'நிறைய கஷ்டப்பட்டுட்டீங்க. நான் உங்களுக்கு ஏதாவது பண்ணணும். சொல்லுங்க... நான் என்ன செய்யணும்?'னு கேட்டார். 'நான் கஷ்டப்படற நேரத்துல என்னைக் கூப்பிட்டு நீங்க அன்பா பேசினதே பெரிய ஆறுதல்'னு சொல்லிட்டு வந்துட்டேன்.

ரஜினி இதுவரைக்கும் மூணு கதை என்கிட்டே சொல்லியிருக்கார். எல்லாமே சூப்பரான கமர்ஷியல் கதைகள். அதில் ஜக்குபாய் படத்தோட கதையும் ஒண்ணு. தாவுத் இப்ராஹிம் மாதிரியான ஒரு தாதாவுக்கும் ரஜினிக்கும் நடக்குற ஆக்ஷன் போராட்டம்தான் ஜக்குபாய். இந்தப் படத்தை டைரக்டர் கௌதம் மேனன் டைரக்ட் பண்றதா இருந்துச்சு. அப்புறம் கௌதம் ஒரு கதையை என்கிட்டேயும் ரஜினிகிட்டேயும் சொன்னார். அதில் முதல் காட்சியிலேயே பத்து வயசு மகனோட ரஜினி ரயில்லேர்ந்து இறங்குறாருன்னு சொன்னவுடனே எனக்கே ஒருமாதிரி ஆயிடுச்சு. அதுவும் செட்டாகலை. அதுக்கப்புறமாதான் 'ஜக்குபாய்' படத்தை ரவிக்குமார் டைரக்ட் பண்றதா விளம்பரம் வந்துச்சு.

காவிரி நீர்ப் பிரச்னைக்காக சேப்பாக்கத்தில் உண்ணாவிரதம் இருந்த ரஜினி, 'இது சம்பந்தமா கவர்னர்கிட்டே மனு குடுக்கணும். அதுக்கு என்ன பண்ணலாம் தாணு?'னு கேட்டார். நான் உடனே அப்போ கவர்னரோட செக்ரெட்டரியா இருந்த ஷீலாப்ரியா ஐ.ஏ.எஸ்-ஸுக்கு போன் போட்டு அப்பாயின்ட்மென்ட் கேட்டேன். கொடுத்தாங்க. 'அட, உங்களுக்கு கவர்னர் ஆபீஸ்ல இவ்வளவு பழக்கமா?'னு கேட்டார். 'சிறைச்சாலை படப்பிடிப்பு கவர்னர் மாளிகையில் நடந்தப்ப செக்ரெட்டரி எனக்குப் பழக்கமானாங்க'னு சொன்னேன்.

என் பொண்ணு கல்யாணத்துக்கு ரஜினிக்கு அழைப்பு வெச்சேன். கல்யாணத் தேதியில் 'படையப்பா' ஷூட்டிங்ல மைசூரில் படுபிஸியா இருந்தார் ரஜினி. ஆனாலும், 'தாணு மக கல்யாணம் இருக்கு. நிச்சயம் போகணும். ரெண்டு நாள் டைம் வேணும்'னு சொல்லிட்டுக் கிளம்பிவந்து வாழ்த்தினார்.

ஒருமுறை அவரைப் பார்க்கப் போனப்போ 'ரஜினி சார், எனக்குக்கூட நீங்க படம் பண்ண வேண்டாம். நிறைய தயாரிப்பாளர்கள் கஷ்டப்படறாங்க. ஒருத்தருக்கு மட்டும் படம் பண்ணி அவங்களை வசதியாக்கறதைவிட, நீங்க ஒரு படம் பண்ணி நிறைய பேரைக் கைதூக்கிவிட முடியுமே... அப்படி ஏதாவது செய்ங்க'ன்னேன். அதை மனசில் வச்சிக்கிட்டு 'அருணாச்சலம்' படம் மூலமா வி.கே.ராமசாமி, பண்டரிபாய், கலைஞானம் மாதிரி எட்டுப் பேரை தயாரிப்பாளராக்கி அவர்கள் வாழ்வில் புத்தொளி ஏற்றிவைத்தவர் ரஜினி" என்று உணர்ச்சி வசத்துடன் முடித்தார் தாணு.

நாடக உலகில் தனக்கென தனி பாணியில் நடிப்பவர் ஒய்.ஜி.மகேந்திரன். ரஜினியின் சகலையாக மட்டுமில்லாமல், 'புவனா ஒரு கேள்விக்குறி' படத்திலிருந்து இன்றுவரை அவருக்கு நெருங்கிய நண்பராகவும் இருப்பவர். தனக்கும் ரஜினிக்கும் உள்ள நெருக்கத்தை இங்கே விவரிக்கிறார் அவர்-

"என் அப்பா அப்போ சேம்பர்ல இருந்த ஃபிலிம் இன்ஸ்டிடியூட்ல பிரின்ஸிபலா இருந்தார். அப்பவே ரஜினியைப் பார்த்திருக்கேன். பழக்கம் கிடையாது. ரஜினி ரெகுலரா கிளாஸ் அட்டென்ட் பண்ற ஆள் கிடையாது. இருந்தாலும், அப்பா அடிக்கடி அவரைப்பத்திப் பேசுவார். 'சிவாஜிராவ்கிட்ட ஒரு ஆகர்ஷண சக்தி இருக்கு'னு சொல்லுவார்.

ஒருநாள் 'மன்மத லீலை' படத்தோட ஷூட்டிங் நடந்த ஸ்பாட்டுக்கு ரஜினி வந்தார். 'இவர்தான் 'அபூர்வ ராகங்கள்' படத்திலே ஸ்ரீவித்யாவோட ஹஸ்பெண்டா நடிக்கிறாரு'னு என்கிட்டே சொன்னார்.

'அதுசரி, இவர் இங்கே எதுக்கு வந்தார்?'னு கேட்டேன். 'பாலச்சந்தர் எப்படி ஷூட் பண்றார்னு பார்க்க வந்திருக்கார்'னு கமல் சொன்னார்.

நானும் கமலும் மட்டுமில்லை, யூனிட்ல இருந்த எல்லாருமே எங்களை அறியாம ரஜினியைப் பார்த்துட்டேயிருந்தோம். சின்னக் கண், திரும்புற ஸ்டைல், எப்பப் பார்த்தாலும் தலைமுடியைக் கோதிவிடற மேனரிஸம்... எல்லாமே அவரை ஒரு தடவை பார்த்தா மறுபடியும் பார்க்கணும்கிற ஆவலைத் தூண் டுச்சு.

'புவனா ஒரு கேள்விக் குறி' படத்திலே சேர்ந்து நடிச்சோம். பல்லவன் பஸ்ஸிலே நான் பணத்தைப் பறிகொடுக்கறதை சுற்றித்தான் கதை நகரும். எப்போதும் ஸ்டைலா, ஃபாஸ்டா வில்லத்தனம் பண்ற ரஜினி- இந்தப் படத்துல ஆர்ப்பாட்டமில்லாம, அமைதியா பெர்ஃபார்மென்ஸ் காட்டியிருப்பார்.

படம் ரிலீஸ் ஆகிறதுக்கு முன்னாடியே அவர் கேரக்டர் பெரிசா பேசப்படும்னு யூனிட்ல பேசிக்கிட்டோம். எங்க எதிர்பார்ப்பு பொய்யாகலை... அந்தப் படம் ரஜினியை இன்னொரு உசரத்துக்குக் கூட்டிப்போச்சு!

ரஜினி, லதாவுடன்...

கொஞ்ச நாள் அவருக்கு உடம்பு சரியில்லாமப் போயிடுச்சு. அந்த சமயத்துல, ரஜினி சாயலில் உள்ள நடிகர் நளினிகாந்த் வேறொரு படத்தில் நடிச்சுகிட்டு இருந்தார். ,அந்த படத்தை கோடம்பாக்கம் பக்கத்துல உள்ள சேரிப்பகுதியிலே ஷூட்டிங் எடுத்தாங்க. நானும் அந்தப் படத்துல அவர்கூட

நடிச்சேன். அப்ப அந்த ஏரியாவுல இருக்குற நூத்துக்கும் மேற் பட்ட பொம்பளைங்க எல்லாம் ஒண்ணா சேர்ந்து நளினிகாந்தை சுத்திக் கிட்டாங்க.

'ஏம்ப்பா ரஜினி! உனக்கு உடம்பு சரியில்லே, மனசு சரியில்லேனு என்னென் னமோ சேதி பத்திரிகையில வருதே! அதெல்லாம் உண்மையாப்பா? நாங்க உனக்கு துணையா இருக்கோம்பா!'னு நெகிழ்ந்துபோய் சொன் னாங்க. அப்பத்தான் நான், 'ரஜினியோட செல்வாக்கு அவருக்கே தெரியாம மக்கள் மத்தியிலே எப்படி வளர்ந்துக்கிட்டிருக்கு!'னு புரிஞ்சுகிட்டேன்.

'அந்நியன்' படத்துல வர்ற அம்பி, அந்நியன் மாதிரி ரெண்டு கேரக்டர்களை மையமா வெச்சு 1980-லேயே 'ரூபாய்க்கு மூணு கொலை'னு ஒரு டிராமா போட்டேன். அதுல அப்பு, ஆல்பர்ட்னு ஒரு மனுஷனுக்குள்ளே இருக்குற ரெண்டு கேரக்டரை நான் செய்தேன். 'அந்நியன்' படத்துல கடைசியா வர்ற போலீஸ் ஸ்டேஷன் காட்சியில, பிராகாஷ் ராஜும் விக்ரமும் ('அந்நியன்' படத்துல) சந்திக்கிறப்ப அவர் அந்நியனாவும் அம்பியாவும் மாறிமாறிப் பேசுவாரே, அது மாதிரி டயலாக் அப்பவே என் நாடகத்துல ஃபேமஸ்!

அப்ப நடந்துகிட்டு இருந்த அந்த நாடகத்தைப் பார்க்க ஒருநாள் ரஜினியும் முக்தா சீனிவாசனும் வந்திருந்தாங்க. நாடகத்தை ரசிச்சுப் பார்த்த முக்தா சீனிவாசன், அதை சினிமாவா எடுக்க அப்பவே முடிவு செஞ்சாரு. அந்த 'அப்பு-ஆல்பர்ட் கேரக்டர்ல ரஜினிதான் நடிக்கணும்'னு முடிவும் பண்ணிட்டார். இதை ரஜினிகிட்டே சொன்னதும், 'நோ... நோ... அந்த அளவு என்னால பெர்ஃபார்மென்ஸ் காட்டி நடிக்க முடியாது'னு மறுத்துட்டார். தன்னால் முடியாது என்று அவருக்கு தோணினால், எதைப்பற்றியும் கவலைப்படாமல் பளிச்சென்று உண்மையைச் சொல்லி விடுகிற பழக்கம் ரஜினியுடையது. அந்த பெருந்தன்மையை அவரிடம் நான் நேரிலேயே கண்டு வியந்திருக்கிறேன் என்பதற்காகத்தான் இந்த சம்பவத்தைச் சொன் னேன்.அப்புறம்தான் ரஜினியை வெச்சு 'பொல்லாதவன்' படம் எடுத்தார் முக்தா.

'தனிக்காட்டு ராஜா' ஷூட்டிங் நடந்துட்டு இருந் தது. அப்போ கன்னட சினிமா புரொடியூஸர் ஒருத்தர், ரஜினிகிட்டே ரொம்ப நேரமா பேசிக் கிட்டே இருந்தார். அவர் ஏதோ சொல்ல, ரஜினி மறுத்துக்கிட்டே இருந்தாரு. ஒரு கட்டத்துல ரஜினி, 'மகேந்திரன், இவர் என்ன சொல்றாருன்னு கேளுங் களேன்'னார்.

'சார், 'தெய்வ மகன்' படத்தை கன்னடத்துலே பண்ணலாம்னு இருக்கேன். அந்த மூணு கேரக்டரையும் ரஜினிதான் பண்ணணும்னு சொல்றேன். சம்மதிக்க மாட் டேங்கிறார்'னு அவரு சொன்னதும், எனக்கு சுர்ருன்னு கோபம் வந்துடுச்சு.

'ஏங்க, சிவாஜி சாரை விட்டா வேற எவனாலேயும் அந்த கேரக்டரைப் பண்ண முடியாது... இதுகூடவா உங்களுக்குத் தெரியலை?'னு ஆவேசமா கேட்டுட்டேன்.

ஓய்.ஜி.மகேந்திரன், ரஜினியுடன்...

உடனே, 'நீங்க இப்படித்தான் பதில் சொல்லணும்னு எதிர்பார்த்தேன் மகேந்திரன். நீங்க சொன்னது ரொம்பச் சரி'னு பாராட்டினார்.

ரஜினிக்கு தன்னோட எல்லைகள் தெரியும். அதைமீறி அவர் யோசிக் கிறதில்லை. தனக்காகக் கதையை மாத்தச் சொல்லமாட்டார். கதைக் காகத் தன்னையே மாத்திப்பார். 'படையப்பா'வில் படம் பூராவும் முக்கியத்துவம் உள்ள கேரக்டர் நீலாம்பரி. கடைசிக் காட்சியிலகூட நீலாம்பரியை படையப்பா மன்னிக்கும்போது, 'உன் மன்னிப்பு எனக்கு தேவையில்லை'னு தன்மானத் தோட

தற்கொலை பண்ணிக்கிற கேரக்டர் ரம்யா கிருஷ்ணனுக்கு. ஹீரோவைவிட நீலாம் பரிக்குதான் கிரெடிட் அதிகமாகப் போய்ச்சேரும். ஆனாலும் அதை மாத்தச் சொல்லலை ரஜினி.

'அண்ணாமலை, பாட்ஷா, அருணாச் சலம், முத்து...' -இப்படி ரஜினி நடிக்கிற கேரக்டர் பேர்லயே படங்கள் வர்றப்போ, திடீர்னு 'சந்திரமுகி'யில் நடிச்சார். அவர் நெனச்சிருந்தா, அவர் நடிச்ச கேரக்டர் பேரான 'சரவணன்'னே பேர் வெச்சிருக்கலாம். அப்படிச் செய்யலை. ஏன்னா, ரஜினி டைரக்டர் ஆர்ட் டிஸ்ட்.

என் மனைவியோட தங்கச்சி லதா அப்ப எத்திராஜ் காலேஜ்ல படிச்சிட்டிருந்தாங்க. அவங்க காலேஜ் மேகஸீனுக்காக ரஜினியைப் பேட்டி எடுக்கலாம்னு என்கிட்டே கேட்டிருந்தாங்க. நானும் ரஜினிகிட்ட பேசி, அவங்களை சந்திக்க வச்சேன். அந்த சந்திப்பு முடிஞ்சதும், ரெண்டு நாள் கழிச்சு ரஜினி எனக்கு போன் பண்ணி, 'நான் லதாவைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்'னு சொன்னார். அதுக்கு நான், 'அவங்க எம்.ஜி.ஆர்., சிவாஜிகூட நடிச்சிட்டிருக்காங்க. எனக்கு அவ்வளவா பழக்கம் கிடையாதே'ன்னேன்.

'மகேந்திரன், கிண்டல் பண்ணாதீங்க... உங்க மச்சினி லதாவைச் சொன்னேன்'னார். விஷயத்தை லதாவோட பேரன்ட்ஸ்கிட்டே சொன்னேன். அந்த நேரத்துல ரஜினியைப் பத்தி பலவிதமா சேதிகள் வந்துகிட்டு இருந்துச்சு. அதனால நேர்ல ஒரு தடவை பார்த்துப் பேசலாம்னு என் மாமனார், மாமியார் முடிவெடுத்தாங்க.

அப்படி நேரில் போனப்ப... அவருடைய பவ்யம், மரியாதை, பெரியவங்களை மதிக்கிற பண்பு எல்லாம் அவங்களுக்குப் பிடிச்சுப்போச்சு. அவங்க சம்மதம் தெரிவிச்சு, கல்யாணமும் நடந்துது.

ஒருநாள் ராத்திரி என் வீட்ல உட்காந்து நானும் ரஜினியும் சினிமாவைப்பத்தி பேசிக்கிட்டிருந்தோம். 'அடுத்து எது மாதிரி கேரக்டர் பண்ணினா நல்லா இருக்கும்?'னார் ரஜினி. 'உயர்ந்த மனிதன்' படத்துல சிவாஜி செய்த கேரக்டர் நல்லாயிருக்கும்'னேன். 'அப்படியா? நான் இப்பவே உயர்ந்த மனிதன் படத்தை பார்க்கணும்'னார். அப்ப சி.டி., வீடியோ கேசட் எல்லாம் கிடையாது. தியேட்டருக்குக் கிளம்பினோம். லதாவும், என் மனைவியும் எங்ககூடப் புறப்பட்டாங்க. நாலு பேரும் பாரகன் தியேட்டர்ல செகண்ட் ஷோ பார்த்தோம்.படத்தை ஆர்வத்தோடு பார்த்து முடித்த ரஜினி, தியேட்டரில் இருந்து வெளியே வரும்போது, 'சிவாஜி ஒரு பிறவி நடிகர். அவர் மாதிரியெல்லாம் நடிக்கிறேன்னு சொல்லி என்னால ரிஸ்க் எடுக்க முடியாது. சிவாஜி படங்களை பார்த்து ரசிக்கும் கோடிக்கணக்கான ரசிகர்களில் ஒருவனாக மட்டும் நான் இருக்கவே விரும்புகிறேன். அவரது புகழுக்கும் திறமைக்கும் களங்கம் விளைவிக்க மாட்டேன்...' என்று சொன்னார். கடைசி வரையில் சிவாஜியை ஒப்பிடமுடியாத ஒப்பற்ற கலைஞராகவே போற்றி வருகிறார் ரஜினி.

என்னோட மகள் மது வந்தியை ரஜினிக்கு ரொம்பப் பிடிக்கும். 'நம்பர் ஒண்ணு'னு செல்லமா கூப்பிடுவார்.

அதுபோல என் மகன் ஹர்ஷவர்த்தன் லண்டனில் மூணு வருஷம் டைரக்ஷன் கோர்ஸ் படிச்சிட்டு வந்தான். ரஜினிகிட்டேதான் ஆலோசனை கேட்டான். 'சினிமாவுல கமர்ஷியலா ஜெயிக்கிற விஷயத்தை நல்லா கத்துக்க'னு சொன்னார். அதோடு நிற்காம கே.எஸ்.ரவிக்குமார்கிட்ட அசிஸ்டென்டா சேர்த்து விட்டார். இப்ப அவன் 'தசாவதாரம்' படத்துல கமல், ரவிக்குமார் கூடச்சேர்ந்து ஒர்க் பண்றான்.

ஆரம்பத்துல சத்ருகன் சின்ஹாவை ஃபாலோ பண்ணியிருக்கார் ரஜினி. அப்புறம் ஆக்ஷனும் காமெடியும் கலந்து பண்ணும்போது, அமிதாப்பை கவனிச்சுப் பார்த்திருக்காரு. படத்தோட கேரக்டரை நல்லா ஸ்டடி பண்ணுவார். அப்படித்தான் 'எங்கேயோ கேட்ட குரல்' படத்துக்காக ஏவி.எம்-மில் உள்ள ப்ரிவ்யூ தியேட்டரில் சிவாஜி சார் நடிச்ச 'தெய்வப் பிறவி' படத்தைப் பார்த்து பாடி லாங்வேஜை ஃபாலோ பண்ணினார்.

இப்ப லேட்டஸ்ட்டா நடிக்கிற ரஜினியைவிட 'எங்கேயோ கேட்ட குரல், நல்லவனுக்கு நல்லவன்' படத்துல நடிச்ச பழைய ரஜினியைத்தான் நான் ரசிச்சு பார்ப்பேன். இன்னிக்கு அவரை பெரிய ஸ்டார் ஹோட்டல்லதான் தங்க வைக்கிறாங்க. ஆனா, என்கூட தங்கினா தரையில துணியை விரிச்சு போட்டுத்தான் தூங்குவாரு.

அரசியல் சம்பந்தமா பேச்சு வரும்போது நான் ரஜினிகிட்டே, 'உங்களுக்கு அரசியல் சரிப்பட்டு வராது. அந்தத் திசைக்கே போகாதீங்க. நீங்க உள்ளது உள்ளபடி பேசுற டைப். இது கதைக்காகாது. இன்னிக்கு உள்ள அரசியல்ல மனசாட்சியை மார்வாடி கடையில வெச்சிட்டுப் போய்த்தான் கட்சி நடத்த முடியும்'னு சொன்னேன். அதை ஆமோதிச்ச ரஜினி, சினிமாத்தனமில்லாம சிரிச்சார்" என்று முடித்தார் மகேந்திரன்.

சங்கர் சலீம் சைமன்', 'ஆயிரம் ஜென்மங்கள்' என்ற இரண்டே படங்களில் ரஜினியோடு நடித்திருந்தாலும், இன்றுவரை ரஜினியின் மனதில் மரியாதைக்குரிய இடத்தில் வசிப்பவர் லதா. அவர் தனக்கும் ரஜினிக்கும் நிகழ்ந்த பழைய-புதிய சம்பவங்களை நம்மோடு பகிர்ந்துகொள்கிறார்.

" 'சங்கர் சலீம் சைமன்' படத்துக்கான ஷூட்டிங், சென்னையில் உள்ள வீனஸ் காலனியில் நடந்தது. ரஜினியோட பைக்கிலே நான் பின்னால் ஏறி உட்கார்ந்துபோற மாதிரி ஸீனை ஷூட் பண்ணினாங்க. அப்பத்தான் ரஜினியை முதன்முதலா பார்க்கிறேன். உடனே முடிய வேண்டிய அந்த ஸீனை மூணு, நாலு டேக் வரைக்கும் இழுத்துட்டார் ரஜினி. அப்புறமா அவர்கிட்டே பேசும்போதுதான், அவர் என்கூட நடிக்கிறப்ப ரொம்ப நெர்வஸா இருந்திருக்காருங்கிற உண்மை தெரிஞ்சது. 'ஏன் ரஜினி, உங்களுக்கு என்னாச்சு?'னு அவர்கிட்டேயே கேட்டேன். அவர், 'ஒண்ணுமில்லை மேடம், நீங்க எம்.ஜி.ஆர் சார், சிவாஜி சார்கூட எல்லாம் நடிச்சிருக்கீங்க. அப்படிப்பட்ட நீங்க என்கூட ஜோடியா நடிக்கும்போது ஒரு மாதிரி நெர்வஸா இருந்துச்சு. அதான்'னு யதார்த்தமா சொன்னார்.

அதுக்கப்புறம் நான் அவர்கிட்ட ஜோவி யலா, ஜாலியாப் பழகி னேன். அதனால அவருக்கு ரொம்ப சந்தோஷம்.

'மேடம் நீங்க பெரிசா பந்தா பண்ணு வீங்கன்னு நினைச்சா ரொம்ப சிம்பிளா இருக்கீங்களே!'னு ஆச்சர்யப்பட்டுப் பேசினார்.

'நான் எம்.ஜி.ஆர்கூட மட்டும் பதினெட்டுப் படம் நடிச்சிருக்கேன். அதனால எனக்கொண்ணும் தலை கனம் வந்துடலை. எல்லார்கிட்டேயும் பாகுபாடு பார்க்காமத்தான் பழகுவேன்'னு சொன்னேன். அதுக்கப்புறம் நானும் ரஜினியும் நல்ல ஃபிரெண்ட்ஸா ஆயிட்டோம்.

ஆரம்பத்துல ரஜினியை நான் சந்திச்சப்ப எப்படிப் பழகினாரோ, எளிமையா இருந்தாரோ அதே மாதிரிதான் இன்னிக்கும் இருக்கார். இந்த எளிமை விஷயத்துல எம்.ஜி.ஆரும் ரஜினியும் ஒண்ணு.

ஒரு தடவை 'மீனவ நண்பன்' ஷூட்டிங் சமயத்துல மதியம் சாப்பாட்டுக்காக பிரேக் விட்டாங்க. ஆற்காடு ரோட்டுல இருக்கிற தன் வீட்டுக்கு சாப்பிட அழைச்சிட்டுப் போனார் எம்.ஜி.ஆர். தரையில் உட்கார்ந்து வாழை

இலை போட்டு சாப்பிட்டார். என்னையும் அப்படியே சாப்பிடச் சொன்னார். நான் அவர்கிட்டே, 'ஏங்க, டைனிங் டேபிளில் சாப் பிட்டா குறைஞ்சா போயிடுவீங்க?'னு கேட்டேன். அதுக்கு அவர் 'சேர்ல உட்கார்ந்து சாப்பிடும்போது வயிற்றோட கொள்ளளவு தெரியாம அதிகமா சாப்பிட்டு சிரமப்படுவோம். தரையில உட்கார்ந்து சம்மணம் போட்டு சாப்பிட்டா- அளவும் தெரியும், தொப்பையும் விழாது'னு விளக்கம் கொடுத்தார். அன் னிக்கு மட்டும்னு இல்லை, அவர் எப்போ சாப்பிட்டாலும் தரையிலே உட் கார்ந்துதான் சாப்பிடறார்ங்கிறதைப் பல சந்தர்ப்பங்கள்ல பார்த்திருக்கேன்.

அதே மாதிரிதான் ரஜினியும், ரொம்ப சிம்பிள்! ஷூட்டிங்குக்கு அவுட்டோர் போனா 'ஹோட்டல்ல எனக்கு ஏ.சி-தான் வேணும். குஷன் மெத்தைதான் வேணும்'னு அடம் பிடிக்க மாட்டார். ரொம்ப எளிமையா நடந்துப்பார்.

ஷூட்டிங் ஸ்பாட்டுல நான் திடீர்னு இங்கி லீஷ்ல ஏதாவது பேசிடுவேன். உடனே எம்.ஜி.ஆர், என்கிட்டே வந்து 'என்னமோ சொன்னியே அதுக்கு என்ன அர்த்தம்?'னு விவரமாக் கேட்டுத் தெரிஞ்சுக்குவார். 'நமக்கு இங்கிலீஷ் தெரியலையே... இந்தச் சின்னப் பொண்ணுகிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கே'னு ஃபீல் பண்ணவே மாட்டார். 'உனக்கென்னம்மா... நீ கான்வென்ட்ல படிச்ச பொண்ணு. நான் சாதாரண பள்ளிக்கூடத்தில் படிச்சவன்தானே'னு செல்லமா என்னைக் கிண்டலடிப்பார்.

அதே மாதிரி ரஜினிகிட்டேயும் அவருக்குத் தெரியாத விஷயத்தைப் பத்தி நாம் ஏதாவது பேசினா ஈகோ பார்க்காம, அந்த விஷயத்தைப் பத்தி விசாரிச்சு விளக் கமா புரிஞ்சுப்பார். இப்படி எம்.ஜி.ஆருக்கும், ரஜினிக்கும் ஒத்துப்போற குணாதிசயம் நிறைய இருக்கு.

ரொம்ப வருஷத்துக்கப்புறம் மைலாப்பூர்ல இருக்கிற நீல்கிரீஸ் சூப்பர் மார்க்கெட்ல ஷாப்பிங் பண்ணி கிட்டிருந்தேன். பர்ச்சேஸ் முடிஞ்சது. வெளியே வந்து கார்ல ஏறப்போனேன். அப்போ ஒருத்தர் வேகமா ஓடி வந்து 'லதாஜி, லதாஜி'னு கூப்பிட்டார். 'ரஜினிதானே நம்மளை லதாஜினு கூப்பிடுவாரு. இது யாருன்னு திரும்பிப் பார்த்தா, ஒரு பொண்ணு என்கிட்டே வந்தாங்க.

'நான்தான் லதாரஜினி'னு தன்னை அறிமுகப்படுத்திக் கிட்டாங்க. 'உங்களைப் பத்தி எங்க வீட்டுக்காரர் நிறைய சொல்லியிருக்கார். தன் குடும்பத்துல உள்ளவங்களை உயர்த்துவதற்காக கஷ்டப்பட்டுப் போராடினவங்கன்னு பெருமையா அடிக்கடி பேசுவார்'னு என்கிட்டே அன்பா ரொம்ப வருஷம் பழகினவங்க மாதிரி அன்னியோன்னியமா பேசினாங்க. 'அட, லதாவும் ரஜினி மாதிரியே பந்தா இல்லாம எளிமையா இருக் காங்களே!'னு ஆச்சர்யப்பட்டுப் போனேன்.

அதுக்கப்புறம் தாஜ் ஹோட்டலில் குடும்பத்தோட சாப்பிடப் போனப்போ ரஜினி, லதா, ஐஸ்வர்யா, சௌந்தர்யா எல்லாம் சாப்பிட வந்திருந்தாங்க. என்னைப் பார்த்ததும் சந்தோஷமான ரஜினி, 'லதாஜி'னு கூப்பிட்டு எல்லாரையும் அறிமுகப்படுத்தினார். 'நாங்க ஏற்கெனவே நீல்கிரீஸ்ல அறிமுகமான விஷயத்தை ரஜினிகிட்டே சொல்ல, அதைக் கேட்டு அவரோட டிரேட் மார்க் சிரிப்பை சிரிச்சார்.

இப்பக்கூட தீபாவளி, பொங்கல் வந்தா ரஜினி வீட்லேர்ந்து ஸ்வீட்ஸ் வந்துடும். அதுமட்டுமில்லை, அன்னிலேர்ந்து இன்னிக்குவரைக்கும் ரஜினியோட புதுப்படம் வரும்போது, அதை அவர் குடும்பத்தோடு பார்க்கும்போது நிச்சயம் என்னையும் படம் பார்க்க அழைப்பார். அந்தப் பழக்கம் 'பாபா', 'சந்திரமுகி'னு தொடர்ந்துகிட்டேயிருக்கு.

சமீபத்தில் ஒருநாள் ஏவி.எம். ஸ்டூடியோவிலே தெலுங்கு சீரியல்ல நடிச்சுக்கிட்டு இருந்தேன். அப்ப திடீர்னு ரஜினி எடிட்டிங் ரூமுக்கு வந்திருக்கார். உடனே எங்க ஃப்ளோர்ல இருந்தவங்க எல்லாம் ரஜினியை நேர்ல பார்க்கப் போயிட்டாங்க. போனவங்ககிட்ட 'என்ன சீரியல், ஏது'ன்னு விசாரிச்ச ரஜினி 'எந்தெந்த ஆர்ட்டிஸ்ட் நடிக்கிறாங்க?'னு கேட்டிருக்கார். அவங்க என் பேரைச் சொல்லியிருக்காங்க. அவ்வளவுதான்... எடிட்டிங்

அறையிலேர்ந்து வேகவேகமா நான் இருந்த ஃப்ளோருக்கு என்னைத் தேடி வந்துட்டார். 'லதாஜி, எப்படி இருக்கீங்க? பார்த்து ரொம்ப நாளாச்சு. பசங்க எப்படிப் படிக்கிறாங்க?'னு எல்லாம் விசாரிச்சு ரொம்ப நேரம் பேசிட்டுப் போனார். அந்த எளிமைதான் அவரை சூப்பர் ஸ்டார் நாற்காலியில எப்பவும் உட்கார வெச்சிருக்கு" என்று நினைவுகளை மலரவிட்டார் லதா.

ரஜினியின் மனம் விரும்பும் இயக்குநர்களில் ஒருவர் மகேந்திரன். ரஜினியுடனான உறவை உற்சாகத்துடன் இங்கே விவரிக் கிறார் இயக்குநர் மகேந்திரன்-

"பலாமரம் என்று ஒருவர் உச்சரித்தாலே போதும். பலாச்சுளையின் தித்திப்பும் அதன் வாசனையும் நம் நினைவுக்கு வந்து இனிக்கும். பலாமரம் பற்றிய இதர சங்கதிகள் நமக்கு அநாவசியம்.

அதேவேளை, அழகான ஒரு தஞ்சாவூர் வீணையைப் பார்க்கும்போது அதன் வசீகரமும், மேன்மையான அதன் நாதமும்தான் நமக்குப் புலப்படும். ஆனால் அந்த அருமையான வீணை ஒரு பலாமரத்தில் உருவாக்கப்பட்ட உண்மை மாத்திரம் நம் நினைவுக்கு வராது. இதுதான் நடைமுறை. இதில் தவறு இல்லை.

அப்படிப்பட்ட அழகியதொரு வீணையாகத் தான் இன்று உணரப்படுகிறார் நண்பர் ரஜினிகாந்த். ஆனால் அவரது இன்றைய உயரத்துக்கு ஆதாரமான ஆரம்பகால உழைப்பும் முயற்சிகளும் எல்லாருக்கும் தெரியுமா? கூடவே, சினிமா உலகில் தனக்கொரு இடம் வேண்டுமென் பதற்கான போராட்டத்தில் கிடைத்த தோல்விகள், ஏமாற்றங்கள், காயங்கள் எல்லாவற்றையும் தனது உயர்வுக்கான ஏணியாக மாற்றிக்கொண்ட அவரது சாதுர்யம் இன்றைய தலைமுறைக்குத் தெரியுமா?

'ஆடு புலி ஆட்டம்' என்ற படத்துக்கு நான் கதை, வசனம் எழுதினேன். இயக்கம் எஸ்பி.முத்துராமன். அந்தப் படத்திலிருந்துதான் ரஜினியுடன் எனக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. அவருடன் பழகிய எல்லாருமே தங்கள் நட்பை நெருக்கமான நட்பு என்று குறிப்பிடும் அளவுக்கு அவரது நட்பு ஒரே மாதிரியானது. பாரபட்சம் அற்றது.

அந்தப் படத்தில் கமல்ஹாசனும் ரஜினியும் கதைப்படி எதிரெதிர் துருவங்களாக நடித் தார்கள். தமிழ் சினிமாவுக்குக் கதை, வசனம் எழுதுவதை நான் வெறுப்புடனும், அதே சமயம் பொறுப்புடனும் செய்து கொண்டிருந்த காலகட்டம் அது. அதனால் நேரம் கிடைக்கும்போது சில சிறந்த வங்காள மொழிப் படங்களைப் பார்த்துவிட்டு சென்னை திரும்புவேன்.

'ஆடு புலி ஆட்டம்' படப்பிடிப்பு சமயத்தில் கமல், ரஜினி இருவரிடமும் பெங்களூருவில் நான் பார்த்த படங்களின் சிறப்புக்களைச் சொல்வதோடு, 'தமிழிலும் இதுபோல நாடகத்தன்மை இல்லாத, மிகை நடிப்பு இல்லாத, மிகை வசனம் இல்லாத யதார்த்த சினிமா எப்போது வரப்போகிறது?' என்று புலம்புவேன். 'எல்லாவற்றுக்கும் ஒரு நேரம் வரும்... அது வரை பொறுத்திருப்போம்' என்று இருவரும் என் புலம்பலுக்குத் தைலம் போடுவார்கள்.

'ஆடு புலி ஆட்டம்' வெற்றிப்படமாக அமைந்தது.

பிறகு என் புலம்பலைக் கேட்கவும் ரசிக்கவும் தன் ராயப்பேட்டை வீட்டில் அதிக நேரம் ஒதுக்கியவர் ரஜினி. நல்ல சினிமா பற்றி விவாதம் பல

நாட்கள் எங்களிடையே விடியவிடியத் தொடரும். அந்தச் சந்தர்ப்பங்களில்தான் ரஜினி பற்றிய தெளிவான ஒரு சித்திரம் எனக்குக் கிடைத்தது. தனது நடிப்பாற்றலை முழுமையாக வெளிப்படுத்தும் காலத்தை அவர் பேராவலுடன் எதிர்பார்க்கிறார் என்று தெரிந்தது.

இப்படி நாங்கள் ஒருவரைப்பற்றி ஒருவர் முழுமையாகப் புரிந்துகொண்டதால் எங்களின் ஒரே மாதிரியான உணர்வுகள் பின்னாளில் 'முள்ளும் மலரும்' படமாக உருவாகும் என்று நானோ அவரோ அன்று நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

என்றும் என் நன்றிக்குரிய தயாரிப்பாளர், அமரர் வேணு செட்டியார் என்னைத் தேடிவந்து, 'என் படத்தை நீ டைரக்ட் பண்ண வேண்டும்' என்று தடாலடியாகச் சொன்னபோது நான் உடனடியாகச் சம்மதிக்க வில்லை. அவருக்கு ஆறுதலாக இருக்கட்டுமே என்று 'செய்தால் போயிற்று' என்று சொன்னேன். ஆனால், அவர் உடனடியாக படப்பிடிப்பைத் தொடங்க ஏற்பாடு செய்வார் என்று எதிர் பார்க்கவில்லை. 'என்ன கதை வைத்திருக்கிறாய்?' என்று அவர் கேட் டார். அப்போது, உமாசந்திரன் எழுதிய 'முள்ளும் மலரும்' என்ற நாவலைப் பாதி மட்டுமே படித்துவிட்டு, என் அந்தரங்க திருப் திக்காக, ஒரு திரைக்கதை எழுதியிருந்தேன். அந்தத் திரைக்கதையைக் கேட்டால் ஒரு கமர்ஷி யல் புரொடியூஸர் அதைப் படம் எடுக்க முன்வரமாட்டார் என்று எனக்குத் தெரியும். அதனால் வேணு செட்டியார் கேட்டதும், 'ஒரு அண்ணன் - தங்கை பாசத்தின் கதை' என்று மட்டும் சொன்னேன். 'எனக்கு இது போதும். யார் யாரை நடிக்க வைக்கலாம்? அதை மட்டும் சொல்' என்றார் உற்சாகமாக.

இவன், 'தங்கப் பதக்கம்' மாதிரி வெற்றிகரமான பல படங்களுக்குக் கதை - வசனகர்த்தாவாக இருக்கிறான். இப்போது இவனிடம் இருப்பதோ அண்ணன் - தங்கை கதை. தன் வசனத்தாலேயே படத்தை ஜெயிக்க வைத்துவிடுவான். நிச்சயம் இன்னொரு 'பாசமலர்' தந்துவிடுவான்' என்ற நம்பிக்கை அவர் மனதில் வேரூன்றியிருந்ததால் என் முழுத் திரைக்கதையையும் கேட்காமல் என்னை இயக்குநர் ஆக்கி, படத்தைத் தொடங்கும் வேகத்தில் இருந்தார்.

ஆனால், மிகை வசனத்தையோ மிகை நடிப்பையோ டூயட்களையோ நாடகத்தனமான காட்சி அமைப்பு களையோ கொஞ்சமும் விரும்பாத ஒருத்தன் எனக்குள் இருப்பதை அவர் தெரிந் திருக்கவில்லை. அதுவே, எனக்கும் ரஜினிக்கும் சேர்த்து அவர் செய்த ஆசீர் வாதமாக அமைந்தது.

'படத்தில் அண்ணன் காரெக்டரில் நடிப்பதற்கு ரஜினிதான் பொருத்த மானவர்' என்று நான் சொன்னபோது வேணு செட்டியார் அதை ஏற்க வில்லை.

'வில்லனாக நடிக்கிற வரைப் போய் பாசமுள்ள அண்ணனாக நடிக்க வைக்கலாமா? ரஜினி உன் நண்பன் என்பதால் இப்படிச் சொல்கிறாயா?' என்றார். 'அவர் எனக்கு தெரியாதவராக இருந்தாலும் அவரைத்தான் சொல்லியிருப்பேன். ஓர் இயக்குநருக்கு வேண்டியது சுதந்திரம். அப்படி சுதந்திரமாக நான் முடிவெடுக்க தாங்கள் அனுமதிக்காவிட்டால், எனக்கு இந்த டைரக்டர் வேலையே வேண்டாம்' என்றேன்.

வேணு செட்டியார் குழந்தை மனம் கொண்டவர். என்னை மிகவும் நேசிப்பவர். அதனால் எனக்கு அவரி டம் உரிமையுடன் வாதாட முடிந்தது. கடைசியில் ஒருவழியாகச் சம்மதித்தார். ரஜினியிடம் விஷயத்தைச் சொன்னேன். என் வித்தியாசமான திரைக்கதையை அவரிடம் விவரித்தேன். அவருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அந்த மகிழ்ச்சியைப் படப்பிடிப்பில் காட்டினார். உணர்ச்சிகரமான பல காட்சிகளில் அவருக்கு வசனமே இருக்காது.

அந்தக் காட்சிகளில் பேச்சில் வெளிப்படுத்த முடியாத, கடினமான உணர்வுகளை எல்லாம் தன் முகத்தில் இயல்பாகவும் நேர்த்தியாகவும் அமைதியாகவும் வெளிப்படுத்தினார் ரஜினி.

அவரது யதார்த்தமான நடிப்பைச் சார்ந்துதானே மற்றவர்களும் நடித்தாக வேண்டும். அதைத் திறமையாகச் செய்தார்கள் சரத்பாபுவும், மறைந்த நடிகைகள் ஷோபாவும், படாபட் ஜெயலட்சுமியும் மற்றவர்களும். இந்தப் புதிய முயற்சியில் எங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் ஒளிப்பதிவாளர் பாலுமகேந்திராவும், இசையமைப்பாளர் இளையராஜாவும்.

'முள்ளும் மலரும்' படப்பிடிப்பு முடிவடைந்தது. ஆனால் முழுப் படத்துக்கும் ஆதாரமான மிக முக்கிய மானதொரு சிறிய காட்சி மட்டும் எடுக்கப்படாமல் இருந்தது. யாருடனோ தனக்கு இருந்த கோபத்தில் அந்தக் காட்சியை எடுப்பதற்குத் தயாரிப்பாளர் வேணு செட்டியார் மறுத்துவிட்டார். நான் தவித்துப் போனேன்.

என் தவிப்பை கமல்ஹாசன் கேள்விப்பட்டார். செட்டியாரிடம் ஓடினார். 'இது மிகச் சிறந்த படமாக வரப்போகிறது. இந்தப் படத்தின் மூலம் பலருக்கும் பெரிய எதிர்காலம் காத்திருக்கிறது' என்றெல்லாம் வாதாடிப்பார்த்தார். வேணு செட்டியார் ஏற்கவில்லை. 'சரி, என் சொந்தச் செலவில் அந்தக் காட்சியை எடுப்பதற்காவது அனுமதியுங்கள்' என்றார் கமல். 'அது உன் இஷ்டம்' என்று சொல்லி விட்டார் செட்டியார். அதன்படி, கமல் உதவியால் அந்தக் காட்சி எடுக்கப்பட்டது.

அன்று கமல் செய்த உதவியை நானோ ரஜினியோ எக்காலத்திலும் மறக்கமுடியாது. அந்த காட்சி, சரத்பாபு ஜீப்பில் அமர்ந்தபடி பாடும் 'செந்தாழம்பூவில் வந்தாடும் தென்றல்...' பாடல் காட்சிதான்.

அதுவரை தன் பாடல்களால் பிரபலமடைந்திருந்த இளையராஜா, வசனம் மிகக் குறைவான இந்தப் படத்திற்குத் தன் அபாரமான ஆற்றலால் மிகச் சிறப்பாகப் பின்னணி இசை அமைத்தார்.

படம் ரிலீஸ் ஆயிற்று.

முதல் இரண்டு வாரங்கள் சென்னை தியேட்டர்களில் 'முள்ளும் மலரும்' பார்த்து விட்டுச் செல்கிறவர்கள் மௌனமாகச் செல் கிறார்கள். படம் பற்றிய அபிப்பிராயத்தை யாரும் சொல்லவில்லை.

ரஜினியின் ராயப்பேட்டை வீட்டுக்கு வந்த வேணு செட்டியார் 'படம் அவ்வளவுதான்' என்று கைவிரிக்கிறார். எங்களுக்குப் பதற்றம். ரஜினி 'சார், படத்துக்கு இன்னும் நல்லா விளம்பரம் பண்ணுங்கள். படம் நன்றாகப் போகும்' என்றார். தயாரிப்பாளரோ, 'ஓடுகிற படத்துக்கு எப்படி விளம்பரம் தேவையில்லையோ, அதுபோல ஓடாத படத்துக்கும் விளம்பரம் தேவையில்லை' என்று சொல்லிவிட்டுப் போகிறார்.

ஆனால், மூன்றாவது வாரம்... 'முள்ளும் மலரும்', மிகப் பெரிய வெற்றிப்படம் என்று நிரூபண மாயிற்று.

பத்திரிகைகளில் படத்தைப் பற்றிய பெருமைக்குரிய விமர்சனங்கள் வெளியாகின. 'சினிமா என்பது ஒரு visual medium என நிரூபித்த முதல் தமிழ்ப்படம்' என்று பாராட்டினார்கள். தமிழ்நாட்டின் எல்லா சென்டர் களிலும் 'முள்ளும் மலரும்' வெற்றிகரமாக ஓடுகிறது என்று தெரிந்தபிறகே எனக்கும் ரஜினிக்கும் மனம் நிறைந்தது.

பிறகு, நான் 'உதிரிப்பூக்கள்' பக்கம் கவனத்தைத் திருப்பினேன். ரஜினியோ பல உயரங்களை நோக்கிப் பயணிக்கத் தொடங்கினார். பிறகு, 'முள்ளும் மலரும்' 100-வது நாள் விழாவில்தான் சந்தித்தோம்.

ரஜினியுடனான தன் நினைவுகளை இந்த இதழிலும் பகிர்ந்து கொள்கிறார் டைரக்டர் மகேந்திரன்...

" 'முள்ளும் மலரும்' படத்துக்குப் பிறகு 'ஜானி' படத்தில் நாங்கள் இணைந்து பணியாற்றினோம். அது குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட படம். பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. 'ஜானி'யில் அவருக்கு இரட்டை வேடம் என்றாலும், வணிகக் கண்ணோட் டத்தோடு செயற்கையான காட்சி அமைப்புகள் இல்லாமல், உணர்வுப்பூர்வமான ஒரு கதை... யதார்த்த அழகோடு உருவாக்கப்பட்ட படம். என்னோடும் மற்றவர்களோடும் அவர் குதூகலமாகப் பேசுவதெல்லாம் படப்பிடிப்பு முடிந்த பிறகுதான்.

ஒரு நாள் இரவு, ஜானி என்கிற ரஜினியிடம் பாடகி அர்ச்சனாவாக நடிக்கும் ஸ்ரீதேவி, தன் திருமண விருப்பத்தைச் சொல்லும் காட்சியைப் படமாக்கினேன். இருவரின் அழகான நடிப்புக்கும் உதாரணமாக அமைந்த காட்சிகளில் அதுவும் ஒன்று.

நள்ளிரவு தாண்டி அந்தக் காட்சியை எடுத்து முடித்ததும் நானும் ரஜினியும் ஹோட்டல் அறைக்குத் திரும்பினோம். சாப்பிட்ட பிறகும் ரஜினிக்குத் தூக்கம் வரவில்லை.

'சார், ஸ்ரீதேவி அற்புதமா நடிச்சு அசத்திட்டாங்க. நானும் அவங்களோட போட்டி போட்டுத்தான் நடிச்சேன். ஆனா அவங்க நடிப்புக்கு முன்னாலே நான் தோத்துட்டேன்' என்றார் திரும்பத் திரும்ப.

நான் சொன்னேன்... 'அர்ச்சனா என்கிற கேரக்டரிடம் ஜானி என்பவன்தான் பதில்பேச முடியாமல் திணறி னான். கடைசியில் அர்ச்சனாவைத் திருமணம் செய்ய ஒப்புக்கொள்கிறான். அர்ச்சனாவின் பரிசுத்தமான கண்ணீரைக் காணப் பொறுக்காமல் அந்த ஜானிதான் தோற்றான். ஆனால், ரஜினி என்ற நடிகர் ஜெயித்துவிட்டார். நீங்கள் மிக யதார்த்தமாக இயல்பாக நடித்தது, ஸ்ரீதேவியும் அதற்கேற்றபடி நடித்தது இரண்டும் சேர்ந்து அந்தக் காட்சியை ஜெயிக்கவைத்துவிட்டன' என்றேன். ஆனாலும் அவர் சமாதானமாகவில்லை.

எங்கே இருந்தாலும் நான் படித்த மிகச்சிறந்த தமிழ் நாவல்களை அவருக்கு நண்பர்கள் மூலமாகக் கொடுத்தனுப்புவேன். சிறந்த தமிழ் இலக்கியங்கள் படிப்பதில் அவருக்கு எப்போதும் அதீத ஆர்வம் உண்டு. நல்ல புத்தகத்தையோ சினிமாவையோ பார்த்துவிட்டால் ஆர்வத்துடன் ரஜினி யிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வரும்.

அப்படித்தான் ஒருநாள் அழைப்பு வந்தது... அவரது போயஸ் கார்டன் வீட்டில் சந்திதோம்.

ரஜினி என்னிடம், 'சார்.. நடிகர் புட்டண்ணாவின் 'கதா சங்கமம்' என்ற கன்னடப் படம் மூன்று சிறுகதைகளைக் கொண்டு எடுக்கப்பட்ட படம். அதில் 'முனித்தாய்' என்ற கதையில் திருமணமான குருட்டுப் பெண்ணை பலாத்காரம் செய்யும் வில்லனாக நான் நடித்திருக்கிறேன். அந்தக் கதையை முழுநீளத் திரைப் படத்துக்கான கதையாக மாற்றித் திரைக்கதை எழுதி, நீங்கள் டைரக்ட் பண்ண வேண்டும்' என்றார்.

நானும் தயாரிப்பாளரும் பெங்களூருவுக்குப் போய் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு சென்னை திரும்பினோம். நான் ரஜினியைச் சந்தித்து, 'அந்தக் கன்னடப் படத்தின் கதையில் வருவதுபோல திருமணமான ஒரு குருட்டுப் பெண் பலாத்காரப்படுத்தப்படுவது தமிழுக்கான திரைக்கதையில் இருக்கவே கூடாது. அதற்கு மாற்றாக வேறு புதிய திருப்பத்தைத் திரைக்கதையில் கொண்டு வருகிறேன். அத்துடன் தமிழில் உங்கள் மனைவியாக வரப்போகிறவள் அந்தக் குருட்டுப் பெண்' என்றேன்.

'உங்கள் விருப்பப்படி எந்த மாற்றம் செய்தாலும் எனக்குச் சம்மதம்தான்' என்றார் ரஜினி.

அந்தப் படம்தான் 'கை கொடுக்கும் கை.' படப்பிடிப்புக்கு முன்பே படத்துக்கான முழுத் திரைக்கதையும், வசனத்தையும் நான் எழுதிய முதல் படம் இதுதான். புதிய திரைக்கதையில் குருட்டுப் பெண் (ரேவதி) பலாத்காரம் செய்யப் படுவது கிடையாது.

ஆனால் இறுதியில் ஒரு விபத்தில் அவள் இறந்துவிடுவாள். மனைவியின் மரணத்தை ரஜினி எப்படி எதிர்கொள்கிறார் என்ற மாறுபட்ட க்ளைமாக்ஸ் காட்சியை அமைத்திருந்தேன்.

சென்னைக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் படப்பிடிப்பு தொடங் கியது... படப்பிடிப்பு ஏறக்குறைய முடிவடையும் தறுவாயில், இந்திப் படம் ஒன்றில் நடிப்பதற்காக ரஜினி மும்பை சென்றுவிட்டார். அவர் இல்லாத மற்ற காட்சிகளை அந்தச் சிற்றூரில் படமாக்கிக் கொண்டிருந்தேன். அப்போது என்னிடம் வந்த 'கை கொடுக்கும் கை'படத்தின் தயாரிப்பாளர், 'மும்பையிலிருந்து ரஜினி போன் பண்ணிச் சொன்னார். ஒரிஜினல் கன்னடப் படம் மாதிரி தமிழிலும் குருட்டுப் பெண் கதாபாத்திரம் பலாத்காரம் செய்யப்படுவது இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்' என்றார். எனக்கு அதிர்ச்சி. என் யூனிட் ஆட்களுக்குப் பேரதிர்ச்சி. 'ரஜினி ஒருபோதும் அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டார். ஏற்கெனவே தமிழுக்கான திரைக்கதையில்

பலாத்காரக் காட்சி இருக்கக்கூடாது என்று அவரிடம் பேசிய பிறகே திரைக்கதையை எழுதினேன். அதை உங்கள் எல்லோருக்கும் படித்துக் காட்டினேன். இப்போது ரஜினி சொன்னார் என்று நீங்கள் சொல்வதை என்னால் நம்பவே முடியாது' என்றேன்.

'இல்லை... இந்தப் படத்துக்கு ஃபைனான்ஸ் பண்றவரும் பலாத்கார ஸீன் வேண்டும் என்கிறார்' என்று அடுத்த அஸ்திரத்தை வீசினார் தயாரிப்பாளர்.

'திரை உலகில் சூப்பர் ஸ்டாராக மக்களிடம் உயர்ந்துள்ள ரஜினியின் படத்தில், அவரது குருட்டு மனைவியை வில்லன் பலாத்காரம் செய்வான் என்ற அபத்தத்தை மக்கள் ஜீரணிப்பார்களா? பணம்போட்டு படம் எடுத்து லாபம் பார்க்க நினைக்கும் ஒரு ஃபைனான்ஸியர் இப்படி நஷ்டம் தரக்கூடிய அபத்த மான நிபந்தனையை ஏன் போடுகிறார்?' என்று நான் வாதாடினேன். அன்று ஷூட்டிங் எடுப்பதற்குத் தடை யாக எங்கள் வாக்குவாதம் நீண்டது.

இப்போது எனக்கு விளங்கிவிட்டது. இந்த மாதிரி ஒரு கருத்தை நிச்சயமாக ரஜினியும் சொல்லியிருக்க மாட்டார். அறிவுள்ள ஒரு ஃபைனான்ஸியரும் சொல்லி இருக்க முடியாது. 'மகேந்திரன் இயக்கத்தில் வெளியான ரஜினியின் படம் படுதோல்வி அடைந்தது' என்று பேசப் படவேண்டும் என்பதற்காக, விபரீத குணம் கொண்ட யாரோ மறைந்திருந்து தயாரிப்பாளரை ஏவிவிடுகிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

இப்போது, 'ரஜினிதான் இப்படிச் சொன்னாரா என்று தெரிந்து கொள்ள படப்பிடிப்பை உடனே நான் நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தினால், படப்பிடிப்பு நின்று போனதற்கு என்மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை ரஜினிக்குத் தெரிவிக்க தயாரிப்பாளரால் முடியும். திரை உலகில் பெரும் சர்ச்சை ஏற்படும். கடைசியில் நல்ல மனம்கொண்ட ரஜினிக்கே அது அவப்பெயரைக் கொடுத்துவிடலாம்' - இப்படியெல் லாம் நினைத்து, நான் அமைதியாகப் படப்பிடிப்பைத் தொடர்ந்தேன். அதற்கு முன் தயாரிப்பாளரிடம் நான் சொன்னது இதுதான்-

'இந்தப் படம் மிகப் பெரிய தோல்விப் படமாக அமையும். இந்தப் படத்தின் தோல்வியிலிருந்து மீள நீண்டகாலம் பிடிக்கும்.'

படப்பிடிப்பு முடிந்தது. சென்னை திரும்பிய ரஜினியிடம் எனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தைச் சொன் னேன். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ரஜினி,

'அப்படி தயாரிப்பாளரிடம் நான் சொல்லவே இல்லை' என்றார். ஆனால், அதையே ஒரு பெரிய பிரச்னையாக்காமல் விட்டதற்காக என்னைப் பாராட்டினார். 'கை கொடுக்கும் கை' புரொஜக்ஷன் பார்த்துவிட்டு 'இந்தப் படம் நன்றாகப் போகாது' என்றேன். நான் சொன்னதைப் போலவே நடந்தது. படம் தோல்வி கண்டது.

'நமது வெற்றிகள் மூலம் நாம் எதையும் கற்றுக்கொள்ள முடியாது. ஆனால், தோல்விகள் நமக்குக் கற்றுத்தரும் பாடங்கள் ஏராளம் என்பதை எப்போதும் நம்புகிறவன் நான். தோல்விக்கான காரணமாக மற்றவர்களைச் சொல்லாமல், ஒரு படத்தின் தோல்விக்கு நானே காரணம் என்று ஒரு இயக்குநர் தைரியமாக வாக்கு மூலம் தரவேண்டும். தோல்வியைப் பாடமாக எடுத்துக்கொண்டு பக்குவப்படும் ஒரு இயக்குநர்தான் மிகச்சிறந்த வெற்றிகளைத் தரமுடியும்.

தமிழ்த்திரை உலகின் இளைய தலைமுறைக் கலை ஞர்கள் ரஜினியிடமிருந்து இன்னொரு குறிப்பிடத்தக்க சிறப்பையும் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். அவருடைய ஒரு படம் தோல்வி கண்டால் அந்தப் படத்தின் கதை, திரைக்கதை அமைப்பில் நிகழ்ந்துவிட்ட தவறை உணர்ந்து திருத்திக்கொண்டு, அடுத்ததாக மாபெரும் வெற்றிப் படத்தைக் கொடுப்பார். அத்தகைய மனப் பக்குவமும், மனோதிடமும், போராட்ட குணமும் என்றைக்கும் அவருக்கு உண்டு. அத்தகைய சிறப்புக் குணங்கள்தான் ரஜினி என்ற ஏகாந்த வீணையின் ஸ்வரக் கம்பிகள்!

- காட்சிகள் நிறைவடைந்தன.